# விவேக போதினி

“ எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.” — திருவள்ளுவர்.

தொகுதி 17 | இரக்தாக்ஷிஹூ கார்த்திகைமீ :: 1924-ம் ஹூ நவம்பர்மீ | பகுதி 2

## முருகன் வழிபாடு

### WORSHIP OF LORD MURUGA

குருதிபு லாலெலன்பு தோன ரம்புகள்
கிருமிகள் மாலம்பி சித மண்டிய
குடர்நிணம் ரோமங்கள் மூளை யெல்பன
பொதிகாயக்
குடிலிடை யோரைந்து வேட ரைம்புல
அடவியி லோடுந்து ராசை வஞ்சகர்
கொடியவர் மாபஞ்ச பாத கஞ்செய அதனாலே
சுருதிபு ராணங்க ளாக மம்பகர்
சரியைக்ரி யாஅண்டர் பூசை வந்தனை
துதியொடு நாடுந்தி யான மொன்றையு
முயலாதே
சுமடம தாய்வம்பு மால்கொ ளுந்திய
திமிரரொ டேபந்த மாய்வ ருந்திய
துரிசற ஆகந்த வீடு கண்டிட அருள்வாயே !
ஒருதனி வேல்கொண்டு நீள்க்ர வுஞ்சமும்
நிருதரு மாவுங்க லோல சிந்துவும்
உடைபட மோதுங்கு மார பங்கய கரவீரா !
உயர்தவர் மாவும்ப ரான அண்டர்கள்
அடிதொழு தேமன்ப ராவு தொண்டர்கள்
உளமதில் நாளுங்கு லாவி யின்புற
வுறைவோனே !
கருதிய ஆறங்க வேள்வி யந்தணர்
அரிகரி கோவிந்த கேச வென்திரு
கழல்தொழு சீரங்க ராச னன்புறு மருகோனே!
கமலனு மாகண்ட லாதி யண்டரு
மெமது பிரானென்று தாள்வ ணங்கிய
சகரிவனம் வாழ்சம்பு நாதர் தந்தருள்
பெருமானே !

(பொருள்.) நிகரற்றதாய் விளங்கும் வேலாயுதத்தைப் பிரயோகித்து, நீண்ட கிரௌஞ்ச மலையும், அசுரர்களும், (வேற்றுருவந் தாங்கிய சூரபதுமனுன) மாமாமும், (சூரபதுமன் ஒளிந்து கொள்வதற்கு இடங்கொடுத்த) கோஷிக்கும் சமுத்திரமும் உடைந்து அழியுமாறு போர்புரிந்த குமாரசுவாமியே! தாமரையை யொத்த கைகளை யுடைய வீரனே ! தவத்திற் சிறந்த முனிவர்கள் இதயத்திலும் பெருமை பொருந்திய வானுலகத்தில் வசிக்கும் தேவர்களுடைய இதயத்திலும், நினது பாதத் தாமரைகளைப் பூஜித்துப் பலகாலும் வணங்கும் தொண்டர்களது இதயத்திலும் எப்போதும் அன்புடன் வாசஞ்செய்து அவர்களை இன்பமடையச் செய்பவனே ! உயர்ந்தவைகளாகக் கருதப்படும் தொழில்களான ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் ஆறுதொழில்களை யுடையவர்களும் யாகஞ்செய்வதைத் தமது பிரதானக் கடமையாகக் கொண்டவருமான பிராமணர்கள், “ஹரி ஹரி ! கோவிந்தா ! கேசவா !” என்னும் திருநாமங்களைச்சொல்லிப் பாதத்தாமரைகள் இரண்டையும் வணங்கும் (ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருக்கும்) ஸ்ரீரங்கராஜன் நேசிக்கும் மருகோனே ! பிரமன், இந்திரன் முதலிய தேவர்களும் ‘ இவனே எங்கள் தலைவன்’ என்று பாதங்களில் வீழ்ந்து வணங்கும் நாயகனும், திருவானைக்கா என்னும் திருத்தலத்தில் ஜம்புகேசுவரர் என்னும் திருநாமம் பூண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் வானவர்க்கும் உலகத்தவர்க்கும் தந்தருளிய செல்வப் புதல்வனுமான பெரியோனே! இரத்தம், மாமிசம், எலும்பு, தோல், நரம்புகள், கிருமிகள், மலம் சீதம் இவை நிரம்பிய குடல், தசை, மயிர், மூளை இவைகள் திணித்து வைக்கப்பெற்றிருக்கும் தேகமாகிய சிறு குடிசையில் வசிப்பவர்களும், (இவ்வாழ்க்கை, செல்வம் என்னும் விசித்திரமான) காடுகளில் ஓடித் திரிபவர்களும், அதருமமான ஆசைகளும் வஞ்சகமும் நிறைந்துள்ள கொடியவர்களுமான ஐம்புலன்களாகிய ஐந்து வேடர்கள் மிகவும்

(இதன் தொடர்ச்சி 55-ம் பக்கம் பார்க்க.)

அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந் தவா அப் பிறப்பீனும் வித்து.

விவேக போதினி

தொ.17] இரக்தாக்ஷி ஸ்ரீ கார்த்திகை மீ [ப.2

# ✓பூர்வீக இந்தியாவில் வானசாஸ்திர ஞானம்

## ASTRONOMY IN ANCIENT INDIA

நவீன நாகரிகம் மிகுந்துள்ள இக்காலத்தில், நம் நாட்டின் பூர்வீகச் சிறப்பையும், பலவித கலைகள், சாஸ்திரங்கள் முதலிய விஷயமாயுள்ள ஞானப் பிரசாரத்தையும் பற்றிய ஆராய்ச்சி மிகச் சொற்பமே. பிரசங்காதிகளிலும், பத்திரிகைகளிலும், பரத நாட்டிலுள்ளோர் தேசாபிமானம் பாராட்டி, சுயராஜ்யாதிபத்தியத்திற்குரிய உரிமைகளை மேன்மேலும் தேடிக்கொள்ளல் அவசியமென வற்புறுத்திக் கூறுவது வழக்கமாயிருக்கிறது. தேசாபிமானத்திற்கு ஆதாரமாயுள்ள நம்நாட்டின் பூர்வீகச் சிறப்பைப் பற்றிய சரியான ஞானம் நமது சிறுவர் சிறுமிகளுக்குள் பரவுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடைபெறுவதாய்த் தோன்றவில்லை. இதைப் பற்றிக் கவனிப்பதோ பேசுவதோ கௌரவக் குறைவு என்று நினைக்கும் பிரபுக்களும் உத்தியோகஸ்தர்களும் பலர் உளர். அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னரே நமது பரத தேசத்தில் பரவிப் பிரசித்திபெற்றுள்ளவை என மேனாட்டாரும் ஒப்புக்கொண்டிருக்கும் நாகரிகாம்சங்கள் விஷயத்தில்கூட நம்மவர் சிலரின் அபிப்பிராயம் வெகு விந்தையானதே! பூர்வீகத்திலுள்ள நமது நாகரிகமும் மேன்மையும் பிறநாட்டாரிட மிருந்து நாம் கற்று அனுஷ்டித்து வந்தவை எனவே நம்பி, இது விஷயமாக ஆராய்ச்சி செய்வதில் உற்சாகமற்றவர்களாய் இருந்துவருகிறார்கள்.

இத்தகைய மனப்பாங்கு வெகுவாறு துக்கிக்கத்தக்கதா யிருப்பதுடன் நமது தேசாபிமானத்துக்கும் இகலோக சுகத்திற்கும், பரலோக நற்கதிக்கும் தகுதியற்றதாகும். நமக்கு நிஜமான தேசாபிமானமும், நமது பூர்வீகப் பெரியோர்களிடம் கௌரவபுத்தியும் இருந்தாலொழிய, கேவலம் ராஜாங்க விஷயமான எவ்விதக் கிளர்ச்சியும் பயன்படாது என்பது அதிசயோக்தியாகாது. இதனால், இக்காலத்திய ஸ்திதிக்கு ஏற்றவாறு நல்ல ஞானாம்சங்களை எங்கிருந்தும் கற்றுணர்ந்து நாம் உபயோகப் படுத்திக்கொள்ளாமல், கிணற்றுத் தவளைகள்போல், வெளி விஷயங்களைக் கவனியாமல், பூர்வீகச் சிறப்பையே மெச்சிக் களித்துக் கொண்டிருக்கும்படி கூறுவதாய் நினைக்கக்கூடாது.

இப்பிரபஞ்சத்தின் கண்ணுள்ள வஸ்துக்களைப் பற்றிக்கூறும் அநேக சாஸ்திரங்களுள் வான சாஸ்திர ஞானம் பலவாறு உயர்வுற்றது எனக்கூறலாம். இம்மண்ணுலகம்போன்ற லக்ஷக்கணக்கான உலகங்களைச் சிருஷ்டித்து ஒழுங்காக நடத்திவரும் சர்வேசுவரனது பெருமையையும், மனிதனது தாழ்மையையும், நன்கு விளக்கிக் காட்டக்கூடிய சாஸ்திரம் வான சாஸ்திரமே. இத்தகைய சாஸ்திர ஞானம் மிக்க நாகரிகம் வாய்ந்த ஜனங்களிடத்தே மிகுதியாய்க் காணப்படும். பூர்வம் நமது பரதநாட்டில் வானசாஸ்திரப் பிரசாரம் வளந்தோங்கி யிருந்ததாக மேனாட்டுப் பண்டிதர்கள் பலரும் ஒப்புக்கொண்டு, அதைப்பற்றி வெகுவாறு சிலாகித்துக் கூறியிருக்கிறார்கள். இவர்களது அத்தாட்சி பக்ஷபாதத்தால் ஏற்பட்டுள்ளதென்று சொல்வதற்கில்லை. சுமார் 1000, வருஷகாலமாக நம் நாட்டில் இவ்வித சாஸ்திரப் பிரசாரம் விருத்தியாகாம லிருந்து வந்திருக்கிறது. இதுவிஷயத்தில் பலவித அரசியல் சம்பந்தமான மாறுதல்களும், மற்றைய சந்தர்ப்பங்களும் காரணமாயிருந்ததாகக் கூறலாம்.

அரசியல் விஷயத்தில் ஜனங்களின் பாத்தியதைகளை விஸ்தாரப்படுத்துவதற்குரிய பலவிதப் பிரயத்தினங்கள் நடந்தேறிவரும் இக்காலத்தில் கூட வான சாஸ்திரம், பூகோள சாஸ்திரம், கணிதம், வைத்தியம் முதலியவற்

றில் நம்முன்னோர்கள் பாடுபட்டுக் கற்றறிந்து வெளியிட்டுள்ள நூல்களைப் படிப்பது அரிதா யிருக்கிறது. அப்படிப் படித்தாலும் அவை விஷயமான நமது மனப்பாங்கானது தேசாபி மானத்துக்கு ஏற்றதாய்க் காணப்படுகிற தில்லை. குறைந்த பக்ஷம் சுமார் 5000 வருஷங் களுக்கு முன்னரே பூகோள, ககோள விஷய மாய், தற்காலத்திலுள்ள தூரதிருஷ்டிக் கண் ணாடி முதலிய உபகாணங்களின்றியே, நம் முன்னோர்கள் கண்டுபிடித்துள்ள அரிய விஷ யங்களை ஆராய்ந்து பார்த்துக் களிக்கும் தன் மையே நம்மவர் அநேகரிடம் காணப்படுவ தில்லை என்பது வருந்தத்தக்க விஷயம்.

நமது பூர்வீகர்களிடமிருந்து அநேக நூற் றாண்டுகளுக்கு முன் அரேபியர்களும், கிரேக் கர்களும் அநேக வான சாஸ்திர தத்துவங் களைக் கற்றுணர்ந்து, விஸ்தாரப்படுத்தி யிருப்ப தாக மேனாட்டாரின் சாக்ஷியங்களைக்கொண்டே தெரியவருகிறது. இவர்களின் அபிப்பிராயங் களையும், புகழ்ச்சி வாசகங்களையும்பற்றி பின் னர் கூறுவோம்.

வான சாஸ்திர விஷயமான முக்கிய கிரந் தங்களும், நம் முன்னோர் அறிந்துள்ள பூகோள ககோள விஷயமான முக்கிய ஞானபாகங்க ளும் வெகு ஸ்தூலமாயாவது அறியத்தக்கவை.

வான சாஸ்திர மூலக் கிரந்தங்களுக்கு ஸம்ஸ் கிருதத்தில் ஸித்தாந்தங்கள் எனப் பெயர். இவ்வித ஸித்தாந்தங்கள் ஒன்பது உள; அவை யாவன :—

(1) பிரம்ம ஸித்தாந்தம்
(2) ஸூர்ய ஸித்தாந்தம்
(3) ஸோம ஸித்தாந்தம்
(4) பிருகஸ்பதி ஸித்தாந்தம்
(5) கர்க்ய ஸித்தாந்தம்
(6) நாரத ஸித்தாந்தம்
(7) பராசர ஸித்தாந்தம்
(8) புலஸ்திய ஸித்தாந்தம்
(9) வஸிஷ்ட ஸித்தாந்தம்

இவ்விதம் ஒன்பது ஸித்தாந்தங்கள் கூறப் பட்டிருப்பினும், பூர்வத்தில் பஞ்ச ஸித்தாந்தங் கள் எனச் சொல்லப்பட்ட ஐந்து வானசாஸ் திரக் கிரந்தங்கள் முக்கியமாய்ப் பழக்கத்தி லிருந்து வந்தவைகளாய்க் காணப்படுகின்றன. (1) பௌலிச ஸித்தாந்தம்; (2) ரோமக ஸித் தாந்தம்; (3) வஸிஷ்ட ஸித்தாந்தம்; (4) ஸௌர ஸித்தாந்தம்; (5) பைலவாஹ ஸித் தாந்தம்; இவற்றுள் மற்றைய ஸித்தாந்தங் களைப்பற்றிய தகவல் மிகவும் சொற்பமாகத் தான் இப்போது கிடைக்கக்கூடியதா யிருக் கிறது. ஸூர்ய ஸித்தாந்தமானது வெகுவாறு பிரசாரமடைந்துள்ள கிரந்தங்களுள் மிகவும் பிராசீனமானது. ஐரோப்பியர்களும் இக் கிரந்த விஷயங்களை நன்கறிந்து கொண்டாடி யிருக்கிறார்கள். இதற்குப் பிறகு பராசர ஸித் தாந்தம் பிரசித்திபெற்றுள்ளது.

பராசரரது கிரந்தத்திற் காணக்கூடிய கணித விஷயங்களையும் ஆராய்ச்சிகளையும் பார்த்தால் இவர் கிறிஸ்து பிறப்பதற்கு முன் (கி. மு.) 1391-ம் வருஷத்தில் இருந்திருக்க வேண்டு மென்று மிஸ்டர் டேவிஸ் (Mr. Davis) என் னும் வித்வான் கணக்கிட்டுக் கூறியிருக்கிறார். கௌன்டு ஜான்ஸ்ஜர்ன (Count Bjornst-jerna) என்னும் பாச்சாத்திய பண்டிதர் 'சால் டியர்' 'அரேபியர்' 'கிரேக்கர்' இவர்களுக்கு வெகு காலம் முன்னரே ஹிந்து வானசாஸ் திர வித்வான்கள், ஆகாயமாகிற தெய்வீகமான புஸ்தகத்தைப் படித்தறிந்துள்ளார்" என அபிப்பிராயப்பட்டிருக்கிறார்.

ஹௌடன் (Mr. Houghton) என்னும் வித் துவானும் "பராசரக் கிரந்தத்தில் சொல்லப் பட்ட விஷூ (Equinox) காலத்திலுள்ள மாறுதலைக் கணக்கிட்டுப் பார்த்தால், அநேக மாய் அவர், கிறிஸ்து பிறப்பதற்குப் பன்னி ரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் இருந்தி ருக்க வேண்டும்" என்று கூறுகிறார்.

பாராசருக்குப் பிறகு பிரசித்தி பெற் றுள்ள வான சாஸ்திர வித்துவான் ஆர்யபட் டர் என்பவர். இவர் ஜ்யோதிஷ சாஸ்திரத்தி லும் தேர்ந்தவரென மிகக் கியாதிபெற்றவர். ஒரு பம்பரம்போல் பூமி தன்னைத்தானே சுற்றுகிற தென்பதையும், சூரிய சந்திரக் கிர ஹணங்கள் எக்காரணத்தால் உண்டாகின் றன வென்பதையும் விஷூ, அயன காலங்கள் கிரமேண கொஞ்சம் கொஞ்சமாய் மாறக் கூடிய தென்பதையும் இவர்தான் நன்கறிந்து வெளியிட்டிருக்கிறார் என ஐரோப்பிய பண்டி தர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஆரியபட்டரது முக்கியக் கிரந்தங்கள் :—

(1) ஆரியபடீயம் (2) தச கீதிகம் (3) ஆர் யாஷ்ட சதம்.

ஆரியபட்டருக்குப் பிற்காலம் வெகுப் பிரசித்தியடைந்துள்ளவர் வராஹ மிஹிரர் என்பவர். இவர் ஜோதிஷத்தில் வெகுப் பிரவீணர். இவரது கிரந்தங்கள் :—

(1) பிருஹத் ஜாதகம் (2) பிருஹத் ஸம்ஹிதை (3) எற்கனவேயுள்ள பஞ்ச சித்தாந்தங்களின் சுருக்கம். இவற்றுள் பிருஹத் ஸம்ஹிதையைப்பற்றி ஐரோப்பிய வித்துவான்களும் சிலாகித்துக் கூறியுள்ளார்.

மானிங் (Mrs. Manning) எனும் பண்டிதை, "இக்கிரந்தத்திற் காணப்படும் ஒவ்வொரு விஷயத்தையும் பற்றிய ஆழ்ந்த விவரணமே இதன் கௌரவத்துக்கு முக்கிய காரணம். இதின் ஸ்வாரஸ்யத்தை அரேபியாதேசத்து ஜோதிஷ வித்வானான அல்பேருனி (Alberuni) என்பவர் அறிந்து சிலாகித்திருப்பது போல் நாமும் புகழவேண்டியதே; ஏனென்றால் இது முக்கியமாய் ஜோதிஷத்தைப் பற்றிய கிரந்தமாயினும், பூகோளம், ககோளம், சிற்ப சாஸ்திரம், சித்திரவித்தை முதலியவைகளைப் பற்றி இதில் காணப்படும் தகவல்கள் மிக அருமையானவை. இதுகாறும் பிரசுரமாயுள்ள கிரந்தங்களில் கூறப்பட்டுள்ளதைக் காட்டிலும் மேன்மையானவை" என்று மெச்சியிருக்கிறாள்.

ஹிந்து வானசாஸ்திரத்தில் கடைசியாகப் பெயர் பெற்று விளங்கினவர் பாஸ்கராசாரியர் என்பவர். இவர் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் (12th Century A. D.,) இருந்ததாக ஐரோப்பியர்களின் அபிப்பிராயம். இவர் பூமியின் ஆகர்ஷண சக்தியைப்பற்றி (பூமி தன் மீதுள்ள ஒவ்வொரு வஸ்துவையும் தனது மத்தியத்தை நோக்கி இழுக்கும் சக்தி) நன்கு விவரித்துக் கூறியிருக்கிறார்; இவரது கணித கிரந்தங்களின் மகிமையால், உலகிலுள்ள கணித வித்வான்களுள் இவரே முதன்மையில் கூறத்தக்கவர் என்பது நன்கு விளங்கும்.

அநேக ஐரோப்பிய ஜாதியார் உண்டாவதற்கு முந்தியும், மற்றையவர் அஞ்ஞானத்தில் ஆழ்ந்திருக்குங் காலத்திலும், சூரியன், சந்திரன், பூமி முதலிய கிரஹங்கள், இவற்றின் சலனம் முதலான விஷயங்களைக் குறித்து, நமது முன்னோர்கள் கண்டுபிடித்துள்ள அரிய தத்துவங்களைப்பற்றிப் பின்னர் எழுதுவோம்.

---

✓ காலஞ்சென்ற டாக்டர்

## எஸ். சுப்பிரமணிய ஐயர்

### LATE DR. S. SUBRAMANIA IYER

தென்னாடு, அஞ்ஞானமென்னும் இருளடர்ந்ததென அநியாயமாய்க் கருதப்பட்டு வருகின்றதாயினும் ஸமீபகாலத்தில், ஸர். டி. முத்துசாமி ஐயர், ஸர். வி. பாஷியமையங்கார், ஸர். S. சுப்பிரமணிய ஐயர் முதலிய நீதிபதிகளும், ராஜா ஸர். டி. மாதவராவ், ஸர். கே. சேஷாத்திரி ஐயர், ஸர். எ. சேஷைய சாஸ்திரியார் முதலிய ராஜதந்திரிகளும், எந்நாட்டாராலும் எக்காலத்திலும் போற்றத்தக்க வீரசிங்கங்களாகச் சிறப்புடன் விளங்கினரல்லரோ!

இவர்களுள், தம் உழைப்பினால் நுண்ணறிவும், ஆழ்ந்த பக்தியும், மனோ வலியும் வேதாந்தத்தில் ஆழ்ந்த அன்பும் ஒன்று சேர்ந்து, ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயரை இச்சென்னை இராஜதானிக்குப் பலரும் அங்கீகரித்த தலைவராக்கிற்று.

ஏனையோர் தாம் புகுந்த அவ்வவ் வழிகளில் விளங்கி நிற்க, ஸர் மணி ஐயரோ ஆசியற்றுறைகளில் மற்றை இராஜதானிகளைப்போல் அவ்வளவு பெருமைபெறாத இந்நாட்டில், நன்மைக்கும் பெருமைக்கும் காரணமாயுள்ள பலவகையான வல்லமைகளையும் குணங்களையும் போதிய அளவு தம்மிடம் ஒருசேரப்பெற்று விளங்கினர்.

ஒவ்வொருவரும் இவ்வுலகில் எங்ஙனம் ஒழுகவேண்டு மென்பதை விளக்கும்மாதிரியாக அவருடைய வாழ்க்கை இருந்தது.

நம்மில் ஒருசிலரே அவரைப்போன்று உயர்நிலையும் பெரும்புகழும் அதிர்ஷ்டமும் அடைதற்கு உரியோராயிருக்கின்றனர்; ஆயினும், ஐயரைப்போல ஒவ்வொருவனும் நீதியும், இரக்கம், தயை முதலிய நுட்ப குணங்களும், ஆயுளுள்ளளவும் படிப்பும், மதாபிமானமும் பெற்று ஒழுக்கம் என்னும் சொல்லால் அறிவிக்கக்கூடிய நற்குணங்கள் பல வாய்க்கப் பெற முயலுதற்கு எற்றவனாவான்.

இத்தகைய குணங்கள் எல்லாவற்றையும் ஒருங்குபெற்று விளங்கிய ஸ்ரீமான் மணி ஐயர் சரித்திரச் சுருக்கத்தை நம் நாட்டு இளை

தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது வா அய்மை வேண்ட வரும்.

ஞர் அறிந்து இன்புற்று ஒழுகுதற்கு ஈண்டுத் தருகின்றோம்.

நாடோறும் நிகழ்வனவற்றுட் சிறந்தவை எனப் பாராட்டப் பெறுவனவற்றை எழுதி வையாதிருத்தலும், உபாத்தியாயரைப் பற்றிய அபிப்பிராயத்தையும், ஒருசாலை மாணாக்கரைப்பற்றிய கருத்தையும், பால யௌவன கௌமார வார்த்திக பருவங்களில் ஞாபகத்தில் இருக்கக்கூடிய நிகழ்ச்சிகளையும், உத்தியோக முறையிலோ குடும்ப விஷயங்களிலோ அவ்வப்பொழுது நிகழும் நிகழ்ச்சிகளையும், மக்கட்டொகுதியிற் பேசும் உயர்ந்த கருத்தடங்கிய உபந்யாசங்களையும் ஒன்றாகத் திரட்டி வைத்திருத்தலும் நம் இந்தியர்க்கே இயல்பு அன்று; ஆதலான், நம் நாட்டுப் பெரியோர் சரித்திரம் எழுதுதற்கு வேண்டிய கருவிகள் கிடைப்பது அரிது; இஃது, இரக்கத்தக்கதன்றோ!

மிக்க கௌரவமும் உயர் குணங்களும் உடையோனாய் விளங்கிய இந்தியன் ஒருவன் சரித்திரம் எழுதுதலும் இக்காரணத்தால் கஷ்டமாகின்றது.

அன்பின் மிகுதியினால் தென்னாட்டார் மணி ஐயர் என அழைக்கப்பெற்று வந்த டாக்டர் S. சுப்பிரமணிய ஐயர், மதுரை ஜில்லாவில் கௌரவம் வாய்ந்த பிராமண குலத்தில் 1842-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தேதி பாரதநாட்டின் பண்டைப் பெரும்புகழை இன்றும் நிலைநிறுத்தத் தோன்றினார். இவர் தந்தை இராமநாதபுரம் ராஜாவிடத்தில் வக்கீலாகவிருந்த சூராவதி சுப்பையராவர்.

தமது இரண்டாம் வயதிலேயே தந்தையை இழந்தார் ஐயர். 'தந்தையொடு கல்விபோம்' என்பது முதுமொழியாயினும் இவர் முதலில் மதுரையிலுள்ள கிறிஸ்தவப் பாதிரிகளின் பள்ளிக்கூடத்திற் பத்து வயது வரையில் தமையனாரால் படிப்பிக்கப்பெற்று வந்தார். பின்னர், கிருஷ்ணசாமி செட்டியார் ஸ்தாபித்த பள்ளிக்கூடத்திற் சேர்ந்தார். 1856-ஆம் ஆண்டில் அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட ஜில்லா கல்விக் கழகத்திற் சேர்ந்து மதுரையிற் கல்வி பயின்றார். 'விளையும் பயிர் முளையிலே' என்றபடி இளமையிலேயே இவரிடம் அமைந்திருந்த நுண்ணறிவைக் கண்ட கழகத் தலைவராகிய மிஸ்டர் வில்லியம்ஸ் என்பவர் இவருக்கு உதவிச்சம்பளம் கொடுத்துதவினர். அம்மட்டில் இருந்துவிடாமல் அவர் ஐயரிடம் மிக்க அன்புகொண்டு ஆங்கில பாஷையின் நயங்களை நன்கு கற்பித்தார். மனிதப் பூண்டுக்கு, மலர் போன்ற மணி ஐயரைக் கல்வியாலும் ஒழுக்கத்தாலும் பரிமளமளிக்கச் செய்தவர் அவரே.

அக்காலத்தில் சர்வகலாசாலைப் பட்டப் பரீக்ஷைகள் (University Examinations) ஏற்பட்டில. அரசாங்கத்தார் பல்வேறிடங்களில் மாணாக்கரைப் பரீக்ஷித்துப், பரீக்ஷையில் தேறியவர்களின் பெயர்களைக் கெஜட்டில் (Fort Saint George Gazette) பிரசுரிப்பது வழக்கம். மணி ஐயர் அங்ஙனம் அரசாங்கத்தார் செய்த பரீக்ஷையில் தேர்ச்சி பெற்றனர். அவர் மேற்படிப்புக்காகச் சென்னைக்கு வருவதில் ஆவலுள்ளவரானார்; ஆனால் அவருடைய தமையனார் கலெக்டர் காரியாலயத்தில் வேலையாயிருந்தமையாலும் படிப்புக்காக இளைஞரைச் சென்னைக்கு அனுப்புதல் தக்கதன்று என அவர் உறவினர் பலரும் கருதினமையாலும் அவர் சென்னை போந்திலர்.

இவ்வாறு தம் மேற் படிப்புக்கு உண்டான இடையூற்றினால் மனங்கலங்கிய அவ்விளைஞர்க்கு ஒருவாறு தேறுதல் உண்டாகும் வண்ணம், மதுரை கலெக்டர் அவரை வருவித்து டிப்டி கலெக்டர் காரியாலயத்தில் 20 ரூபா சம்பளமுள்ள குமஸ்தாவேலை யொன்றைக் கொடுத்தார்.

அப்பொழுது டிப்டி கலெக்டராக மதுரையிலிருந்த ஸ்ரீமான் ராமராவ் என்னும் பெரியார், இளைஞர்க்கு இயற்கையாக அமைந்திருக்கக்கூடும் குணம் முதலியவற்றைக் காட்டிலும் மிக்கிருந்த நாநயத்தையும் நாணயத்தையும் விசால நோக்கத்தையும் நற்குணங்களையும் நிர்வாக சக்தியையும் அவரிடம் கண்டு ஆச்சரியமடைந்து தம்முடன் இருக்கும்படி வேண்டினர்; அப்பெரியாரிடம் தமக்குள்ள மரியாதையால் அவர் விருப்பத்தை மறுத்தற்கு அஞ்சி, மணி ஐயர் அவருடன் சென்று இராமநாதபுரத்திற் சிலகாலம் தங்கினர்.

'இங்கிருப்பின் நமது நோக்கம் நிறைவேறாது' என்று எண்ணினமையாலோ வேறு எக்காரணம் பற்றியோ ஸ்ரீமான் ஐயர், மறுபடி மதுரை வந்து கலெக்டர் காரியாலயத்

தில் குமாஸ்தா வேலையை ஒப்புக் கொண்டார்.

கிடைத்த வேலையை ஒழுங்காகவும் திருத்தமாகவும் செய்துவந்ததோடு ஓழிவுள்ள வேளைகளில் மணி ஐயர், சட்ட நூல்களைப் படித்து ஜில்லா கோர்ட் வக்கீல் (Pleadership Examination) பரிக்ஷையில் முதல் வகுப்பில் தேறினார். பின்னர் அக்கால வழக்கின்படி ஜில்லா நீதிபதியிடம் சன்னதுபெறச் சென்றார். அப்பொழுது மதுரைஜில்லா நீதிபதியாக இருந்த மிஸ்டர் R. R. காட்டன் என்பவர் மிக்க செருக்குள்ளவர் எனக் கருதப்பட்டு வந்ததற்கேற்ப, இம்மாணவரை நோக்கி 'நீர் எமக்கு முன் குனிந்து ஸலாம் செய்யாத குற்றத்தைச் செய்திருக்கிறீர்; ஆதலால் உமக்குச் சன்னது கொடேன்' என மறுத்தார். இது விநோதமே! வீரபுருஷர், தமது கம்பீரமான குணத்தையும் சுதந்தரத்தையும் சிறிதும் விட்டுக் கொடாரன்றோ? நியாயாதிபதி மறுத்தமையால் மனந்திடுக்கிட்டு 'இதுவும் தீவினைப் பயனே' எனத் தம்மைத் தாமே நொந்து கொண்டு எதிர்பாராத இந்நிகழ்ச்சியால் அவர் திரும்பவும் குமாஸ்தாவாக இருக்கவேண்டி நேர்ந்தது.

கொடிப்பொழுதையும் நற்பயன் தரத்தக்க வேலைகளிற் கழிக்கும் இயல்புள்ள மணி ஐயர் அதிலிருந்து கொண்டே கிரிமினல் சட்டப் பரிக்ஷையில்(Criminal Judicial Test) தேறினார்; தேறினவுடன் ஐயரிடம் மிக்க மதிப்பு வைத்திருந்த ஜில்லா கலெக்டர், பப்ளிக் பிராஸிகூடராக (Public Prosecutor) அவரை நியமித்தார். ஆயினும் பழைய காட்டன் துரையிடம் அடிக்கடி பழகவேண்டி நேர்ந்தமை புதிய உத்தியோகத்தினால் அவருக்கு உண்டாகிய சிறிது உவகையையும் குறைத்தது. நிரபராதியான அவரைப் பலவாறு அத்துரைமகனார் பிடித்து வந்தனரெனக்கூறுவர் அவருடன் பழகியோர். கருமமே கண்ணாயினார் கஷ்டங்களைப் பொருட்படுத்துவரோ!

இத்துன்பத்துக்கு ஆறுதலாக அவர் நீண்டகாலமாக பி. எல்., பரிக்ஷையில் தேர்ந்து உயர்தர நீதிமன்றத்து நியாயவாதியாக (High Court Vakil) வேண்டுமென்று தமக்குள்ளிருந்த எண்ணத்தை நிறைவேற்றக் கருதினார்; நல்லோர்க்கு நேரும் தீமைகள், உலகத்துக்குப் பேருபகாரம் பயப்பனவல்லவோ?

அப்பொழுது சர்வ கலாசாலைப் பரிக்ஷைகள் ஏற்பட்டுவிட்டன. மணி ஐயர் 1864-ஆம் ஆண்டில் மெட்ரிக்குலேஷன் பரிக்ஷையிலும், 1865-ஆம் ஆண்டில் எப். ஏ., பரிக்ஷையிலும் தேறினார். அவர் தம் ஊக்கத்தைக் கைவிடாது முயல 1868 ஆம் ஆண்டில் பி. எல்., பரிக்ஷையைப் பூர்த்திசெய்தனர். தம் கருத்து நிறைவேறியதற்கு மகிழ்ந்த ஐயர், சென்னை உயர்தர நீதி மன்றத்தில் (High Court) அரசாங்க ரிபோர்ட்டராய் (Official Reporter of the High Court) விளங்கிய பாரிஸ்டர் ஜே. ஸி. மில்ஸ் என்பவரிடம் உமேதவாரியாக (Apprentice) அமர்ந்து வக்கீல் தொழிலிற் பயின்றார்.

அக்காலத்தில் அவர் தமையனார் மதுரையில் சிரஸ்தேதாராக இருந்தமையால் தம்பி தம்மைவிட்டுப் போகாமலிருக்கக் கருதி மதுரையில் தாசில் உத்தியோகம் செய்து வைத்தார். பிறர்க்கு அடங்கி ஊழியஞ்செய்வதை மணி ஐயர் வெறுத்தவராயினும் 'மூத்தோர் சொல் வார்த்தை யமிர்தம்' என்று எண்ணித் தம் தமையனாரைத் திருப்தி செய்யும் பொருட்டு ஆறுமாதகாலம் அவ்வேலையைப் பார்த்தார். விதிவழியே மதி செல்லுமன்றோ!

அத்தகைய தொழிலுக்கு வேண்டிய திறமை நிர்வாக சக்திகளினும் பன்மடங்கு மிக்கிருந்தமையின், சிறிதும் ஊக்கத்தைச் செய்யாத அத்தொழில் அவருக்குக் கொஞ்சமும் விருப்பத்தைத் தந்திலது; ஆயின் வெறுப்பைத் தந்ததென்னலாம்.

பின்னர், சென்னை வந்து உயர்தர நியாயத்தல நியாயவாதியாகப் (High Court Vakil) பதிவு செய்து கொண்டார். இங்கு, வக்கீல் தொழிலைத் தொடங்கத் தமக்கு விருப்பமிருந்தும், தம் தமையனாரை விட்டுப் பிரிய மனம் இல்லாதவராய் மதுரையில் தம் தொழிலைத் தொடங்கினார். வக்கீலாக நியாயத்தலத்திற் புகுந்த நாள் முதல், பேசுந் திறமைவாய்ந்தவரெனவும் நுண்ணறிவுடைய நியாயவாதியெனவும் பலராலும் அங்கீகரிக்கப்பட்டு வந்தார். அது முதலே பூமகள் அவரைத் தன் கருணை

யாற் களிப்பித்து வந்தாள்; அதனால், அவர் புவிமகளைக் களிக்கச் செய்தனர்.

அவர் அறிவின் விலாசமும் யோக்கியப் பொறுப்பும் பெரிய வழக்குக்களில் வாதிட்டு வெற்றி பெற்றமையும் அவர் நற்பெயரையும் கீர்த்தியையும் பாவச் செய்தன. இவற்றை யெல்லாம் நேரிற்கண்ட மதுரை ஜில்லா நீதிபதி யாகிய ஸர் பிலிப் ஹட்சின்ஸ் மிக்க கௌரவம் வைத்து அவரைப் பாராட்டி வந்தார்.

அவரிடம் மதிப்பு வைத்த அரசாங்கத்தாரால் 1870-ஆம் ஆண்டில் மதுரை நகரபரிபாலன சபை அங்கத்தினராகவும் (Municipal Councillor) ஜில்லாபோர்டு அங்கத்தினராகவும் (Member of the Local Board) நியமனம் பெற்றனர். பத்தாண்டுகள் அப்பதவிகளை வகித்து, குடிகளுக்குப் பல ஊழியங்களைச் செய்து அவர்கள் அன்பைப்பெற்றனர்.

அவர் செய்த நன்மைகள் பலவற்றுள், மதுரை நகர் நடுவில், பதினெட்டாயிர ரூபாய் செலவில் நகரின் இதயமெனக் கருதப்படும் நந்தவனம் (Park) ஒன்று ஏற்படுத்தியதும், மீனாட்சியம்மை கோயிலைச் சுற்றிப் புஷ்பத் தோட்டம் போடப்பட்டதும், வையையாற்றில் 14,000 ரூபா செலவில் பாலம் கட்டியதுமே சிறந்தனவாம்.

தேவஸ்தான கமிடியார் மதுரைக் கோயில் பணத்தில் 40,000 ரூபாய் கணக்கின்றிக் கையாண் டிருப்பதைக் கேட்டு உண்மையறிந்து அவர்கள்மேல் 1873-ஆம் ஆண்டில் வழக்குத் தொடர்ந்தார். குற்றமும் உண்மையென விளங்கிற்று. பணம் நியாயஸ்தலத்தாரால் வசூலிக்கப்பெற்றது. அவர் தேவஸ்தான விஷயத்திற் பெரிதும் ஊக்கங்கொண்டிருத்தலை மதுரை வாசிகள் அறிந்து அவரைத் தேவஸ்தான கமிடி மெம்பாராகத் தேர்ந்தெடுத்தனர்.

1875-ஆம் ஆண்டில் எட்வர்ட் சக்கரவர்த்தி, இளவாசர் என்ற முறையில் மதுரைக்கு விஜயம் செய்தபோது மதுரை நகரவாசிகளின் சார்பாக அவரை வரவேற்று உபசாரப்பத்திரம் ஒன்று வாசித்துக்கொடுத்தவர் இவரே.

ஸ்ரீமான் ஐயர் செய்துவரும் பொதுஜன சேவையை யறிந்து பாராட்டிய அரசாங்கத்தார், 1877-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதி கவர்னர் ஜெனரலாகிய லார்டு லிட்டன் டில்லி நகரில் நடத்திய தர்பாரின்போது அவருக்குச் சன்மானபத்திரம் ஒன்று கொடுத்தனர்.

1880-ஆம் ஆண்டில் அவர் நகர பரிபாலன சபை உபவக்கிராசனாதிபதியாக நியமனம் பெற்றார்.

இக்காலத்தில் ஸ்ரீமான் ஐயரிடம் மிக்க கௌரவம் வைத்திருந்த முற்கூறிய பிலிப் ஹட்சின்ஸ் சென்னை உயர்தர நீதிமன்றத்து நீதிபதியாயினர்; பின்னர், சில நாளைக்குள் அவர், அரச ஆலோசனை சபை அங்கத்தவருள் (Executive Council of the Government of Madras) ஒருவராக நியமனம் பெற்றார். அவர் சமயம் வாய்த்த பொழுதில் மணி ஐயரின் சிறப்பை மாகாணத் தலைவராகிய ஸர் எப் இ கிராண்டு டப்புக்கு எடுத்துக் கூறிவந்தனர்.

சென்னை மாகாணத் தலைவர் 1884-ஆம் ஆண்டில் மதுரைக்கு விஜயம் செய்தார்; அப்பொழுது நகர பரிபாலன சபை அங்கத்தினர் சார்பாக நம் ஐயரே அவரை வரவேற்றார்.

மணி ஐயரிடம் பிலிப் ஹட்சின்ஸ் கூறியதைப்போல இயல்பாகவே அமைந்திருந்த கம்பீரத் தோற்றத்தையும் சொல்வன்மையையும் நற்குண நற்செயல்களையும் நேரிற் கண்டனர் கவர்னர்; பின்பு அவர் சட்ட சபையில் (Legislative Council) காலியாயிருந்த ஸ்ரீமான் கஜபதி ராவ் மகாராஜாவின் ஸ்தானத்தில் 1884-ஆம் ஆண்டில் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினராக (Non-Official Member) ஸ்ரீமான் மணி ஐயரை நியமித்தார். நியமனம் பெற்றது முதல், 'உத்தியோகம் பெறுதாருக்குப் பதிலாகப் பெயரளவில் நியமனம் பெற்றுவருவோரும் வல்லமை பொருந்தியவரே' என அரசாங்கத்தார் கருதும்படி நேர்ந்தது. அதுவரையில் அத்தகைய நியமனம், அரசாங்கத்தாரால் உயர்ந்த பட்டங்களைப் பெறவோ அவர்கள் நன்மதிப்பைப் பெறவோ ஓர் உபாயமாகக் கருதப்பட்டு வந்தது. உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினர்க்கு உரிமைகள் எனக் கூறத்தக்கன மிகக் குறைந்தனவே. தீர்மானங்களைக் கொண்டுவரும் உரிமையாவது கேள்வி கேட்கும் உரிமையாவது அப்பொழுது இல்லை. அத்தகைய அங்கத்தினரா யமர்வோரிற் பெரும்பாலோர் அரசாங்கத்தினர் கூறுவதற்கு

ஏற்பத் தலையசைத்துவருதல் தம் வேலை எனக் கருதினர். இப்படிப்பட்ட நிலையில் ஸ்ரீமான் மணி ஐயர், குடிகளின் குறைகளையும் உரிமைகளையும் கடமைகளையும் நன்கு அறிந்துகொண்டு சட்ட விரோதமில்லா முறையில் அவற்றைத் தீரத்துடன் அரசாங்கத்தார்க்கு எடுத்துக்கூறினர்; அரசாங்கத்தின் எண்ணங்களையும், துரைத்தன முறைகளையும் குடிகளிடைப் பரப்பினர். இங்ஙனம் செய்து தலையசைக்கும் பழைய வழக்கத்தை மாற்றிப் புதுவழக்கத்தை யுண்டாக்கினர் என்றலும் பொருந்தும். அரசாங்கத்தார், மணி ஐயரிடம் உயர் கௌரவமும் மதிப்பும் வைத்திருந்தும், குடிகள் தம்மிடம் கொண்டிருந்த அன்பையும் தாம் அவர்களுக்குச் செய்யும் உதவிகளையும் செய்யாது இழந்திலர்.

இந்நிலையில் 1886-ஆம் ஆண்டில் மலையாளக் குடிகளின் கஷ்டங்களைப் போக்கச் சட்ட சபையில் ஸ்ரீமான் மணி ஐயர் ஒரு மசோதாவைக் கொண்டுவந்தார். அஃது எல்லோராலும் ஆதரிக்கப்பெற்றுச் சட்டமாயிற்று.

அதன் பின் மணி ஐயர் சென்னையிலேயே இருந்துவந்தார்.

அக்காலத்தில் நியாயவாதிகள் என உலகத்தாராலும் சட்டநிபுணராலும் மதிக்கப்பெற்று, பிரசித்தியுடன் விளங்கிய மிஸ்டர் நார்ட்டன், வேட்டர்பேர்ன், ஸ்ரீமான் ஸர் V. பாஷியம் ஐயங்கார் முதலியோர் இருந்த இக்கும், தம் சட்ட ஞானத்தாலும், நுண்ணறிவாலும், விசால நோக்கத்தாலும், வாதிக்கும் திறமையாலும், பிறர் நலம் நாடும் குணத்தாலும் பொதுஜனங்களின் அன்பையும் ஆதரவையும் பெற்று விளங்கினார் ஸர் மணி ஐயர். கற்றுத் தெளிந்த இப்பெரியாரைச் சார்ந்து ஒழுகின் நமக்கும் அறிவுபெருகும் என்று ஜஸ்டிஸ் சுந்தரையரவர்களும், கனம் V. கிருஷ்ணசாமி ஐயர் முதலியோர் பலரும் நம் ஐயரைச் சார்ந்து ஒழுகினர்.

இந்து தர்மத்திற்கு ஏற்ற முறைவழாமல் இல்லறம் நடத்துதற்குரிய மதிமந்திரி போன்ற மனம் ஒத்த மனைவியிருப்பின் கணவன் கவலை நொடியில் அகலுமென்பர் அறிவுடையோர். அப்படிப்பட்ட குணம் அமைந்த தம் பின்னுயிர்த் துணைவியை 1882-ஆம் ஆண்டில் இழந்தார் ஐயர். எல்லா நலங்களிலும் இவருக்கு ஒரு சிறிது துன்பம் கலந்திருத்தல் வேண்டுமெனக் கருதியோ இத்துன்பத்தை விளைவித்தார் கடவுள்! மனைவியை இழந்த ஸ்ரீமான் ஐயர் மனம், மத ஆராய்ச்சியிற் றிரும்பிற்று. திரும்பவே, தியஸாபிகல் ஸொஸைடியின் ஸ்தாபகருள் ஒருவரான கர்னல் ஆல்காட் துரையைச் சந்தித்தார். அவருடன் அளவளாவியபின் அச்சங்க அங்கத்தினரானார்.

நம் ஐயர், நியாயவாதிகளுள் மணியாக விளங்குவதையும் வழக்குக்களைத் தெளிவாக வாதிக்கும் நுண்ணறிவையும் கண்ட அரசாங்கத்தார் 1888-ஆம் ஆண்டில் அரசாங்க நியாயவாதியாக (Government Pleader) நியமித்தனர். ஐயருக்குமுன் இப்பதவி இந்தியருக்குக் கொடுக்கப்பட்டதன்று. உயர்பொருள்கள் எங்குக் கிடைப்பினும் அவை அரசரைச் சேர்ந்தனவல்லவோ?

அந்தப் பதவியில் இருக்கும்பொழுது கும்பகோணம் நாகேசுவரையர், திருப்பதி மகந்து முதலியோர் விஷயமாக நடந்த பல அரிய வழக்குக்களைத் திறம்பட நடத்தி, பலருடைய மதிப்புக்கு உரியவரானார். அவர் எழாண்டுகள் அப் பதவியை வகித்தார்.

1877-ஆம் ஆண்டுமுதல் 1895-ஆம் ஆண்டுவரை ஸ்ரீமான் ஐயர் பொதுஜன சேவையில் ஈடுபட்டு உழைத்துவந்தார். ஜனப்பிரதிநிதிகள் தொகை மிகுதியாகவும் உத்தியோக அங்கத்தினர் தொகை குறையவும் இவர் பட்ட பாடுகள் எண்ணில. லார்டு ரிப்பன், ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தில் இந்தியருக்கு விசேஷ ஆதிக்கம் கொடுக்கவேண்டுமென்று பிறப்பித்த தீர்மானத்தின்மேல் அப்படிச் செய்யும் பொருட்டு என்னென்ன மாறுதல்கள் செய்யவேண்டுமென்று யோசனை சொல்ல 1885-ஆம் ஆண்டில் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது; அதில் நம் ஐயரும் ஒருவராக நியமனம் பெற்றார். கமிட்டி அங்கத்தினரிற் பெரும்பாலோர் எழுதிய யாதாஸ்தைக் கண்டித்து மறுப்புரை யொன்று எழுதி, 'நகரபரிபாலன சபைத் தலைவர் பதவியை வகிக்க இந்தியர் யோக்கியதையுடையவரல்லர்' என்று கமிட்டி யங்கத்தினர் எழுதியதைத் தக்க காரணங் காட்டிக் கண்டித்தார். இதனால் குடிமக்கள் பெரிதும் அவரைப் போற்றினர். இவருடைய செல்வாக்கும் அதிக

அவாவில்லார்க் கில்லாகுந் துன்ப மஃதுண்டேற் றவா அது மேன்மேல் வரும்.

மாயிற்று. அதிகாரிகளின் கருத்தை எதிர்த்துக் கூற எவரும் துணியாதிருந்த அக்காலத்தில் அப்படிச்செய்ய ஸ்ரீமான் ஐயர் பின்வாங்காதிருந்தமை தன்மதிப்பையும் தைரியத்தையும் நன்கு விளக்குகின்றது.

1885-ஆம் ஆண்டில் காங்கிரஸ் மஹாசபையை ஸ்தாபிக்க முயன்றவர்களுள், ஸ்ரீமான் ஐயரும் ஒருவர். பம்பாய் நகரில் நடைபெற்ற முதல் காங்கிரஸில், மாகாண சட்டசபைகளையும் இந்தியா சட்டசபையையும் சீர்திருத்தி விசாலிக்கச் செய்ய வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டுவந்து மிக அழகாகப் பேசி நிறைவேற்றினவர் இவரே. கல்கத்தாவில் நடந்த இரண்டாம் காங்கிரஸில் இந்தியாவின் வறுமை சம்பந்தமாகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார். உயர்தர நீதிபதியாவதற்கு முன்னரும் அவ்வுத்தியோக முடிவிற்குப் பின்னரும் காங்கிரஸ் மகாஸபையின் நோக்கங்களையும் அதன் கொள்கைகளையும் எங்கனும் பரப்பி வருவதில் தளரா ஊக்கத்துடன் உழைத்து வந்தார் அவர்.

காலஞ்சென்ற
டாக்டர் எஸ். சுப்பிரமணிய ஐயர்

1885-ஆம் ஆண்டில் சென்னைச் சர்வகலாசாலை அங்கத்தினராக நியமனம்பெற்று 1907 ஆம் ஆண்டுவரையில் அதனுடன் ஸம்பந்தப்பட்டிருந்தார்.

1896-ஆம் ஆண்டு ஸர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவின்போது இவர் செய்த உபந்நியாசம் இன்றும் பலருடைய செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அதில், சமய உண்மைகள் நிறைந்தனவாயும் பொருட்பொலிவும் அலங்கார அமைதியும், கேட்போர்ப்பிணித்தலும் பகைவரும் விரும்பும்படி மொழிந்திருத்தலும் கவனிக்கத்தக்கது!

பிறகு அவர் சர்வகலாசங்க உதவி சான்ஸலராக நியமிக்கப் பெற்றார்; முதன் முதலாக அப்பதவியைப் பெற்ற இந்தியர் இவரே! “ஆர்கலி ஞாலத் தறங்காவ லாற்சிறந்த, பேரருளி னார்க்குப் பெறலருமையாதரோ, ஊர்திரைய மாமகர வெள்ளத்து நாப்பணும், போர்மலைந்து வெல்லும் புகழ்” என்றாங்கு அருள் வள்ளலாகும் ஐயருக்கு எதுதான் அருமை?

ஸர்வகலாசாலைமூலமாகக் கல்வியபிவிருத்திக்கு அவர் செய்து வந்த ஊழியங்களை அரசாங்கத்தார் பெரிதும் மதித்து 1908-ம் ஆண்டு அவருக்கு டாக்டர் பட்டம் கொடுத்தனர்.

அவர், அரசாங்க நியாயவாதியாக இருந்த காலத்தில், ஸர். டி. முத்துஸாமி ஐயரவர்களுக்குப் பதிலாக உயர்தர நீதிபதி வேலையைச் சில சமயம் பார்த்து வந்தார்.

ஸ்ரீமான் மணி ஐயர், 1895-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் சென்னை உயர்தர நீதிபதியாக நியமனம் பெற்றார்; இவருக்கு முன் அப்பதவியை வகித்து, இந்திய மணியாக விளங்கிய ஸர். டி. முத்துசாமி ஐயருடைய பெயரும் புகழும் எங்கும் பரவி இருந்தன; அவர் பதவியில் வீற்றிருந்து நியாயவுலகத்தில் ‘ஆனையிருந்து அரசாண்ட இடத்தில், பூனையிருந்து புலம்புகிறது’ என்று கூறாவண்ணம் நம்மணி விளங்கிற்றென்றால் அதன் திறமையைப்பற்றி நாம் அதிகம் கூறவேண்டுவதின்று.

இன்ப மிடையறா தீண்டு மவாவென்னும் துன்பத்துட் டுன்பங் கெடின்.

சென்னை உயர்தர மன்றத்துத் தலைமை நீதிபதியாக விளங்கிய ஸர் ஆர்தர் காலின்ஸ் (Collins) 1899-ஆம் ஆண்டில் உபகாரச் சம்பளம் பெற்றபொழுது கனம் மணி ஐயர் அந்தப் பதவியை ஒப்புக்கொண்டார்; பின்னர் 1903,1906-ஆம் ஆண்டுகளிலும் அதே வேலையைப் பார்த்துவந்திருக்கிறார். அப்பதவியைப்பெற அவருக்கு எல்லா வகையான திறமைகளும் இருந்தன. "இந்தியருக்கு எவ்வளவு திறமையிருப்பினும் தலைமை நீதிபதியாக நியமிப்பது வழக்கமின்மையால் அரசாங்கத்தார் எனக்கு 'ஸர்' பட்டத்தைக் கொடுத்துக் கண்ணைத் துடைத்தனர்" என்று ஸ்ரீமான் ஐயரே பின்பு ஒரு காலத்திற் கூறியிருத்தல் கவனிக்கத் தக்கதே. யாருக்கும் ஸ்வஜாதியாரிடம் அபிமானம் இருத்தல் இயல்பன்றோ?

1900-ஆம் ஆண்டில் 'நைட்' என்னும் பட்டத்தை அரசாங்கத்தார் மணி ஐயருக்கு வழங்கினர். இத்தகைய பட்டங்கள் இக்காலத்திற் கிடைப்பனபோல அக்காலத்திற் கிடைப்பதன்று.

பிரிவி கௌன்ஸில் அங்கத்தினர் 'சமன் செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொரு பாற்,கோடாமை சான்றோர்க் கணி" ஆதலான் கனம் ஐயர் எழுதும் தீர்ப்புக்களைப் பாராட்டி 'அவர் சிறந்த இந்திய நியாயாதிபதி' எனக் கருதிவந்தனர்.

பன்னிரண்டாண்டுகள் உயர்தரமன்ற நீதிபதியாக இருந்து, தாம் செய்த கடும் ஊழியத்தின் பின், தேகாரோக்கியத்தின் பொருட்டுச் சிலகாலம் இளைப்பாறுதல் அவசியமெனத் தோன்றினமையால் 1907-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ஆம் தேதி நீதிபதி பதவியினின்றும் அவர் விலகினர். இஃது அன்பர் பலருக்கும் வருத்தத்தை யுண்டாக்கிற்று.

ஆண்டொன்றுக்கு 880-பவுன் உபகாரச் சம்பளம் அவருக்குக் கிடைத்தது. இவர், அவ்வாண்டு நவம்பரில் வேலையிலிருந்து விலகாமல் எட்டுமாதகாலம் இன்னும் உத்தியோகத்தைப் பார்த்திருந்தால் 1000-பவுன் உபகாரச் சம்பளம் கிடைத்திருக்கும். அந்த எட்டு மாதமும் வேலை பார்க்கும்படியும், சிரமம் ஏற்படாதபடி வேலையைச் சுலபப் படுத்திக் கொடுப்பதாகவும் அப்பொழுதிருந்த சீப் ஜட்ஜு (Chief Justice) வற்புறுத்திக் கூறினராம். ஆயினும் ஐயர் அதற்கு ஒப்பிலர். பெரியோருக்குப் பணம் தெய்வமன்றே?

மணிஐயர் இராஜீநாமா செய்தமையால் தமக்கு உள்ள வருத்தத்தைச் சென்னை அரசாங்கத்தார் 1907 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் தேதி கெஜட்டு விசேஷப் பிரசுரத்தில் (Gazette Extraordinary) வெளியிட்டினர்; அதில், "கனம் நீதிபதி ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயர், K. C. I. E. திவான்பகதூர், சென்னை உயர்தரமன்றத்து நீதிபதி பதவியினின்றும் 1907 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13தேதி முதல் ராஜீநாமா செய்வதற்கு அனுமதி பெறப்பட்டிருக்கிறார். ஆலோசனை சபையோடு கூடிய கவர்னர், ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயர், K. C. I. E., உயர்தர நீதிமன்றத்து நியாயாதிபதியாக இருந்த நீண்டகாலத்திற் செய்துள்ள உயர்ந்த நற்றொழில்களை மதித்துப் பாராட்டுதலை எழுதிவைக்க விரும்புகிறார். கம்பீரமான நீண்ட தம் வாழ்நாளின் போக்கில் எக்காலத்தும் தாம் காட்டிய நீதிமன்றத்துக்குரிய உயர்குணங்களும் ஸ்வதந்திரப்பிரியமான இயற்கையும் உயர் கல்வியும், அரசாங்கத்தாராலும் பொது ஜனங்களாலும் மரியாதையான அச்சத்துடனும் மதிப்புடனும் நெடுங்காலம் போற்றத்தக்க பெயரும் புகழும் அளித்திருக்கின்றன" எனக் கண்டிருந்தது.

உபகாரச்சம்பளம் (Pension) பெற்றபின்பு ஸர் மணி ஐயர் இன்றியமையாக் காலங்களிலன்றி மற்றைப் பொழுதில் தேசிய விஷயங்களில் தலையிட்டிலர். ஆனாலும், பாரதநாடு சுவாதீனம் பெற்றுப் பழைய சிறப்புடன் "எல்லாரு மின்புற் றிருக்க நினைப்பதுவே, யல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே" என்பதுபோல விளங்கவேண்டுமென்பது மட்டில் அவருள்ளத்தில் எப்பொழுதும் பதிந்திருந்தது. அதன் பொருட்டு அவர் விடாது உழைத்தும் வந்தார்.

இந்து தர்ம ஸ்தாபனங்களைச் சீர்திருத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் அவரால் காணப்பட்ட 'தர்மரட்சண சபை' க்குத் தம் இறுதிக் காலம் வரையில் தலைவராக விளங்கினர்.

இந்துமத வழக்குக்களில் இக்காலத்திற்

கேற்பப் பல மாறுதல்களைச் செய்யவேண்டுமென்று அவர் பலமாக முயன்றார்.

1914-ஆம் ஆண்டில் சென்னை நகரில் நடைபெற்ற காங்கிரஸ் மகா சபையின் உபசாரணைக் கூட்டத் தலைவராக (Reception Committee) விளங்கி அரிய சொற்பொழிவு நிகழ்த்தி மக்கட்குப் புதிய ஊக்கம் உண்டாகும்படி புத்தி புகட்டினார்.

1915-ஆம் ஆண்டில் சுய ஆட்சிச் சங்கத் (Home Rule League) தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

சுய ஆட்சிக் கிளர்ச்சி மிக்க வேகமாகப் பரவியது; அதுசம்பந்தமாக 1917-ஆம் ஆண்டில் டாக்டர் பெஸண்டம்மையையும், ஸ்ரீமான்களான வாடியா, அருண்டேல் முதலியோரையும் அச்சுச் சட்ட (Press Act) நிபந்தனையின்கீழ், லார்டு பேண்ட்லண்ட் கவர்ன்மெண்டார் காப்புச் செய்தனர். ஸ்ரீமான் மணி ஐயர், தளர்ந்த தம் முதுமைப் பருவத்தில் இளநலங் குன்றாது முன் வந்து, "சுய ஆட்சிச் சங்கம் சட்ட வரம்புக்கு மாறானது என்று அரசாங்கத்தார் கூறினும் கூறுக; நான் அதற்கு அஞ்சேன்; அதனால் நேரக்கூடிய எல்லாத் தண்டனைகளையும் நான் அனுபவிப்பேன்" என்று கூறிய வீரமொழியும் பத்திரிகைகளில் எழுதிய கட்டுரைகளும் அக் கிளர்ச்சியை அதிக ஊக்கத்துடனும் உக்கிரமாகவும் நடத்தி வந்ததும் நம் நேயர்கள் உள்ளத்தை விட்டகன்றில.

இக்காலத்திலேயே அமெரிக்காவின் ஜனாதிபதியாக விளங்கிய மிஸ்டர் உட்ரோ வில்ஸனுக்கு இந்தியரின் நிலைமையையும் அங்கிலேயரால் நடத்தப்படும் கேவலமான அரசாட்சி ஒழுங்கையும் விளக்கித் தைரியமாக ஒரு கடிதம் எழுதினார் அவர். அதை இங்கிருந்து நேராக அமெரிக்கா சென்ற, தம் நண்பராகிய ஹாட்ச்னர் தம்பதிகளின் மூலம் அனுப்பினார். அக்கடிதம் எண்ணிறந்த பத்திரிகைகளில் பிரசுரிக்கப் பெற்றதும், இங்கிலாந்து அமெரிக்கா முதலிய நாடுகளில் தோன்றிய பரபரப்பை யாவரால் வருணிக்க இயலும்! அக்கடிதத்தை இங்கிலாந்திலுள்ள அமெரிக்கப் பிரதிநிதி, பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கு அளித்தனர். அக்கடித ஸம்பந்தமாகப் பார்லிமெண்டில் வாதம் நடைபெற்றது. இந்திய கவர்ன்மெண்டார் ஸ்ரீமான் ஐயரிடம் அன்புகொண்டு அவருக்கு உயர்ந்த பட்டங்களை அளித்திருக்கின்றனரென்றும், அதனால் பிரசித்தியுற்ற மணி ஐயர் செய்ந்நன்றி மறந்து இங்ஙனம் செய்தது தவறென்றும், அவர் பட்டத்தை ஏன் பிடுங்கிவிடக் கூடாதென்றும், பிரிட்டிஷ் பார்லிமெண்டங்கத்தினர் சிலர் ஆத்திரத்துடன் கூறினர். மணி ஐயர், அவர்கள் கூறியதைப் பத்திரிகை வாயிலாக அறிந்து அரசாங்கத்தார் கொடுத்த பட்டத்தால் தாம் உயர்ந்துவிடவில்லை யென்பதை மெய்ப்பிக்கக் கருதித் தமக்கு அரசாங்கத்தாரளித்த 'ஸர்' பட்டம் முதலானவற்றைத் துறந்தார்.

பின்பு பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் தம் மனச்சாட்சியை ஆராய்ந்து பார்க்க நேர்ந்தது. டாக்டர் பெஸண்டம்மை, ஸ்ரீமான் வாடியா, அருண்டேல் மூவரும் விடுவிக்கப் பெற்றனர். உடனே, இந்தியா மந்திரியாகிய மிஸ்டர் மாண்டேகு இந்தியா வந்தார். அரசியல் சீர்திருத்த விசாரணை செய்வதற்காக அவரும், இராஜப்பிரதிநிதியாகிய செம்ஸ்ப்போர்டும் புறப்பட்டுப் பல இடங்கள் சுற்றி விசாரித்தனர்; இறுதியில் சென்னைக்கும் வந்தனர். பிரதிகாவலர் செம்ஸ்போர்டுக்கும் மணி ஐயருக்கும் கடுமையான வாதம் நடந்ததென்பர். மந்திரியும் பிரதிகாவலரும் கேட்ட வினாக்களுக்கு, சிறிதும் அஞ்சாது அவர் தக்க விடையளித்தார். "தலை போகத்தக்க துன்பம் வந்த காலத்தும் பெரியோர் மனம் 'மலைபோலச் சலியாது' உறுதியாய் நிற்கும்; இன்பம் வருங்காலத்து மலர் போல் மெல்லியதாகும்" என்னும் கருத்து ஸ்ரீமான் ஐயரிடம் நன்கு விளங்கியது. அரசாங்கத்தின் அன்பைப் பெற மணி ஐயர் தம் மனச் சாட்சிக்கு விரோதமாக ஒரு மயிரிழையும் விட்டுக் கொடுத்திலர்.

1919-ஆம் ஆண்டில் மகாத்மா காந்தியடிகள் 'சத்தியாக்கிரக இயக்கத்தை' முன்கொணர முயன்றபொழுது முதன் முதலில் தாமே அதிற் சேர்ந்து ஜனங்களுககு ஊக்கமூட்டினார்.

கல்வி அபிவிருத்தியில் அவருக்கு இருந்த உழைப்பும் அதிகமே.

ஸெண்ட்ரல் ஹிந்துகாலேஜ் நிர்வாக சபையின் அங்கத்தினராக இருந்து உயர்ந்த தம் அறிவாலும் பணத்தாலும் பலவகையான உத

ஆகூழாற் றோன்று மசைவின்மை கைப்பொருள் போகூழாற் றோன்று மடி.

விகளைப் புரிந்து அதன் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டுவந்தார்.

மயிலாப்பூரில் பி, எஸ். ஹைஸ்கூல் தோன்றியதற்கும், அது முன்னேற்றமடைந்ததற்கும் நிர்வாக சபையங்கத்தினர் பலருள் மணி ஐயர் அன்பே முக்கிய காரணம் எனக்கூறுதல் மிகையாகாது.

ஸர் மணி ஐயர் இல்லையாயின் தியஸாபிகல் ஸொஸைடி இப்பொழுது பரவியிருப்பது போல் பரவுதற்கு இடமிராது.

முன்னுலோசனையும் நிதானமும் தீரமும் வாய்ந்து, நல்லனவென்று கூறத்தக்கன வெல்லாவற்றிற்கும் முற்பட்டு, பொது ஜன சேவையை உள்ளக் கிளர்ச்சியோடு செய்து வந்தார் அவர்.

முனிவரைப் போன்ற வாழ்க்கையை, பிற்காலத்திற் சரிவர நடத்தித் தம் ஆயுட்காலமுழுவதும் தம்மால் பிறருக்குத் துன்பம் சிறிதும் சேரா வண்ணம் வாழ்ந்தவர் இவரே.

இப்படிப்பட்ட ஒழுக்கமுடைய ஐயருக்கு, மன ஊக்கம் குறையாவிடினும் உடல் வன்மை குறைந்தது; அவருயரிய ஆன்மா 1924-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5 தேதி வெள்ளிக்கிழமை இரவு 8-45 மணிக்கு விண்ணுலகு எய்திற்று. அவ்வளவில் இந்திய மக்கள் அனைவரும் 'இடியேறுண்ட நாகம்' போல் நடு நடுங்கினர். அவருக்கு இருந்த தேசாபிமானத்தையும் இராஜவிசுவாசத்தையும் என்னென்று புகழ்ந்து உரைப்பேம் என்று நினைந்து கண்ணீர் விட்டனர். அவர் தம் பூத உடலை இழந்தாராயினும் புகழ் உடம்பை இழந்திலரென்று கூறுதல் மிகையாகாது.

எஃது எப்படி யிருப்பினும் சென்ற 60 ஆண்டுகளாக நம்முன்னின்று தலைமை வகித்து நம் நாட்டுத் திலகமாக விளங்கிவந்த தேசாபிமானியாகிய பிரபு நம்மைவிட்டு ஏகினுர் எனின் ஆறுதலடைதற்கில்லை.

இப்பெரியார் தேற்றுதலின்றி நாம் துன்பங்கள் மலிந்த இந்நாட்களில் நமக்கு ஏற்பட்டுள்ள தொழில்களைச் செவ்வனே எங்ஙனம் செய்து முடித்தற்கு இயலும் என்னும் எண்ணம் நம்மை பிரமிக்கச் செய்கின்றது.

நம் ஐயர், தம் முயற்சியால் முதன்மை பெற்ருர்; தம் தேசம் நன்னிலையடையத் தம் வாழ்நாட்களிற் பெரும் பாகத்தைச் செலவிட்டார்.

"யோக்கியப் பொறுப்பு உருவெடுத்தாற் போன்றவர்; தனக்கென வாழாதவர்; தன் ஆற்றல் எல்லாவற்றையும் பொது ஜன சேவையில் செலவிட்டவர் என்று சென்னைக் கவர்னராக இருந்த லார்டு ஆம்தில் பிரபு நம்மையரைப்பற்றிச் சொல்லி யிருப்பதைக் காட்டிலும், அவருடைய குணங்களையும் பெருமைகளையும் அதிகமாக நாம் வருணிக்கக் கூடவில்லை.

உண்மையும் அன்பும் அறிவும் உருவெடுத்தாற் போன்ற அவ்வுத்தமரின் சரிதகிரத்தைப் பொன் எழுத்துக்களிற் பொறித்து, உலகினரெவரும் அவரை முன் மாதிரியாகக் கொண்டு அவர் அடிச்சுவடுகளைப் பின்பற்ற முயலும்படி செய்தலே நலம்.

மணி ஐயர், வடமொழி தென்மொழி ஆங்கில முதலிய பல கலைகளையும் பலவிஷயங்களையும் குற்றமற நன்குகற்றுத் தெளிந்த ஞானத்துடன் பெருந்தன்மை பரோபகாரம் சௌஜன்னியம் முதலிய நற்குணங்களின் விளைநிலமாக விளங்கினர்.

ஐயாவர்கள், பிரசன்னரா யிருப்பதும் மனவொருமைப்பாடுடையராய் இருப்பதும், தாந்தொடங்கிய தொழிலுக்கு மிக்க பலத்தையும் பெருமையையும் கொடுக்குமென்பதை நன்கு உணர்ந்த பல சங்கத்தினர், அவரையே தலைவராகத் தேர்ந்தெடுத்து எல்லா நற் காரியங்களையும் முன்னின்று நடத்துவிக்குமாறு வேண்டினர்; இதற்குக் காரணம் மணி ஐயர், ஜனங்களின் பொது நன்மைக்காகச் செய்யப்படும் எல்லாத் தொழிலுக்கும் கைகொடுத்ததேயாம். நல்வழிகளில் தேர்ச்சி பெற எண்ணும் ஒவ்வொருவருக்கும் அவர் வழிகாட்டியா யிருந்தார்.

இல்லற வாழ்க்கையிலும் உலக வாழ்விலும் தூய்மை, நேர்மை, சிறந்த தேசாபிமானம் முதலியவற்றிற்கு உதாரணங்களென விளங்கும் பல நற்செய்கைகளை அவர் செய்து வந்தனர்.

அவரிடம் இயல்பாக அமைந்திருந்த தியாகத்தையும், பெருமதியையும், நீதிசெலுத்தும் திறமையையும், நல்லொழுக்கத்தையும், அனுபவத்தையும், பெருந்தனமையையும் கண்டு

183



களியாதார் எவர்? அவர் பெயரும் புகழும் உலகுள்ளளவும் நிலவுவதாக.

அவர், அருளினாலும் அறிவினாலும் திரத்தினாலும், சாந்த குணத்தாலும், திருப்தியாலும் சிறந்தவர். எவற்றிற்கும் அஞ்சா ராஜதந்திரி. ஏழையாயினும் ஸ்ரீமானாயினும் ஆபத்தென்று வந்தால் உடனே உதவிபுரியச் சென்று நலைகொடுக்கும் வள்ளல். தொடங்கும் எத்தொழிலையும் இனிது நிறைவேற்றும் ஆற்றல் படைத்த அண்ணல்.

இத்தியருள் எவரும் பெறாத பிரஸித்தியையும் கீர்த்தியையும் அவர் அடைந்திருந்தனர்.

பிறர் கூறுவனவற்றைக் கேட்டலில் அமைதியும், தம் உண்மைக் கருத்தை வெளியிடுவதில் நேர்மையும், தவறிழைப்போரிடம் தயையும், விடாமுயற்சியுடையோரிடம் அன்பும், தம் கருத்துக்கு மாறுபடுவோரிடம் பொறையும், தம் கருத்தில் உறுதியும், எல்லாவகையாலும் பிறருக்கு நன்மை செய்வதில் விருப்பமும், அரசாங்கத்தாராலும், மதம் வருணம் பாஷை முதலியவற்றால் வேறுபட்ட பொது ஜனங்களாலும் ஒருங்கேமதிக்கும் பாக்கியமும் இவரைப்போல் ஒருவர் பெறுதல் அரிது.

ஸ்ரீமான் ஐயர் தமதரிய ஜீவ காலத்தின் முக்கிய பாகத்தை நம் நாட்டபிவிருத்தியின் பொருட்டும் தேர்ச்சியின்பொருட்டும் செலவழித்திருக்கின்றனர். அவரிடம் நமக்குள்ள நன்றியறிதலை நன்றாகத் தெரிவிக்கும் வன்மையுள்ள சொற்றொடராலமைக்க நாம் முயல்வதிற் சிறிதும் பயனில்லை. அது நம்மாலும் நம் குமாரராலும் நம் பௌத்திரராலும் செலுத்தித் தீர்க்க முடியாத ஒரு பெருங் கடனாயுள்ளது. அவர் செய்துள்ள உதவிக்குப் பிரதியாக நன்றி செலுத்த நம்மாலாகாது. அவர் பெயர் பல தலைமுறைகளில் மெய்யன்புடன் கண்ணியமாகக் கொண்டாடப்படுமென்பதே பூரண நம்பிக்கை; இந்தியராகிய நாம் அவருக்குச் செய்யக்கூடிய பிரதியுபகாரம் இதுவொன்றேயாம்.

---

புகழ்பெற்ற சிறந்த நூல்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| திருமூலர் திருமந்திரம் | ... | ரூ. | 2 | 4 |
| பாண்டவ சரித்திரம் | ... | ,, | 2 | 4 |
| ஸ்ரீமத் ராமாயண ஸாரம் | ... | ,, | 1 | 0 |
| ஸ்ரீமத் பாரத ஸாரம் | ... | ,, | 1 | 2 |
| ஸ்ரீமத் பாகவத ஸாரம் | ... | ,, | 1 | 0 |

# ஸ்ரீகிருஷ்ண கர்ணாமிருதம்

## SRI KRISHNA KARNAMRUTHAM

"த்ரிபுவனகமனம் தமாலவர்ணம்
ரவிகரகௌரவராம்பரம் ததாநே ||
வபு ரளககுலாவ்ருதாநநப்ஜே
விஜயஸகே ரதிரஸ்து மே நவத்யா"

(54) பாஸதாம் பவபயைகபேஷஜம்
மாநஸே மம முஹுர் முஹுர் முஹு:
கோபவேஷமுபஸேதுஷஸ்ஸவயம்
யாபி காபி ரமணீயதா விபோ: ||

"ஸம்ஸார பயத்தை நீக்கவல்ல உத்தம ஔஷதமான பகவான் எனது மனத்தில் இடைவிடாது தோன்றி ஜ்வலிப்பாராக! தமது ஸங்கற்பத்தாலே இடைய வேஷந் தரித்து அவதரித்துள்ள கார்வண்ணனான ஸர்வேசுவரனது ஸௌந்தர்ய லாவண்யம் வர்ணிக்க வொண்ணாது." கண்ணனை ஏதோ சாதாரண ஆயர்களில் ஒருவனாக எண்ணாமல், ஸ்ரீமந் நாராயணனே தமது கிருபாவிசேஷத்தால் ஆயர்குலத்தில் பிறந்து, ஸாதுக்களை ரக்ஷித்து ஸம்ஸார துக்கத்திலிருந்து நிவர்த்திக்க அவதரித்துள்ளார் எனப் பக்தி பூர்வமாய்த் தியானிக்க வேண்டுமென்பது லீலாசுகரின் கருத்து.

(55) கர்ணலம்பித கதம்பமஞ்சரீ
கேஸராருண கபோல மண்டலம் |
நிர்மலம் நிகமவாக கோசரம்
நீலிமான மவலோகயாமஹே ||

"காதில் தொங்கவிட்டிருக்கும் கதம்ப புஷ்பக் கொத்திலுள்ள தாதினால் சற்றுச் சிவந்து விளங்கும் கன்னப் பிரதேசத்தோடு கூடியவரும், மாசற்றுப் பிரகாசிப்பவரும், வேதாதி வாக்கியங்களாலும் வர்ணிக்க வொண்ணாதவருமான கார்வண்ணனைக்கண்டு களிப்போமாக!"

(56) ஸாசிஸஞ்சலித லோசநோத்பலம்
ஸாமிகுட்மலித கோமலாதரம் |
வேகவல்கித கராங்குளீ முகம்
வேணுநாத ரஸிகம் பஜாமஹே ||

பகவான் புல்லாங்குழலூதிக் களிக்கும் பாமாநந்த ஸேவையை யனுபவித்துக் கூறுகிறார் லீலாசுகர். "குறுக்காய் நோக்கிச் சலிக்கும் நீலோத்பலம் போன்ற கண்களோடு கூடின

வரும், சிறிது திறந்துள்ள மிருதுவான உதடுக ளோடு விளங்குபவரும், தமது விரல்களின் நுனிகளை வேகமாய் ச க்கச் செய்து, வெகு இனிமையாய் புல்லாங்குழலூதிக் களிப்பவரு மான ஸ்ரீகண்ணபிரானை நாம் பஜித்து வாழ் வோமாக!"

(57) *மா யாத பாந்தா: பதி பீமரத்யா:*
*திகம்பர: கோபி தமால நீல:।*
*வின்யஸ்த ஹஸ்தோபி நிதம்பபிம்பே*
*தூர்த்த: ஸமாகர்ஷதி சித்தவித்தம் ॥*

கார்வண்ணனது ஸௌந்தர ரூபதர்சன மானது பார்ப்பவர் எல்லோருடைய மனத் தை ஆகர்ஷித்து வசீகரிக்கும் தன்மையுள் ளது என்பதை லீலாசுகர் வ்யங்க்யமாய்க் கூறுகிறார். "ராஜமார்க்கங்களிற் செல்லும் பிரயாணிகளே! அவ்வழியில் செல்லாதீர்கள் திகம்பரனும் தமால விருக்ஷம்போல் கறுத்த மேனியுடையவனுமான விசேஷ புருஷன் ஒருவனிருக்கிறான். அவன் மஹா துஷ்டன். அவன் தன் இடுப்பில் கையை வைத்துக் கொண்டு சும்மா நின்றபோதிலும், பிற ருடைய மனதாகிற தனத்தை அபஹரித்து விடுகிறான்.

(58) *அக்ரே தீர்க்கதரோய மர்ஜுன தருஸ்*
*தஸ்யாக்ரதோ வர்த்மனீ*
*ஸாகோஷம் ஸமுபைதி தத்பரிஸரே*
*தேசே களிந்தாத்மஜா।*
*தஸ்யாஸ்தீர தமாலகானனதலே*
*சக்ரம் கவாம் சாரயன்*
*கோப: க்ரீடதி தர்சயிஷ்யதி ஸகே*
*பந்தான மவ்யாஹதம் ॥*

"இதோ தெரிகிறதே உன்னதமான ஓர் அர்ஜுன விருக்ஷம். அதற்கப்பால் இரண்டு மார்க்கங்கள் காணப்படும். அவற்றின் சமீபப் பிரதேசத்தில் யமுனா நதியானது கோஷித் துக் கொண்டு பிரவஹிக்கிறது. அதன் கரை யிலுள்ள தமால விருக்ஷங்களடர்ந்த வனத் தில் மாடுகளை மேய்த்துக்கொண்டு ஓரிடைச் சிறுவன் விளையாடிவருகிறான். நேயனே, அவன் உனக்கு ஒருக்காலும் அழிவில்லா நல் வழியைக் காட்டுவான்." கார்வண்ணன் யமுனைக் கரையில் மாடுமேய்த்து வரும் ஸந் தர்ப்பத்தைத் தியானித்துச் சரணமடை பவனுக்குச் சாசுவதமான மோக்ஷ பதவி கிடைக்குமென்பது கருத்து.

(59) *கோதூளி தூஸரித கோமல கோபவேஷம்*
*கோபாலபாலக சதைரனு கம்யமானம்।*
*ஸாயந்தனே ப்ரதிக்ருகம் பசுபந்தனார்த்தம்*
*கச்சந்த மச்யுதசிசும் ப்ரணதோஸ்மி நித்யம் ॥*

பகவான் ஆயச்சிறுவர்களுடன் மாடுமேய்த்து விட்டு, ஸாயங்காலத்தில் திரும்பிவந்து மாடு களைக் கோட்டங்களில் கட்டும் ஸந்தர்ப்பத்தை நினைத்து அனுப்பவிக்கிறார் லீலாசுகர். "பசுக் களால் கிளப்பப்பட்ட தூசிகளால் பூசப்பட்ட அழகிய இடைய வேஷத்தோடு கூடின வனும், அநேக ஆயச்சிறுவர்களால் பின் தொடரப் பட்டவனும், ஸாயங்காலத்தில் திரும்பி வந்து, ஆயர்ப்பாடியிலுள்ள ஒவ் வொரு வீட்டிற்கும் பசுக்களைக் கட்டுவ தற்காகச் செல்பவனுமான அச்யுதன் ஆகிற குழந்தையை எக்காலத்திலும் வணங்கிச் சரணமடைகிறேன்." இதனால் கண்ணன் பிரம்மதேவனது கர்வத்தை யடக்குவதற்காக, தாம் ஒருவரே பசுக்கள், கோபாலர்கள் ரூப மெடுத்து, ஆயர்பாடியிலுள்ளோரைக் காத் தருளின சந்தர்ப்பம் த்வனிக்கிறது. ஒரு ஸம யம் பகவான் ஆயச் சிறுவர்களோடு சென்று யமுனாநதிக் காடுகளில் பசுக்களை மேய விட்டு விட்டு, சமீபத்திலுள்ள யமுனாநதியின் மணற் குன்றுகளில் விளையாடிப் பிறகு தம் நேயர்- களுடன் அன்ன கபளங்களைக் கையில் வைத் துக்கொண்டு சாப்பிட்டுக்கொண் டிருந்தார். அச்சமயம், பிரம்மதேவன் அஞ்ஞானத்தால் அகங்கொண்டு, அவரது பிரபாவத்தைச் சோதிக்கக் கருதி, மாயையால் அருகில் மேய்ந்து கொண்டிருந்த பசுக்கூட்டங்களை ஓட்டிச் சென்று ஓரிடத்தில் மறைத்து வைத்து விட்டார். பசுக்களைக் காணாது தவித்த கோபா லர்களைப் பகவான் சமாதானம் பண்ணி, தாம் தேடிப்போய் அவற்றை மீண்டும் கொண்டு வருவதாய் வாக்களித்துச் செல்ல, பிரம்மன் இவர்களையும் கொண்டுபோய் மறைத்து வைத்துவிட்டார். இச்சூதினை யறிந்த மா யோன், தாம் ஒருவரே அவ்வளவு பசுக்களாக வும் கோபாலர்களாகவும் உருவெடுத்து, பிரதி தினம் மாடுகளை மேய்த்து நீராட்டி, கொட்டில் களில் கட்டி இன்னும் பலவித தொழில்களும் செய்து வந்தார். இவ்வாறு ஒரு வருஷம் சென்றது. பிரம்மதேவனுக்கு நற்புத்தி வந்து, அவர் பகவானை வணங்கி, மன்னிப்புக் கேட்டுக்

இருவே றுலகத் தியற்கை திருவேறு தெள்ளிய ராதலும் வேறு.

கொண்டு தான் அபஹரித்துச் சென்றிருந்த பசுக்கூட்டங்களையும் இடைச் சிறுவர்களையும் திரும்பக் கொண்டுவந்து கொடுத்தார்.

(60) நிதிம்லாவண்யானாம்
நிகிலஜகதாச்சர்ய நிலயம்
நிஜாவாஸம் பாஸாம்
நிரவதிக நிச்ரேயஸரஸம் |
ஸுதாதாராஸாரம்
ஸுக்ருத பரிபாகம் ம்ருகத்ருசாம்
ப்ரபத்யே மாங்கல்யம்
ப்ரதம மதிதைவம் க்ருததியாம் ||

"உலகில் நிகரற்ற ஸௌந்தரியங்களுக்கெல்லாம் ஒரு நிதிபோல இருப்பவரும், எல்லாப் பிரபஞ்சத்திலுள்ள ஆச்சரியங்களுக்கெல்லாம் ஓரிருப்பிடம் போன்றவரும், காந்திகளுக்கெல்லாம் ஆதிஸ்தானம்போல் விளங்குகிறவரும், அளவற்ற ஐசுவரியங்களின் ரஸம்போன்றவரும், இடைவிடாத அமிருத தாரைபோன்றவரும், ஸுந்தர ஸ்திரீகளின் புண்ணியமே இவ்வாறு பரிணமித்துளதோ என்று சொல்லக்கூடியவரும், ஸர்வ மங்களங்களையும் அளிக்கவல்லவரும், ஞானவான்களெல்லோராலும் ஒப்பற்ற பரமபுருஷனென்று கொண்டாடப் படுபவருமான கார்வண்ணனைச் சரணமடைகிறேன்."

(61) ஆதாம்ர பாணி கமலப்ரணய ப்ரதோதம்
ஆலோலஹார மணிகுண்டல ஹேமஸூத்ரம் |.
ஆவிச்ரமாம்புகண மம்புத நீலமவ்யாத்
ஆத்யம் தனஞ்சய ரதாபரணம் மஹோ ந: ||.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் தமது பக்தனை பார்த்தனிடம் ஸ்நேகமும் ஸௌலப்யமும் பாராட்டி அவனுக்கு ஸாரத்தியம் செய்தருளிய திருக்கோலத்தை லீலாசுகர் அனுஸந்தித்து ஆனந்திக்கிறார். "சற்றுச் சிவந்து விளங்கும் கைத்தலத்தில் குதிரைச் சவுக்குப் பிடித்து விளங்கியதும், அசைந்தாடும் ஹாரங்கள், கல்லிழைத்த குண்டலங்கள், தங்கப் பூணூல்கள் இவை கூடியதும், ஸாரத்தியஞ் செய்யும் சிரமத்தாலுண்டாய வேர்வைத்துளிகளோடு கூடினதும், நீருண்ட மேகம்போல் கறுத்த மேனியுடையதும், பார்த்தனது இரதத்துக்கு ஓர் ஆபரணம்போல் பிரகாசித்ததுமான ஆதிபரஞ்சோதியானது நம்மை இரக்ஷித்தருளுமாக!"

(62) நகநியமிதகண்டூன் பாண்டவஸ்யச் தனுச்வான்
அநுதின மபிஷிஞ்சன் னஞ்சலிஸ்தை: பயோபி: |
அவது விதத காத்ரஸ் தோத்ர நிஷ்ட்யூதமௌளி:
தசனவித்ருத ரச்மிர் தேவகீ புண்யராசி: ||

பகவான் அர்ஜுனனுக்குச் சாரத்தியம் செய்த அழகு வர்ணிக்கப்படுகிறது. "பார்த்தனுடைய இரதத்தில் கட்டப்பட்ட அசுவங்களை தம் கை நகங்களால் சொரிந்து கொடுத்து அவற்றின் தினவைப் போக்கியும், பிரதிதினமும் தம் கைகளில் கொண்டுவரப்பட்ட ஜலத்தால் அவற்றைக் கழுவியும், தமது தேகத்தை நீட்டி, ஜாட்டையில் வைக்கப்பட்ட சிரத்துடன், கடிவாளங்களை தமது பற்களால் கடித்து பிடித்துக்கொண்டிருந்தவரும், தேவகியின் புண்ணியக் கூட்டமே உருவெடுத்தாற்போல் விளங்கியவருமான ஸ்ரீ கிருஷ்ணபகவான் நம்மை காத்தருள்வாராக!"

(63) அந்தர் க்ருஹே க்ருஷ்ணமவேக்ஷ்ய சோரம்
பத்வா கவாடம் ஜனனீம் கதைகா |
உலூகலே தாமநிபத்தமேனம்
தத்ராபி த்ருஷ்ட்வா ஸ்திமிதா பபூவ ||

"பகவான் ஒரு கோபஸ்திரீ வீட்டில் புகுந்து வெண்ணெய் முதலியன திருடிச் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் இதைக் கண்ட கோபிகை உடனே அவ்வறையின் கதவை மூடிப் பூட்டிவிட்டு, யசோதையினிடம் முறையிடச்சென்றாள். கார்வண்ணன் உரலில் கயிற்றால் கட்டப்பட்டு அங்கு மிருப்பதைக் கண்டு அவள் ஆச்சரியமடைந்து திகைத்து நின்றாள்." ஸ்ரீகிருஷ்ணன் இவ்வாறு செய்தருளிய அதிமானுஷச் செயல்கள் பலவுள.

(41-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடியவைகளாக நினைக்கப்படும் களவு, மது பானம், குருநிந்தை, கொலை, பொய்மை என்னும் பஞ்ச மகா பாதகங்களைச் செய்து வருவதனால், வேதங்களும், புராணங்களும், ஆகமங்களும் முத்தி வீட்டையும் நெறிகளெனக் கூறும் சரியை மார்க்கம், கிரியை மார்க்கம், தேவர்களைப் பூஜித்துவணங்குதல், தோத்திரஞ்செய்து தியானித்தல் என்பவைகளில் ஒரு மார்க்கத்திலும் நின்று ஒழுகாமல், அறிவில்லாமல் தீயசெய்கைகளைச் செய்வதிலேயே இச்சைகொள்ளும் திமிர் பிடித்த தீயவர்களுடன் சேர்ந்து வாழ்வதனால் (அடியேன்) அனுபவிக்கும் துன்பம் அழியுமாறு (அடியேன்) துக்கமிலாத ஆநந்தத்தின் உறைவிடமான முத்திவீட்டைக் காணும்படி அருள்புரியவேண்டும்.

## ஈசனுக்கும் ஓரவஞ்சனையா?

## IS GOD TOO, PARTIAL?

[ஸ்ரீமான் C. N. தநுஸ்வாமி சர்மா அவர்கள்.]

இவ்வையகத்தின் கண்ணுள்ள ஜனங்களை நெருங்கிப் பார்த்துவரும் ஒருவனுக்குப் பெருந்துயரே கொஞ்ச காலம் சென்றதும் மனத்தில் குடிகொள்கிறது. நற்குண நற்செயல்களையே மேலானதென நம்பி நடக்கும் மனிதன் சாப்பிடுவதற்குக்கூட போதுமான சாதனங்களில்லாமல் கஷ்டப்படுகிறான். யாவருக்கும் துஷ்டனாயும், எளியோரை வாட்டிப் பெரியோரை அவமதித்து, குற்றம் கொலைகளுக்கும் அஞ்சா நெஞ்சம் படைத்த அநேகர் மிகவும் கௌரவமாயும், தனமுடையவராயும் வாழ்கின்றனர். இஃது என்ன விந்தை? தர்மம் தழுவிய தருமன் தலைகுனிந்து நிற்கவும், துஷ்டர்களுள் பெயர் பெற்றோங்கிய துர்யோதனன் துயரடையர்து வாழ்ந்ததும், ஏதோ விநோதமாகவே தோற்றுகின்றது. இவர்களெல்லோரும் ஏதோ காரணத்தால் கஷ்டமடைந்தனரென புராணங்கள் கூறுதலால் சரியென்று அனைவரும் ஒத்துக் கொள்கிறோம். ஆயின் நம் ஜீவிய தசையிலே ஒருவித காரணமுமின்றிக் கஷ்டம் ஏற்படின் நம் மனம் தளர்ந்து சோர்வடைவதுடன் அடங்காக்கோபமும், ஆறாத்துயரும் பொங்குகின்றன. ஒருவேளை பூர்வ ஜன்மங்களிற் இக்கஷ்டங்கள் செய்த செய்கைகளுக்காகத் தண்டனையோ எனின் நம் மனம் அதை ஒத்துக் கொள்ளுகிறதில்லை.

ஏனென்றால் தெய்வம் என்னும் நீதி வழுவா ஒரு சர்வ சக்திபொருந்திய வஸ்து இருப்பின், ஏன் உலகில் இவ்வித ஏற்றத் தாழ்ச்சிகள் உண்டாகின்றன? ஒருவனே செல்வத்திற் பிறந்து, புத்தியிருப்பினும் இல்லாவிடினும், உயர்ந்த பதவியை நாட்டிலடைந்து வாழ்கின்றான். வேறொருவன் அவனைக் காட்டிலும் பன்முறை பக்திமானாயும், தெய்வத்திற்குப் பயந்தவனாயும், நற்படிப்பும் புத்தியும் வாய்ந்தவனாயுமிருப்பினும், குடிக்கக் கூழுக்கும் கட்டத்துணிக்கும் அவஸ்தைப் படுகிறான். ஈசனே யாவருக்கும் எதையும் அளிக்கிறானெனின் எதற்காக ஒருவன் பிறந்தது முதல் தரித்திரனாகவும், அந்தகனாகவும், மனிதரால் தங்கள் உறவுக்குத் தகுதியற்றவனெனத் தள்ளப்பட்டவனாகவும், உணவின்றி உடல்மெலிந்து உயிர் துறப்பவனாகவும் பிறக்க வேண்டும்? அதே சமயத்தில் வேறொருவன் கஷ்டமென்பதைக் கனவிலும் அறியாதவனாய்ப் பிறந்தது முதலே மனத்தில் நினைத்தனவெல்லாவற்றையும் அடைந்து மகிழ்ச்சியுடன் வாழவேண்டும்? நாம் செய்யும் குற்றத்தினால் நாம் தண்டனையடைய வேண்டுவது சரியே. ஆயின் நாம் செய்த குற்றமே இவ்வித தண்டனைக்குட்படுத்துகிறதென்பதற்கு என்ன அத்தாக்ஷியுண்டு? மேலும் வேறு சிலர் இங்கு தர்மவழி தவறாது சரிவர வாழ்ந்தவரின் மரித்தபின் நற்சுகம் பொருந்தி வாழலாமென்பர். தவிரவும் ஈசனே நமக்குக் கஷ்டங்களைக் கொடுத்து மனத்தைச் சோதிக்கிறார் என்பர். நமக்கு வரும் விபத்துக்களெல்லாம் ஈசன் திருவிளையாடல் எனவும் கூறுவர். ஆஹா! நல்ல திருவிளையாட்டு! அவர் விளையாட்டே இப்படி இருப்பின், நிஜமாகத் தண்டிப்பதென்றால் மனிதர் நிலை என்ன ஆகும்? கருணாமூர்த்தி என்பவரோ நமக்குக் கஷ்டத்தைக் கொடுத்துக்கொண்டே இருப்பர்?

மேற்கூறியவாறு கஷ்டத்தினால் சுகத்தையடைவதெனவே வைத்துக் கொள்வோம். கெட்ட கர்மத்தால் கஷ்டம் விளைகிறதா, அல்லது கஷ்டத்தினால் மோக்ஷசுகம் விளைகிறதா? இரண்டும் சரியென ஒத்துக்கொண்டால் கெடுதலினின்று நன்மை உண்டாகிறதென ஆகும். "ஏதோ நாளை சுகம் வருமென்றெண்ணி, இன்று கஷ்டத்தை அனுபவித்துவா" எனக் கூறின் யார் ஒத்துக்கொள்ளக்கூடும்? இதையும் சரியெனவே விடுத்து அம்மாதிரி மோக்ஷ சுகத்தைக் கஷ்டத்திலிருந்தே கடவுள் யாவருக்கும் விளைவிக்கிறார் எனக்கூறின், அவ்வித கஷ்டம் பூலோகத்தில் யாவருக்கும் ஒரே மாதிரியாக இருக்கவேண்டும். அவ்விதம் பார்க்கிறோமோ? இல்லவேயில்லை. வேற்றுமைகளைத் தவிர உலகில் ஒரு இடத்திலேனும் ஒரே மாதிரியான நிலையை நாம் கண்ணுறுவதில்லை. ஆதலால் இம்மாதிரியெல்லாம் வித்தியாசம் பாராட்டுவது ஈசனின் இயல்போ, ஈசனும் ஓரவஞ்சனை செய்பவனோ; என மனத்தில் ஐயம் உதிக்கிறது. இதை எக்காரணத்தைக்கொண்டு தீர்க்கலாமெனின், ஈசு

வரன், ஜீவன் எனப்படும் இருபொருள்களையும் பற்றிச் சரியாய் அறிவதாலேயே எனல் விளங்கும்.

ஈசுவரனைப்பற்றி அநேக விதமாக அநேகர் சொல்லியிருக்கின்றனர். கடவுளானவர், குயவன் மண்ணால் பானை முதலியவை செய்வதேபோல், உலகத்தையும் முன்னாக இருந்த வஸ்துவிலிருந்து உண்டாக்கினார் எனச் சிலர் கொள்வர். இது சரியெனில், செய்பவனாகிய ஈசுவரன், செய்யப்பட்ட பொருளாகிய மனிதன், முதற்பொருளாகிய ஒரு வஸ்து என மூன்றுண்டாகும். அவைகள் வெவ்வேறாகவும் நிற்கும். அப்படி சிருஷ்டிசெய்யும் ஒருவருக்கு அழிக்கவும் சக்தி யுண்டாதலால், சிருஷ்டிக்கப்பட்ட பொருளாகிய நாம், அவர் எதை நமக்கீந்தாலும் அடையவேண்டுவதுதான். அப்பொழுது அவரே அரசுபுரியும் மன்னன். நாம் அவர் பிரஜைகள். எதைச் செய்யச் சொல்லினும் செய்தே தீர்க்கவேண்டுவது தான். கடவுள் இம்மாதிரி இருக்கிறாரெனப் பாவித்தல் சில மதத்தினர்க்கு இயல்பே. ஆனால் வாஸ்தவத்தில் இப்படி இருப்பின் கடவுளானவர் கேட்பாரற்ற மன்னவனாகவும், சில சமயம் கடுங்கோலரசனெனவும் மதிக்கப்படுவார். அவரை பக்தியினாலும் தோத்திரத்தாலும் சந்தோஷப்படுத்தியே நம் குறைகளைத் தீர்த்துக் கொள்ளவேண்டிவரும். கொஞ்சம் யோசித்துப் பார்க்கின் வேதங்களிலும் உபநிடதங்களிலும் கடவுள் இம்மாதிரி இருக்கவில்லை எனக் கண்டிருக்கிறது விளங்கும். துதியால் சந்தோஷிப்பாராகில் கடவுளும் நம்மைப் போலவே அகங்காரமுள்ள ஒருவரோ என்ற சந்தேகம் உதிக்கும். அப்படியிருப்பின் ஈசன் நம்மிலும் விசேஷமுள்ளவ ராகார். ஆனால் 'இவ்விதமின்றி அவர் பூரணர், அவர் பரவாத இடமும் அணுவும் கிடையாது; அவரே சர்வ வஸ்துக்களாகவும் தோன்றுகிறார் எனல் எல்லாச் சமயநூலார்க்கும் உடன்பாடே.' ஜலமானது எவ்விதம், காற்றாலடிபட்டபொழுது, அநேக ரூபங்களாய் மாறி, நுரை, அலையென்ற பெயரை யடைந்தும் மறுபடி ஜலமாகவே நிற்கிறதோ அம்மாதிரியே ஈசனும், வெவ்வேறு ரூபமாகத் தோன்றினும், எப்பொருளுக்கும் ஆதாரமாயும், அவைகளினுள்ளும் புறம்பும், மற்றெங்கும் பரவியிருக்கும் பரம்பொருளான பிரம்மமாகவு மிருக்கிறார். இது வேதாந்தத்தின் உள்ளுண்மை. எப்படி ஜலமானது மாறுதலடைவது அதன் ஸ்வபாவமோ, எப்படி அரசன் பிரஜைகளின்றி இரானோ, அவ்விதமே ஈசனும் பரவி நிற்கிறாரெனச் சொல்வதே சரி. உலகில் அவரே சிருஷ்டிக்குக் காரணபூதரெனச் சொல்லப்படும்பொழுது பிரம்மாவெனும் பெயரை யடைகிறார். இவ்வுலகத் தோற்றத்தை,'ஜலமானது நுரையை உண்மையாகக் காண்பிப்பதுபோல்,' நிலைப்படுத்திக் கொண்டிருப்பதால், அவரே விஷ்ணு எனும் காரணப்பெயரையும் அடைகிறார். நுரையானது அடங்கியதும் ஜலமாகவே ஆய்விடுகின்றதல்லவா? அம்மாதிரியே உலகமெனத் தோன்றியபிரான் அத்தோற்றங்களைக்கலைத்து நாசமடைவதுபோற் செய்யும்பொழுது ருத்திரன் எனத் திருநாமம் தரிக்கிறார். இதை ஈண்டு ஓர் உதாரணத்தால் உணர்த்துதல் அவசியம். இராமன் என்ற ஒருவன், வண்டி ஓட்டும்பொழுது வண்டிக்காரனெனவும், படிக்கும்பொழுது மாணாக்கனெனவும், வேலைசெய்தால் வேலைக்காரனெனவும் பெயரை யடைந்தாலும், அவன் மூவனாவனோ? ஆகான். இராமன் என்போன் ஒருவனே. தொழிலால் மூன்று நாமங்களை யடைகிறான். இவ்விதம் சத்தாகிய அகண்ட பரப் பிரம்மம் ஒன்றே பல ரூபங்களாகத் தானே மாறித் தன்னில் லயமடைகிறது. நான் எனப் பிரித்துக் கூறும் ஒருவனும், அப்பெரும் பொருளின் பகுதியே. இதுவே சர்வ சாத்திர சம்மதம். ஆனால் உலகெனப் பிரிக்கும்பொழுது அதற்கு மூன்று பிரிவுகள் உண்டாகின்றன: அவை பரமாத்மா, ஜகத்தாகிய இவ்வுலகு, ஜீவன் என்பவையே. பிரிந்த அச்சமயத்திலேயே நானென்னும், எனதெனனு மாகிய உணர்வை ஜீவன் அடைகிறது. உண்மையாக ஈசனுடைய ஒரு பங்கே ஒவ்வொரு வஸ்துவும். ஆகையால் எங்கும் நிறைந்த பரம்பொருளானது தனித் தனியாய் நிற்பதுபோல் காணப்படுகிறது. இப் பிரிவோடன்றி, பிரிந்தபின் ஒவ்வொன்றாக நிற்கும் ஜீவனுக்கு மாறுதல்களும், பந்தங்களும் உண்டாகின்றன. சக்கரையினாலான பொம்மை தான் சர்க்கரையென்றறியாதிருந்தால் அஃது எவ்விதமிருக்குமோ, அலையானது சமுத்திரத்திலிருந்து உண்டாகி

சமுத்திர ஜலபாகமா யிருப்பதை மறந்து, தானே எல்லாம் என்று நினைத்தா லெவ்வித மிருக்குமோ, அவ்விதமே ஒவ்வொரு மனிதனும் தன்னை ஈசுவரனிடமிருந்து வேறெனப் பிரிப்பதும் இருக்கிறது. இதுவே ஜீவனுடைய உண்மை.

ஆயின் நாம் முதலிற் கேட்ட கேள்விக்கு இன்னும் உத்தரமில்லையா? இம்மாதிரியான ஜீவன் பரம்பொருளின் பாகமாயேயிருக்க, இக்கஷ்டங்களெல்லாம் என் சம்பவிக்கின்றன? என்று மற்றொரு சந்தேகமும் உண்டாகின்றது. இச்சீவனானது ஸ்தூல சரீரத்திலிருந்தபடி, தன்னுண்மை நிலையை மறந்து, தன்னைச்சுற்றிய வேறு தோற்றங்களில் நாட்டமுற்று, அவைகளினால் அசைவின்றிக் கட்டப்பட்டு, அநேக கார்யங்களைச் செய்கிறது. அப்பொழுது அது சக்தியற்றதாய் எதுவந்தாலும் பட்டுத் தீரவேண்டிய நிலையை அடைகிறது. ஓர் அலை ஒருபுறம் புரள, மற்றொன்று அதன் மேல் தாக்கினால் அது எப்படி மாறுதலையடையுமோ, அம்மாதிரி இச்சீவனும் உலகத் தோற்றத்திற்கு மாத்திரம் மற்ற விஷய சம்பந்தத்தால் மாறுதலையடைகிறது. மற்றோர் அலை வருவானேன் எனில் அதற்குக்காரணம் என்ன சொல்லக்கூடும்? இஃது அதை அனுசரித்துச் சென்றால் இது விட்ட இடத்தை ஸ்வபாவமாக ஜலம் நிரப்பவேண்டியதுதானே. அதனால் இன்னொரு அலை உண்டாகிறது. அவ்விதமே ஜீவனும் தானாகவே செய்யும் காரியத்தால் மற்றக் கஷ்டங்களையோ, சுகங்களையோ விளைவித்துக்கொள்கிறது. ஏனெனில் சலனமுள்ளவரை, இவையெல்லாம் ஏற்படுதல் சகஜம். பந்தை வேகமாய்விட்டெறிந்தால், அத்துணை வேகத்துடன் அதுவும் திரும்புகிறது. அங்ஙனமே ஒருவன் செய்யும் கிருத்யங்கள் பின்பு அவனாலேயே செய்யப்படுகின்றன. அதனால் விளைந்த அனுபவத்தையும் அவன் பின்பு தானே அனுபவிக்க வேண்டி வருகிறது. அதை யார்மேல் சாற்ற முடியும்? ஆதலால் ஈசன் ஓரவஞ்சனைக்காரனென்னல் பொருந்தாது. எப்படி தூக்கத்தில் கட்டிலிலிருக்கும் ஆணி மேல் இடித்துக்கொண்டவன், காலையில் எழுந்து ரத்தத்தைப் பார்த்துக் காரணம் தெரியாது கலங்குகின்றானோ, அம்மாதிரி நாம் செய்த கர்மாவை நாம் மறந்து, கஷ்டம் அனுபவிக்கும் பொழுது மாத்திரம் இஃது எப்படி நேர்ந்தது எனத் தெரியாது மனம் நோகின்றோம். இஃது ஈசன் குற்றமா? இல்லை. அல்லது ஈசன் விளையாட்டா? இல்லை. ஈசனின் தண்டனையோ? அதுவும் இல்லை. நாம் செய்ததை நாமே அனுபவிக்கிறோம். கையைச் சுடுமெனத் தெரியாது நெருப்பில் ஒரு குழந்தைவிரலைவைத்துவிட்டுப் பின் அந்தச் செய்கையை மறந்துவிடுகிறது. கையோ மிகவும் உபாதையைத் தருகிறது. அந்தக் குற்றம், நெருப்பினுடையதா, குழந்தையினுடையதா? குழந்தைக்கு அறிவிருந்தால் நெருப்பைத் தொட்டிராது. நமக்கும் ஞானமிருப்பின் கர்மத்தை விளைத்துக் கொண்டிருக்கமாட்டோம். பந்தங்களால் இந்த ஞானம் ஏற்படவில்லை. நெருப்புக்குச் சுடுவது இயல்பு. அம்மாதிரியே ஒவ்வொரு கர்மத்திற்கும், பிரதிபலனானது இயல்பு. அப்பிரதிபலனையே நாம் அனுபவிக்கிறோம். எல்லாரும் ஒரேமாதிரி கிருத்தியங்கள் செய்யாததால் ஒவ்வொருவருக்கும் அவரவர்கள் கிருத்தியத்தின்படி கைம்மாறு நடக்கிறது. ஈசனென்செய்வர்? அது ஒருபோதும் அவர் குற்றமாகாது. ஆயினும் என்? எல்லாருக்கும் மழையைப் போல் அவர் பொது. நிலத்தை உழுது வைப்பவனுக்கு அம்மழை பிரயோஜனப் படுகிறது. கட்டாந் தரையாய் விடுபவனுக்கு அது விழலுக்கிறைத்த நீராகிறது. ஆகவே மனமுருகிப் பந்தத்தை விடுவிக்க ஈசனை நோக்கிப் பிரார்த்திப்பவருக்கு, இக் கருணைப்பிரவாகம் பூரணமாய்க் கிடைத்துப் பிரயோசனம் கொடுக்குமென்பது பெரியோர் துணிபு. ஆதலின் பக்ஷபாதமில்லாப் பரமனை, 'எது வரினுமது வருக', எனத் தேர்ந்து எஞ்ஞான்றும் உள்ளத்தே நினைந்து, வழிபடுதலே, இம்மையில் நேரும் இடையூறுகளைக் கடந்து, மறுமையில் மோக்ஷத்தை யடையக்கூடிய பெரும் வழியாகும்.

---

திருமூலர் திருமந்திரம்.—திருமூல நாயனார் திருவாய் மலர்ந்தருளியது. (பத்தாந் திருமுறை) பலபிரதிகளுக்கிணங்கப் பரிசோதிக்கப்பெற்றது. நல்ல காகிதத்தில் அழகுபெற அச்சிட்டுகலிகோபயிண்ட் செய்யப்பட்டது. பாக்கட் ஸைஸ், விலை ரு. **2-4-0.**

துறப்பார்மற் றுப்புர வில்லா ருறற்பால வூட்டா கழியு மெனின்.

# மதுரை நாயக அரசர்கள்

## THE NAIK KINGS OF MADURA

### I. பூர்வ விருத்தாந்தம்

மதுரை மாநகரத்தில் தொன்றுதொட்டு அரசாண்டுவந்த பாண்டியர்கள் வம்சம் க்ஷீண தசை யடைந்து, அவ்வம்சத்து அரசர்கள் தங்கள் குடிகளைக் காக்கும் திறனையிழந்தபின்னர், அவ்வரசர்களைப் பாண்டியர் சிம்மாசனத்தில் மீட்டும் இருத்தி, அவ்வரசர்களையும் அவரது குடிகளையும் திறமையுடன் பாதுகாத்து உதவிய மதுரை நாயக அரசர்களது சரித்திரத்தைச் சிறிது வித்தாரமாக எடுத்துரைப்போம். நமது தேசத்தின் பூர்வ சரித்திரம் இன்னும் முற்றிலும் நிச்சயிக்கப்படாமலிருப்பதால், இச்சரித்திரத்தில் ஏதேனும் பிழையிருப்பின், இதைக் கண்ணுறும் அறிஞர் அப்பிழையைப் பொறுத்து எமக்குத் தெரிவிப்பார்களென நம்புகிறோம்.

மதுரை மாநகரத்தில் குலசேகர பாண்டியன் என்னும் பாண்டிய வம்சத்து அரசன் கி. பி. 1268 முதல், கி. பி. 1308-ம் வருஷம் வரையில் அரசாண்டுவந்தான். அவனுக்குப் பட்ட மகிஷியினிடம் பிறந்தவனும், மூத்த குமாரனுமான கூன் பாண்டியன் என்பவன் தந்தையினிடத்து அன்பில்லாமல் அவனைக் கொலை செய்துவிட்டுப் பாண்டியர் சிம்மாசனத்தில் ஏறினன். ஆனல் குலசேகர பாண்டியனுக்கு வைப்பாட்டியினிடத்திற் பிறந்தவனும் இளைய குமாரனுமான வீர பாண்டியன் கூன் பாண்டியனை எதிர்த்துப் போர்செய்து, அவனை முறியடித்து இராஜ்யத்திலிருந்து துரத்திவிட்டு, தான் பாண்டியர் சிம்மாசனத்தில் ஏறினன்.

அவ்வாறு தோல்வியடைந்து இராஜ்யத்தை யிழந்த கூன் பாண்டியன் டில்லி மாநகரத்துக்குச் சென்று, அக்காலத்தில் அந்நகரத்தில் அரசு புரிந்துவந்த துருக்க அரசனுகிய அல்லாவுத்தீன் கில்ஜியைத் தனக்கு உதவிபுரிந்து, தன்னை மீண்டும் சிம்மாசனத்தில் ஏற்றும்படி வேண்டினன். அல்லாவுத்தீன் நல்ல சமயம் வாய்த்ததென்று மகிழ்ந்து, அவன் வேண்டுகோளுக் கியைந்து, தன் சேனுதிபதியான மாலிக் காபூர் என்பவனைப் பெருஞ் சேனையுடன் தென்னிந்தியாவுக்கு அனுப்பினன்.

மாலிக் காபூர் மதுரைக்குப் போகும் வழியில், தேவகிரியில் அரசாண்டுவந்த இராமச்சந்திரன் என்னும் அரசனையும், வாரங்கல் என்னும் நகரத்தில் அரசு புரிந்துவந்த பிரதாபருத்ரன் என்னும் அரசனையும், துவார சமுத்திரத்தில் அரசாண்டு வந்த ஹாய்ஸாலர் வம்சத்து அரசனுன மூன்றுவது வீரவல்லாளனையும் பொருது வென்றுன். பிறகு அவன் மதுரையை யடைந்து, வீரபாண்டியனுடன் போர் செய்து வெற்றியடைந்தான். வீரபாண்டியன் காட்டுக்குள் ஓடி யொளித்துக்கொண்டான்.

பாண்டிய இராஜ்யத்துக்கு இவ்விபத்து கி. பி. 1310-ம் வருஷத்தில் சம்பவித்தது. அவ்வருஷம் முதல், கி. பி. 1365-ம்வருஷம் வரையில், டில்லி சக்கரவர்த்தியின் துருக்கப் பிரதிநிதிகளே மதுரைமா நகரத்திலிருந்து அவ்விராஜ்யத்தை ஆண்டுவந்தார்கள். அக்காலத்திலும் பாண்டிய மன்னர்கள் மதுரையில் சிம்மாசனத்தில் வீற்றிருந்தார்களே யெனினும், அவர்கள் உண்மையில் துருக்கர்களின் அடிமைகளாகவும், அவர்களால் ஆட்டப்பட்ட பொம்மைகளாகவும் இருந்தனர். அவ்வாறு ஆண்டுவந்த காலத்தில், துருக்கர்கள் குடிகளைச் சிறிதும் கருணையின்றி வருத்தியும், கோயில்களை யிடித்து விக்கிரகங்களை யுடைத்து தெய்வாராதனைக்கு இடையூறு செய்தும், குடிகள் தங்களைப் பெரிதும் வெறுக்கும்படி செய்துகொண்டார்கள்.

இப்படித் துயருற்ற பாண்டிய இராஜ்யத்துக்கு விஜயநகர இராஜ்யத்தின் உதவியினல் நல்லகாலம் பிறந்தது. 1326-ம் வருஷத்தில் ஹாய்ஸால வம்சத்து அரசன் துருக்கர்களினல் முறியடிக்கப்பட்டு, அவ்வம்சத்து இராஜ்யம் நிலைகுலைந்த பின்னர், அவ்வம்சத்தைச் சேர்ந்த ஹரிஹரன், புக்கன் என்னும் இரண்டு சகோதரர்களால் ஸ்தாபிக்கப்பட்ட விஜயநகர இராஜ்யமானது, அவ்விரு சகோதரர்களும் அவர்களுடைய மற்ற மூன்று சகோதரர்களான கம்பணன், முத்தப்பன், மாரப்பன் என்பவர்களும் வல்லாள அரசர்களது நாடுகளையும் துருக்கர்களுடைய நாடுகளையும் ஒன்றன் பின்னென்றுகக் கைப்பற்றி வந்ததனல் வெகு சீக்கிரத்தில் பெருகி கொஞ்ச காலத்துக்குள் கிழக்கு, தெற்கு, மேற்கு என்னும் மூன்று பக்கங்களிலும் சமுத்திரத்தையும் வடக்கே கிருஷ்ண

நதியையும் எல்லைகளாகவுடையதாய் ஆயிற்று.

அந்த விஜயநகர இராஜ்யத்தை ஸ்தாபித்த "முதல் புக்கனது குமாரனான இரண்டாவது கம்பண உடையார், துருக்கர் கையிற் சிக்கிக் கொடுங்கோன்மையினால் வருந்திய பாண்டிய இராஜ்யத்தின் பரிதாப நிலைமையைக் கண்டு அநுதாபமுற்று, அவ்விராஜ்யத்தை அவர்கள் கையினின்றும் விடுவிக்க கி. பி. 1365 முதல், 1371-ம் வருஷம் வரையில் பன்முறை படையெடுத்துச் சென்று, கடைசியாக கி. பி. 1371-ம் வருஷத்தில் அவ்விராஜ்யத்தை முற்றிலும் விடுவித்தார். அவ்வருஷமுதல், பாண்டிய இராஜ்யமானது விஜயநகர இராஜ்யத்தின் ஆளுகைக்குள் இருந்துவந்தது. ஆனால் துருக்கப் பிரதிநிதிகள் ஆண்டு வந்த காலத்தில் இருந்ததுபோலவே, பாண்டிய அரசர்களும் விஜய நகரச் சக்கரவர்த்தியினுடைய பிரதிநிதிகளின் அதிகாரத்துக்கு அடங்கி நாட்டை ஆண்டுவந்தார்கள்.

கி. பி. 1371-ம் வருஷமுதல், 1404-ம் வருஷம் வரையில் கம்பண உடையாரும் அவருடைய சந்ததியார்களும் மதுரையில் விஜய நகரச் சக்கரவர்த்தியின் பிரதிநிதிகளாக ஆண்டுவந்தனர். கி. பி. 1404-ம் வருஷத்தில் இரண்டாவது ஹரிஹரன் என்னும் விஜயநகரச் சக்கரவர்த்தி, தனது இராஜ்யத்தைச் சேர்ந்த தெற்கு நாடுகளை ஆள்வதற்கு நாயகர் என்னும் பட்டமுள்ள பிரதிநிதிகளை அனுப்பினான். ஒவ்வொரு நாயகப் பிரதிநிதியும் ஒவ்வொரு நாட்டை ஆளும்படி அனுப்பப்பட்டான்.

கி. பி. 1405-ம் வருஷம் முதல், 1450-ம் வருஷம் வரையில் லக்கண தண்ட நாயகன் மதுரையில் பிரதிநிதியாக ஆண்டு வந்தான். 1450-ம் வருஷம் முதல் சாளுவ வம்சத்தைச் சேர்ந்தவர்கள் மதுரையில் பிரதிநிதிகளாக ஆண்டுவந்தனர். கி. பி. 1486-ம் வருஷத்தில் சாளுவ வம்சத்து நரசிங்கனும், நரசிங்கன் இறந்தபின் நரச நாயகனும் விஜயநகர இராஜ்யத்தை வஞ்சகமாக அபகரித்துக்கொண்டு ஆண்டுவந்தனர். நரச நாயகனுக்குப் பிறகு வல்லமையற்ற அவன் குமாரனான வீர நரசிம்மன் பட்டத்துக்கு வந்து 1509-ம் வருஷம் வரையில் ஆண்டான். அவ்வருஷத்தில் கீர்த்தியில் மிக்கோராகிய கிருஷ்ண தேவராயர் விஜயநகர இராஜ்யத்தின் சக்கரவர்த்தியானார். அவர் தமது இராஜ்யத்தின் தெற்குப் பாகங்களினின்றும் வெகுகாலமாய்க் கப்பம் வராததைக்கண்டு, தன் சேனாதிபதிகளைப் பெருஞ் சேனைகளுடன் தென்னாட்டுக்கு அனுப்பினார்.

அச்சேனாதிபதிகளில் முதல்வனான வையப்பன் மற்ற சேனாதிபதிகளான விஜயராகவ நாயகன், வெங்கடப்ப நாயகன் இருவர்களையும் சேர சோள பாண்டிய தேசங்களிலிருந்து வரவேண்டிய கப்பங்களை வசூலித்துவரும்படி அனுப்பினான். அவர்கள் பெருஞ் சேனையுடன் வந்ததைக்கண்டு அஞ்சிய சிற்றரசர்களும் சக்கரவர்த்திப் பிரதிநிதிகளும் தங்கள் கப்பங்களைக் கொண்டுவந்து செலுத்திவிட்டார்கள். பிறகு வையப்பன் தென்னாடு முழுவதையும் மூன்று பாகங்களாகப் பிரித்து, கொள்ளிடத்துக்கு வடபுறத்திலுள்ள நாடான ஒரு பாகத்தைத் தன் ஆளுகையின் கீழ் வைத்துக்கொண்டு காவிரி நதி பாயும் நாட்டுக்கு விஜயராகவ நாயகனைப் பிரதிநிதியாகவும், வைகை நதியும் தாம்பிரவர்ணி நதியும் பாயும் நாட்டுக்கு வெங்கடப்ப நாயகனைப் பிரதிநிதியாகவும் நியமித்தான். வெங்கடப்ப நாயகன் மதுரையில் பிரதிநிதியாக ஆளத் தொடங்கினான்

அவ்வாறு விஜயநகரத்துச் சக்கரவர்த்திகள் தென்னாடுகளைத் தங்கள் ஆளுகைக்கு உட்படுத்திய காரணத்தினால் தெலுங்கர்கள் வடநாடுகளிலிருந்து திரண்டு வந்து தென்னாடுகளில் குடியேறினார்கள். தமிழ் நாட்டில் தெலுங்க வம்சத்து அரசர்கள் ஆட்சிபுரிய வேண்டியிருந்ததனால், தெலுங்குப் போர் வீரர்களும், தெலுங்க இராஜாங்க முறை நிபுணர்களும், அவர்களுக்கு உதவியாக மற்றும் பல தெலுங்கர்களும் வந்து குடியேறினார்கள்.

விஜய நகரத்துச் சக்கரவர்த்தியான கிருஷ்ண தேவராயர் கி. பி. 1530-ம் வருஷத்தில் இறந்துபோனார். அவருக்குப் பிறகு அவரது பின்னோரான அச்சுதராயர் பட்டத்துக்கு வந்தார். அவர் வல்லமையற்றவரென்றும், அவரது சபையைச் சேர்ந்த பிரபுக்கள் வெறுப்புற்றுக் கலகஞ் செய்தபோது அவர் ஹிந்துக்களுக்கும் விஜயநகர ராஜ்யத்துக்கும் தீர்க்க விரோதியான விஜயபுரம் சுல்தானைத் தமக்கு உதவிபுரியும்படி கேட்டுக் கொண்டதாகவும், அதுகண்ட பிரபுக்கள் இராஜ்யத்தின் நன்மையைக் கருதி அவருக்குக் கீழ்ப்படிந்து

அவரைச் சுல்தானுக்கு ஏராளமான பொருளைக் கொடுத்து அனுப்பிவிடும்படி செய்தார்களென்றும் கர்ண பரம்பரையான கதை கூறுகிறது.

ஆனால் சிலாசாசனங்களைப் பரிசோதிக்குமிடத்து, அச்சுதராயர் வீர்யமில்லாதவரல்லவென்றும், புஜபல பராக்கிரத்திலும் குடிகள் பிரியத்தைச் சம்பாதிக்கும் திறமையிலும் அவர் கிருஷ்ண தேவராயருக்கு இணையானவரென்றும், அவரைக் கண்டு துருக்கர்கள் நடுங்கினார்களென்றும், ஈழத்தையும் (இலங்கைத் தீவையும்) அவர் வென்று கொண்டாரென்றும், அவர் தமது ஆட்சியின் ஆரம்பத்திலேயே விஜயபுரம், வாரங்கல் என்னும் இரண்டு துருக்க தேசங்களின் அரசர்களுடனும் போர்செய்து வெற்றியடைந்தாரென்றும், அவர் தமக்குக் கீழ்ப்பட்ட இருநூறு சிற்றரசர்களையும் அடக்கியாண்டுவந்தாரென்றும் தெளிவாய்த் தெரியவருகிறது.

அச்சுத ராயருக்கு முன் ஆண்டு வந்த கிருஷ்ண தேவராயர் காலத்தில் அவருடைய பிரபுக்களுக்குள் மிகவும் மேன்மையானவர்களில் ஒருவரும், சாளுவ வம்சத்தில் தலைமை பெற்றவருமான செல்லப்பவீர நரசிம்ம நாயகர் என்பவர் வைகை நதியும் காவிரி நதியும் பாயும் நாடுகளில் இராஜப் பிரதிநிதியாக ஆண்டுவந்தார். அவர் மிகுந்த தைரியமும் பேராசையும் உடையவராதலால், அவர் சக்கரவர்த்தியின் அதிகாரத்தை நிவர்த்தித்துக் கொண்டு சுதந்தரமுள்ள அரசனாக ஆவதற்குச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தார். கிருஷ்ண தேவராயர் இறந்ததும், அச்சுதராயர் புதிதாகப் பட்டத்துக்கு வந்திருந்தபடியாலும், அச்சுதராயருக்கும் விஜயபுரம் சுல்தான் இப்ராஹீம் அடில்ஷாவுக்கும் போர் நடந்துகொண்டிருந்தபடியாலும், செல்லபபவீர நரசிம்ம நாயகர் அதுவே தக்கசமயமெனத் துணிந்து, அத்தருணத்தில் தன் வம்சத்துக்கு எதிரிவம்சமான சாளக வம்சத்தைச் சேர்ந்த மகா மண்டலேசுவர திருமலைய மகாராஜா என்னும் பிரபுவை அச்சுதராயர் பெரிதும் ஆதரித்து அவருக்கு யாவரினும் மேலான பதவியைச் சபையில் அளித்ததைக் கண்டு அச்சுதராயரிடத்திற் கோபங்கொண்டு, அச்சுதராயருக்குத் தம்மீதுள்ள அதிகாரத்தைக் குலைப்பதற்கு வழி தேடலாயினர். (தொடரும்.)

# நமது சிறு கதை

## OUR SHORT STORY

## விதியை வென்ற துப்பன்

அல்லது

## இரட்டைக் கொலை மர்மம்

### I

சென்னை பெனிடென்ஷரி (சிறைச்சாலை)யில் இருந்த 25-ம் நெம்பர் கைதி, அவனுக்குப் பெரிய எஸ்டேட் கிடைப்பதற்குத் தடையாயிருந்த ஒரு நோயாளி வாலிபனுக்கு விஷங் கொடுத்துக் கொன்றதற்காக அன்றுதான் மரண தண்டனை விதிக்கப்பெற்றான்.

கொல்லப்பட்ட வாலிபன் அவனுடைய தகப்பனால் குற்றவாளியின் கையில் பாதுகாப்புக்காக ஒப்புவிக்கப்பட்டதையும், அவ்வாலிபன் வேறுசுற்றத்தவரில்லாமல் அநாதையாய்ப் பாரிசவாயு என்னும் கொடியநோயினால் பீடிக்கப்பட்டுப் பரிதாபமான நிலைமையிலிருந்ததையும் நினைத்துக் குற்றவாளியினிடம் கடுங்கோபமுற்ற நியாயாதிபதி, அக்குற்றத்தின் தன்மையையும், சாக்ஷியங்களின்தெளிவையும்ஜூரிக்கு எடுத்துரைத்த பொழுது, குற்றவாளியைப் பெரிதும் நிந்தித்துக் கடுமையாகப் பேசினார். அந் நிந்தைமொழிகளைக் கேட்ட குற்றவாளி அக்கடு மொழிகளைப் பொறுக்க மாட்டாதவனாய்ப் பலமுறை தான் யாதொரு பாவமும் செய்தறியாதவன் என்று கூறினான். ஜூரியும் நியாயாதிபதியும் அவன் ஈரமில்லாக் கன்னெஞ்சத்தையுடைய பாவி என்று தீர்மானித்து விட்டார்கள்.

விசாரணை முடிந்து தீர்ப்புச் சொல்லும்போது ஆறுமணி ஆகிவிட்டது. மழைகாலமாகையால், வெளியே எங்கும் இருள்சூழ்ந்துவிட்டது. கோர்ட்டில் ஜனங்கள் திரண்டு கூடியிருந்தனர். ஜூரியின் தலைவன் குற்றஞ் சாட்டப்பட்டவன் குற்றவாளிதான் என்று கூறினான். நியாயாதிபதி அவர்கள் தீர்மானத்தை ஒப்புக்கொண்டு, குற்நவாளியின் உயிர் போகும் வரையில் அவனைத் தூக்கிலிட்டுத் தொங்கவிடவேண்டுமென்று கூறி மரணதண்டனை விதித்தார்.

"நான் நிரபராதி. நான் யாதொரு குற்றமும் செய்யவில்லை. நான் மரிக்கப் பயப்படவில்லை. ஆனால் என்னைப்போன்ற மனிதர்கள் நான் கொலைக்குற்றஞ் செய்ததாக எண்ணுவதுதான் என் மனத்தில் மிகுந்த துக்கத்தை விளைவிக்கிறது. நான் இக்கொடிய குற்றத்தைச் செய்யவில்லையென்று சத்தியமாய்ச் சொல்லுகிறேன். நான் சொல்வது சத்தியமென்று நிரூபிக்க எனக்குச் சிறிது காலம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். அக்காலத்துக்குள் நான் நிரூபிக்காவிட்டால், உங்கள் இஷ்டப்படி என்னைத் தூக்கிவிட்டுக் கொல்லுங்கள்! எனக்கு மரணம் ப்ரமாதமில்லை" என்று கூவினான் 25-ம் நம்பர் கைதி.

அவனது மொழிகள் எவர் செவியிலும் ஏறவில்லை. இரண்டு போலீஸ்காரர்கள் அவனைப் பிடித்துக் கூட்டிலுள்ள படிக்கட்டின் வழியாகக் கீழேயிறக்கி, கோர்ட்டு வாசலில் நின்ற சிறைச்சாலை வண்டியிலேற்றிச் சிறைச்சாலைக்குக் கொண்டுபோய், மரண தண்டனையடைந்தவர்களை அடைக்கும் அறைகளில் ஒன்றில் அடைத்தார்கள்.

25-ம் நம்பர் கைதி என்னும் சிறைச்சாலைப் பெயரைப் பெற்ற விநோதப்ரிய வீராசாமி முதலியார் தமது அறையின் இருப்புப்பட்டமடித்த கதவின் கனத்தையும், சுவரின் உச்சியிலுள்ள சிறு ஜன்னலின் கம்பிகளின் கனத்தையும், பார்த்துப் பெருமூச் செறிந்தார்; தரையில் விரித்திருந்த கம்பளியின்மீது உட்கார்ந்தார்; கம்பளியை இலக்ஷியஞ் செய்யாத தரையின் சீதளத்தினாலும் ஜன்னலின் வழியே வீசிய குளிர்காற்றினாலும் அவர் தேகம் நடுங்கிற்று; தாம் ஒரு குற்றமும் செய்யாமலிருந்தும் தமது பிராணனுக்குக் கேடுவிளையும்படி செய்த தமது கொடிய விதியை நொந்துகொண்டு, கலங்கிச் சுற்றிய தமது தலையை இரு கைகளினாலும் பிடித்துக்கொண்டு பெருமூச்செறிந்தார்.

அச்சமயத்தில் அவ் வறைக் கதவின் புறமாயுள்ள நடையில் போய்க்கொண்டிருந்த காவலாளன் (வார்டர்) ஒருவன் அவ் வறைக் கதவிலிருந்த ஒரு சதுர அடியுள்ளதும் இருப்புக் கம்பி போட்டதுமான துவாரத்தின் வழியாக உள்ளே பார்த்தான். சிறைச்சாலையில் அடைக்கப்பட்டது முதல் யாதொரு சேஷ்டையும் செய்யாமல் அமரிக்கையாக நடந்து வந்த வீராசாமி முதலியார் அன்று கோர்ட்டில் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டவுடன் கட்டுப்பாட்டையொழித்துக் கூவியதைக் கேட்டுக் கொண்டிருந்த அந்தக் காவலாளன் அவர் சொன்னது உண்மையாகவிருக்கலாமென்று எண்ணி அவரிடத்தில் அநுதாபமுற்றான். அத்துவாரத்தின் வழியாக உள்ளே பார்த்தபோது, துக்கத்தின் உருவமாய்த் தோன்றிய அவரைக் கண்டு, அவன் பின்னும் அவரிடம் அதிக அநுதாபமுற்று, "25-ம் நம்பர்! உனக்கு ஏதேனும் வேண்டுமா?" என்று கேட்டான். "எனக்கு வேண்டுவது நியாயந்தான்!" என்றார் அவர்.

காவலாளன் ஆலோசித்தான். அவன் வீராசாமி முதலியாருடைய கேஸ் விசாரணைக்கு வந்தது முதல் முடியும் வரையில் அவருடன் சிறைச்சாலைவண்டியில் தினந்தோறும் சென்று நாள் முழுவதும் கோர்ட்டிலேயே இருந்து வந்தவனாகையால், அவர் கேஸில் ஏற்பட்ட சாக்ஷியங்களெல்லாம் அவனுக்கு நன்றாய்த் தெரியம். வீராசாமி முதலியார் அக்கானைட் (Aconite) என்னும் விஷத்தை ஓர் மருந்துக் கம்பெனியில் வாங்கினார். அவர் தமது இரக்ஷணையிலிருந்த இறந்த பையனுக்கு அடிக்கடி பன் என்னும் ஒருவகை ரொட்டி வாங்கிக் கொடுப்பது வழக்கம். அவ்வித ரொட்டியின்மீது அப்பையனுக்கு மிகுந்த பிரியம். அப்பையன் இறந்தபின் அவனது தேகத்தை அறுத்துப் பரீக்ஷை பண்ணிப் பார்த்ததில், அந்த ரொட்டியில் அக்கானிடின் என்னும் விஷம் கலக்கப்பட்டதென்றும், அந்த ரொட்டியில் சேர்க்கப்பட்ட திராக்ஷைப் பழங்களில் அந்த விஷமானது குத்திச் செலுத்தப்பட்டதென்றும், அந்த ரொட்டியானது விள்ளப்பட்டுத் துண்டுகளாக அப்பையனுக்குக் கொடுக்கப்பட்டதென்றும் வெளியாயிற்று. அந்தப் பையன் இறந்துபோனால், வீராசாமி முதலியாருக்குப் பெரிய எஸ்டேட் கிடைக்குமாதலால், அவனைக் கொல்லவேண்டுமென்ற இச்சை அவர் மனத்தில் உதிப்பதற்குப் பலமான காரணமு மிருந்தது. அன்றியும், வீராசாமி முதலியார் தமது பொழுது முழுவதையும் சூதாட்டத்திலும், நாடகம், பயாஸ்கோப்,

ஸர்க்கஸ் முதலியவைகளைப் பார்ப்பதிலும், விலையுயர்ந்த போஜன பதார்த்தங்களும் சாராயங்களும் விற்கும் ஆங்கில ஹோட்டல்களில் போஜனஞ் செய்வதிலும் அவைகளுக்குத் தக்க தோழர்களுடன் உல்லாசமாய்க்கழித்து, அது காரணமாக விநோதப்ரிய வீராசாமி முதலியார் என்னும் பட்டப்பெயரும் பெற்றிருந்தாராகையால், அவருக்கு மனச்சாக்ஷியென்பது இருக்கக்கூடுமென்றும், அவர் தருமத்துக்கும் நியாயத்துக்கும் கட்டுப்பட்டும் பாவத்துக்கு அஞ்சியும் நடப்பாரென்றும் எண்ணுவதற்கு இடமில்லாமலிருந்தது. அதுவுமல்லாமல், அவர் தமது சொற்பச் சொத்து முழுவதையும் மேற்கூறிய வழிகளில் செலவழித்துவிட்டு, அநேக மார்வாரிகளினிடம் மிகவும் உயர்ந்தவட்டிக்கு ஏராளமானபொருள் கடன் வாங்கியிருந்ததனால், அவர்கள் கடனைத் திருப்பிக் கொடுக்கும்படி நெருக்கிவந்தார்கள். அத்தொந்தரவைப் பொறுக்க முடியாமல் அவனை அவர் கொன்றிருக்கலாமென்று எண்ணுவதற்கும் இடமிருந்தது.

சாக்ஷியங்கள் இவ்வளவு பலமாயும் தெளிவாயும் இருக்க, இவர் தாம் குற்றவாளியல்லவென்று சொல்லுவது உண்மையாக இருப்பதற்கு இடமுண்டோ வென்று காவலாளன் ஆலோசித்தான். பிறகு அவன், "ஐயா! நீர் குற்றவாளியென்று நிரூபிப்பதற்குச் சாக்ஷியங்கள் எப்படி அவ்வளவு தெளிவாய் ஏற்பட்டன ?" என்று கேட்டான். அதற்கு வீராசாமி முதலியார், "ஐயா ! சாக்ஷியங்கள் எல்லாம் உண்மையே யெனினும், அவைகள் நான் குற்றவாளியென்று நிரூபிக்கவேயில்லை. விதியை வெல்ல யாரால் முடியும் ? தாயின் அன்பு எப்படிப்பட்டதென்று அறியாதவன் நான். என் சிறிய தகப்பனார்தான் என்னை எடுத்து வளர்த்தார். அவருக்கு என்னிடத்திலிருந்த அன்புக்கு அளவேயில்லை. அவர் எனக்குச் சொத்து எழுதிவைக்காததற்குக்காரணம் என்னவெனில், அவர் அருமைக் குழந்தை இருபது வயதுக்குமேல் உயிர் வாழமாட்டானென்று அவர் பரிபூரணமாக நம்பியதுதான். எனக்குத் தாயுந் தந்தையுமாயிருந்த அவருடைய அருமைக் குழந்தையை நான் கொன்றதாக எல்லோரும் நம்புகிறார்களே, அதுவே என்னை வெயிலிற்பட்ட புழுவைப்போல் துடிக்கச் செய்கிறது !" என்று மறுமொழி கூறினார்.

காவலாளன் மனம் கரைந்தது "ஐயா ! தங்களிடத்தில் அன்புள்ளவர்—தங்களைப்பற்றிக் கவலைப்படுபவர்—எவரும் இல்லையோ ?" என்று அவன் கேட்டான். "என்னையும் என் சிறிய தகப்பனார் பிள்ளையையும் வளர்த்த தாதிக் கிழவி ஒருத்திதான் என்னைப்பற்றிக் கவலைப்படக்கூடியவள் !" என்று அவர் கூறினார். அவர் கண்களினின்றும் கண்ணீர் ஆறாய்ப் பெருகிற்று. காவலாளன் நடைப் புறமாகத் திரும்பிப்பார்த்துவிட்டு, வீராசாமி முதலியார் இருந்த அறையின் கதவை மெல்லத் திறந்துகொண்டு உள்ளே வந்து கதவின்புறத்தில் நின்றுகொண்டு, "ஐயா! அத் தாதியினிடம் ஏதேனும் சொல்லவேண்டுமானால் சொல்லுங்கள். நான் போய் அவளிடம் சொல்லுகிறேன்" என்றான்.

அச்சமயத்தில் யாரோ நடந்துவரும் சத்தம் கேட்டது. திடீரென்று "திருட்டுப்பயலே! இதோ உன்னைத் தொலைத்தேன், பார் !" என்று ஒரு காவலாளன் கூவினான். இருவர் ஒருவரையொருவர் கட்டித் தரையிற் புரளும் சத்தம் கேட்டது. வீராசாமி முதலியாரின் அறையிலிருந்த காவலாளன் வழிநடையை எட்டிப்பார்த்தான். பத்தடி தூரத்துக்கப்பால் ஒரு காவலாளனும் ஒரு பலசாலியான கைதியும் ஒருவரை யொருவர் கட்டிப் புரண்டுகொண்டிருந்தார்கள். காவலாளன் ஒருவன் ஒரு கைதியை அவனது அறைக்குக் கொண்டு போகுங்கால், சாதுவாய் வந்துகொண்டிருந்தவன் திடீரென்று திரும்பிக் காவலாளனை எதிர்த்தான் போலும்! வீராசாமி முதலியாரின் அறையிலிருந்த காவலாளன் அக்கைதி மேலும் அக்காவலாளன் கீழுமாக இருப்பதைக்கண்டு, அக்காவலாளனது அபாயமான நிலைமையைப்பற்றி யோஜித்ததனால் வீராசாமி முதலியாரின் அறையின் கதவு திறந்திருந்ததை முற்றிலும் மறந்து, அவர்களிருவரும் கட்டிப் புரண்டுகொண்டிருந்த இடத்துக்கு விரைந்து ஓடினான்.

தமது அறையிலிருந்த காவலாளன் அறைக் கதவைத் திறந்து வைத்துவிட்டு ஓடியதும், தாம் குற்றவாளியல்லவென்று நிரூபிப்பதற்கு வேண்டிய காலம் கிடைப்பதற்காகத் தெய்வ

மே உதவியதாகக் கருதிய வீராசாமி முதலியார் தமது அறையிலிருந்து வேகமாய் வெளியே பாய்ந்து, மங்கின வெளிச்சமுள்ள வழி நடையோடு விரைந்து நடந்து, அதன் முடிவிலுள்ள பெரிய கதவை யடைந்தார். அக்கதவிலுள்ள திட்டிவாசற் கதவு திறந்திருந்தது. அங்கு காவலாளர் ஒருவருமில்லை. வீராசாமி முதலியார் திட்டிவாசல் வழியாகச் சென்று ஒரு பெரிய அறையை அடைந்தார். அங்கு காவலாளர் அணிந்துகொள்ளும் உடுப்புக்கள் சுவரிலுள்ள முளைகளிலிருந்து தொங்கிக்கொண்டிருந்தன. க்ஷணநேரத்தில் வீராசாமி முதலியார் அவ்வுடைகளிலொன்றை எடுத்து அணிந்துகொண்டு, ஒரு சிறு படிக்கட்டின் வழியாக ஏறி, நாலைந்துபேர்கள் எழுதிக்கொண்டிருந்த பெரியகூடத்தின் வழியாக அமரிக்கையுடன் நடந்து, துப்பாக்கி ஈட்டிகளுடன் இரண்டு சேவகர்கள் காவலாக நின்ற தலைவாசற்படியை அலக்ஷியமாகக் கடந்து, வீதியை யடைந்து, சிறிதுதூரம் மெல்லநடந்து, பிறகு வெகுவேகமாய் ஸென்ட்ரல் ஸ்டேஷனுக்குச் சென்று, அங்கு நின்ற குதிரைவண்டிகளில் ஒன்றில் ஏறிக்கொண்டு, "தம்பீ! இராயபுரம் பெண்பிள்ளை ஆஸ்பத்திரிக்குப் பக்கத்தில் சிறு பங்களாவொன்று இருக்கிறதே, அதற்குச் சீக்கிரம் போகவேண்டும். வேகமாய் ஓட்டு, பார்ப்போம்!" என்றார். "ஓ! அந்த பங்களாவா? இன்றைக்கு முடிவாச்சே, அந்தக் கொலைகேஸில் கொல்லப்பட்ட பையனுடைய தாதிக்கிழவி அதில் வசிக்கிறாள். அந்தப் பங்களாதானே? இதோ ஒரு நிமிஷத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கிறேன். பாவம்! அந்தக் கிழவிக்கு உடம்பு சரியாயில்லாததனால், அவள் சாக்ஷி சொல்லக் கோர்ட்டுக்கு வரமுடியவில்லையாம்!" என்று சொல்லிக்கொண்டே குதிரையைச் சவுக்கினால் நன்றாய் அடித்து ஓட்டினான். வண்டி வெகுவேகமாய்ச் சென்று பதினைந்து நிமிஷத்தில் அந்தப் பங்களாவை யடைந்தது. வீராசாமி முதலியார், "அப்பா! சற்றுப்பொறு, உள்ளே போய்ச் சில்லறை கொண்டுவருகிறேன்!" என்று வண்டிக்காரனிடம் சொல்லிவிட்டு அப்பங்களாவுக்குள்ளே சென்றார்.

நிமிஷ நேரத்தில் தாதிக் கிழவியே வந்து வண்டிக்காரனுக்குக் கூலி கொடுத்தாள். அவள் தேக முழுவதும் நடுங்கிக்கொண்டிருந்தது. அவள் வாய் திறந்து ஒரு வார்த்தையும் பேசவில்லை. கடுமையான ஜ்வரம் அடித்து அப்பொழுது தான் அவளுக்கு உடம்பு சற்றுச் சௌக்கியமாயிருந்தபடியால் பலஹீனத்தினால் அவள் தேகம் நடுங்குகிறதென்று எண்ணி அவளிடம் அநுதாபப்பட்டுக் கொண்டும், சிறைச்சாலை காவலாளனுக்கு அந்நேரத்தில் அக்கிழவியினிடம் என்ன வேலை இருக்கமுடியுமென்று ஆச்சரியப்பட்டுக்கொண்டும் வண்டிக்காரன் அவ்விடம் விட்டகன்றான்.

II

பங்களாவுக்குள் வேலை வெகு துரிதமாய் நடந்தது. வீராசாமி முதலியார் வெண்மை நிறமுள்ள மேனியை யுடையவர். அவர் தலைமயிரும் மீசைகளும் செம்பட்டை நிறமுள்ளவை. தாதிக் கிழவி ஏதோ தைலத்தைப் பூசி அவர் தேகமும் தலைமயிரும் மீசைகளும் கருத்த நிறமுடையவைகளாக ஆகும்படி செய்துவிட்டாள். பிறகு அவர் அப்பங்களாவில் தாம் வைத்திருந்த உடை யொன்றை யெடுத்து அணிந்து கொண்டார். தாதிக் கிழவி கொஞ்சம் பணமுள்ள பையை அவரிடம் கொடுத்து, "கண்ணே! பத்திரமாய்ப் போ! கண்ணுக்கெட்டாத சீமைக்குப் போய் எனக்குத் தெரிவி, பணம் சேகரித்து அனுப்புகிறேன். பையா! என் முத்தையா! போய்வருகிறாயா?" என்று நாக்குழறக் கூறி, அவரை யிறுகக் கட்டிக்கொண்டு கண்ணீர் சொரிந்தாள். வீராசாமி முதலியார் கண்களிலும் நீர் ததும்பிற்று. "அம்மா! வேறு தாயை அறியாத எனக்குத் தாயாக விருந்து என்னை வளர்த்த உனக்குத்தான் என் குணம் தெரியும். நமது பையனை நான் கொன்றேன் என்று சொல்லி என்னைத் தண்டித்தார்களே, இது அடுக்குமா? எப்படியாவது இந்தப் பழியை விலக்கிக் கொள்கிறேன். நேரமாகிறது; போய்வருகிறேன். புத்தியீனனாகிய எனக்காக வருந்தாதே; அம்மா!" என்று சொல்லிவிட்டுத் துயரத்துடன் அப்பங்களாவை விட்டகன்றார்.

ஷண்முக சுந்தரம் அல்லது காதல் தீபம்.—உயர்தரமான துப்பறியும் இனிய நாவல். ஆர்ட் பேபரில் அச்சிட்ட எட்டு அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது. உயர்தரமான பயிண்ட், விலை ரு. 2.

# ஞானசௌந்தரி

அல்லது

## சுபாங்கியின் சுயம்வரம்

[ஸ்ரீமான் ஐ. சுந்தரம் அவர்கள், பி.ஏ.,பி.எல்.,]

### மூன்றும் அதிகாரம்

#### இங்கிலீஷ் படிப்பின் உபயோகம்

மகாதேவன் தகப்பனார், கோடியகத்து நாராயணய்யர். ஊஞ்சலூரில் அவர் ஒரு பெரிய பட்டாதார். கிராமாந்தரங்களில் பெரிய பட்டாதார்களாக இருப்பவர்களுக்கும்,-சிறிய பட்டாதார்களுக்குங்கூட—வாய்க்கால் வரப்புச் சண்டைகளும் மற்றும் எண்ணிறந்த சில்லரை வியவகாரங்களும் ஓய்வு ஒழிவில்லாமல் இருந்துகொண்டே யிருப்பது வழக்கம். அவர்கள் வீட்டுப் பெட்டிகளில் மற்ற ஐசுவரியம் குறைவாக இருந்தாலும், வியாச்சியக் கட்டு மட்டும் ஒரு குறைவுமில்லாமல் பெட்டி நிறைய இருக்கும். இந்த தருமத்தை யனுசரித்தே நாராயணய்யரும் ஓயாமல் வியாச்சியங்களில் தலையிட்டுக்கொண்டு இருந்தார். உள்ளூரில் அவருக்கு சரிசமானமான அந்தஸ்துள்ள எதிரிகள் ஒருவரும் இல்லை. அவருடைய பெரிய வியவகாரங்களெல்லாம் அடுத்தவூர் ராமாநுஜ நாயக்கருடன்தான். இவ்விருவரும் ஒருவர்மேல் ஒருவர் நடத்திய சிவில் கிரிமினல் வியவகாரங்களையெல்லாம் விஸ்தாரமாக எடுத்து எழுதுவதானால் ஒரு பாரதமல்ல, நூறு பாரதமாகும். நாராயணய்யருடைய திருசிராப்பள்ளி வக்கீல் சேஷய்யங்கார், நாராயணய்யர் கேசுகளுக்காகவென்றே பிரத்தியேகமாக ஒரு குமாஸ்தாவும், இரண்டு குட்டி குமாஸ்தாக்களும் அமர்த்தியிருந்தார். நாராயணய்யருக்கும், ராமாநுஜ நாயக்கருக்கும் பல சில்லரை வியாஜ்யங்கள் நடந்து அவைகளில் அநேகமாய் எல்லாவற்றிலும் நாராயணய்யரே வெற்றி பெற்றார். ராமாநுஜ நாயக்கர் எதிரியை ஒரே அமுக்காய் அமுக்கிவிட சமயம் பார்த்துக்கொண் டிருந்தார். அவர் எண்ணப்படி சமயமும் கிடைத்தது. ராமாநுஜ நாயக்கரின் ஆப்த சிநேகிதாகிய போலீஸ் இன்ஸ்பெக்டர் வேங்கிடகிருஷ்ணய்யங்கார் அந்தப் பிராந்தியத்துக்கு மாற்றப்பட்டார். அவர் வேலை ஒப்புக்கொண்டு சில மாதங்களானதும் ராமாநுஜ நாயகர் வீட்டில் ஒரு கூட்டுக் கொள்ளை நடந்து, அவர் வீட்டிலுள்ள பணம், நெல், வெள்ளிப் பாத்திரங்கள் எல்லாவற்றையும் திருடர்கள் கொள்ளையிட்டுக்கொண்டு போய்விட்டார்கள். நாராயணய்யருடைய ஏவுதலின்பேரில்தான் தன் வீட்டில் கொள்ளை நடந்ததென்று ராமாநுஜ நாயக்கர் போலீஸாரிடம் வாக்குமூலம் கொடுக்கவே, ஐயருக்கு சனியன் பிடித்துவிட்டது. இன்ஸ்பெக்டர் வேங்கிடகிருஷ்ணய்யங்கார் நாராயணய்யரைக் கைது செய்து கொட்டடியில் அடைத்துவிட்டார். நாராயணய்யர், அவர் வக்கீல் மூலமாக இதுபோன்ற சமயங்களில் செய்யவேண்டிய தந்திரங்களெல்லாம் செய்துபார்த்தும் வேங்கிடகிருஷ்ணய்யங்காரிடமிருந்து தப்ப முடியவில்லை. அக்கம்பக்கத்துக் கிராமங்களிலுள்ள பெரிய மிராசுதார்களைக் கொண்டு இன்ஸ்பெக்டரிடமும் ராமாநுஜ நாயக்கரிடமும் சிபார்சு செய்யச் சொல்லிப் பார்த்தார். அதிலும் பிரயோஜனப்படவில்லை. முடிவில் வேறு வழியில்லை என்று தெரிந்து ராமாநுஜ நாயக்கரை நேரில் கண்டு பேசவிரும்புவதாகச் சொல்லி அனுப்பினார். ராமாநுஜ நாயக்கரும் போலீஸ் கொட்டடிக்கு வந்தார். நாராயணய்யர் தன் கைதாழ்ந்து விட்டதென்று ஒப்புக்கொண்டு நாயக்கருடைய சிநேகத்தைப்பெற ரொம்பவும் ஆசைகொண்டதாகச் சொல்லி, தன்பேரில் நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்ளும்படி கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். அதன்மேல் நாயக்கரும் அதற்கிசைந்தார். போலீஸ் இன்ஸ்பெக்டர் நாராயணய்யரை விட்டுவிட்டு திருடர்களை மட்டும் சார்ஜு செய்தார். நாராயணய்யருக்குப் போலீஸ் இன்ஸ்பெக்டர் உத்தியோகம் உலகத்திலுள்ள மற்ற எல்லா உத்தியோகங்களைக் காட்டிலும் மேன்மையானது எனத்தோன்றிற்று. இதுவரை தாழ்வடையாமல் ராமாநுஜ நாயக்கருடன் யுத்தம் செய்துவந்தும் இப்போது நாயக்கருக்குமுன் தன் கை தாழ்ந்ததற்குக் காரணம், நாயகர் போலீஸ் இன்ஸ்பெக்டருடைய சிநேகத்தை அடைந்திருந்ததுதான் என்று ஏற்பட்டது. தமது ஒரே மகன் இங்கிலீஷ் படித்து போலீஸ் இன்ஸ்பெக்டர் உத்தியோகம் வகிக்கும்படி செய்வதுதான், தன் மகனுக்குத் தான்

செய்யவேண்டிய முக்கிய கடமை என்று நாராயணய்யர் தீர்மானித்து, மகாதேவனை அந்த உத்தேசத்தின்மேல் இங்கிலீஷ் படிக்க அனுப்பினார். மகாதேவன் படித்துப் பரீக்ஷைகளில் தேறிவந்தான். ஒவ்வொரு பரீக்ஷை தேறும்பொழுதும் நாராயணய்யர் தன் மகன் போலீஸ் இன்ஸ்பெக்டர் உத்தியோகம் வகிக்கக்கூடிய காலம் சமீபித்துவிட்டதாகக் கருதி மகிழ்ந்தார். மகன் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆன பிற்பாடு, ராமாநுஜ நாயகரைத் தகுந்தபடி அவமானம் செய்துவிடலாம் என்பது அவர் எண்ணம். ஆனால் என்ன சுறுசுறுப்பாய் மகாதேவன் படித்தாலும், எல்லாப் பரீக்ஷைகளிலும் தேறும்வரையில் பொறுத்திருப்பது நாராயணய்யருக்கு சாத்தியமாகக் காணப்படவில்லை. திருட்டுக் கேசிலிருந்து தப்பித்துக்கொண்டபிறகு சுமார் மூன்றுமாத காலம்தான் நாராயணய்யர் கோர்ட்டுகள் பக்கத்தை நாடாமலிருந்தார். அந்த மூன்று மாதமும் அவருக்கு அன்ன ஆகாரமில்லாமல் இருப்பது போலிருந்தது. பிறகு யதாபூர்வம் தமது தருமத்தை ஆரம்பித்துவிட்டார். இராமாநுஜ நாயகரோடு சிநேகிதராகப் போய்விட்டபடியால் முதலில் சில வருஷங்கள் உள்ளூர் எதிரிகளோடுதான் வியவகாரம். இந்த வியவகாரங்களாலெல்லாம் நாராயணய்யருக்கு முழுத் திருப்தி யுண்டாகவில்லை. ஆகவே ராமாநுஜ நாயக்கரை மறுபடியும் வலுச்சண்டைக்கிழுக்க வாரம்பித்தார். அதனால் ஏற்பட்ட விபரீதங்களைப் பற்றிப் பின் ஒரு அதிகாரத்தில் விவரிப்போம்.

---

## நான்காம் அதிகாரம்

### ஹாஸ்டல் வாசம்

சபாபதி ஐயர் வீட்டுக் கலியாணத்திற்கு வந்திருந்தபொழுது மகாதேவன் காலேஜியில் கோடை விடுமுறை. விடுமுறைநாள் கழிந்ததும் மகாதேவன் திருச்சிராப்பள்ளிக்குத் திரும்பிப்போனான். அவ்வூர் காலேஜிகளில் ஒன்றைச் சேர்ந்த ஹாஸ்டல் என்று சொல்லும் மாணாக்கர்கள் விடுதியில் வசித்துக்கொண்டு காலேஜியில் படித்துக்கொண்டிருந்தான். விடுமுறை நாட்கள் கழிந்ததும் அந்த ஹாஸ்டலில் வசித்து வந்த மற்ற மாணாக்கர்களும் திரும்பிவர, ஹாஸ்டலும் தூக்கந்தெளிந்து எழுந்தது. மகாதேவனோடு ஒரே அறையில் வசித்த வேங்கடராமன் என்கிற பையன் மட்டும் ஒருவாரம் தாமதித்து வந்தான்.

ஹாஸ்டல் பிரதான சமையற்காரன் சாம்பையன், கரண்டி சாஸ்திரத்தில் வெகு தேர்ச்சி பெற்றவன். சாம்பையன் பக்குவம் எதுவும் ஒரு தனிருசி. ஹாஸ்டல் சமையலறைக்கு முப்பதடி தூரத்தில் வரும்பொழுதே அவ்வறையிலிருந்து கிளம்பும் திவ்விய வாசனை வயிற்றுவலிக்காரனுக்குக் கூட பேரானந்த முண்டாக்கிப் பசி மூட்டும். ஒருக்கால் சமையல் செய்வதில் சாம்பையனுக்கு சமானமானவர் தமிழ்நாட்டில் வேறு ஒருவர் இருந்தாலும் இருக்கலாம். பரிமாறுவதில் அவருக்கு சமானமானவர் ஒருவருமே இல்லையென்று நிச்சயமாய்ச் சொல்லிவிடலாம். பாடங்களை அரை குறையாகப் படித்துவிட்டு எங்கே மணியாகி விடுகிறதோ என்ற பெருங்கவலையுடன் அவசர அவசரமாய் இலையில் வந்து உட்கார்ந்துகொண்டு அள்ளிப் போட்டுக்கொண்டு ஓடிப் போய்விடும் மாணாக்கர்களுக்கு அவரவர் ருசியறிந்து வயிறார சாப்பிடும்படி பரிமாறும் சாதுரியம் சாம்பையனைத் தவிர வேறு ஒருவருக்கும் வராது. இடது கையில் புத்தகத்தை வைத்துக்கொண்டு அதைப் பார்த்துக்கொண்டே சாப்பிடும் சாமிநாதனுக்கு சாம்பையனைத் தவிர்த்து வேறு யார் பரிமாறினாலும் அரை வயிறுதான். ஷர்ட், காலர், கோட் இவைகளை யெல்லா மணிந்து காலேஜுக்குப் போகச் சித்தமாய் வந்து உட்காரும் முத்துசாமி சாப்பாடு குறைந்தாலும், உடை கலுங்கக்கூடாதென்று தலைகுனியாமலே சாப்பிடுவது வழக்கம். அவனுக்கு உடையும் கலுங்காமல் வயிறும் நிரம்பும்படிப் பரிமாறும் தந்திரம் சாம்பையன் ஒருவனுக்குத்தான் தெரியும். ஒரு சமயம் சொந்த அலுவலில் சாம்பையன் மானூர் போக நேர்ந்தது. அவன் போய்த் திரும்புவதற்கு இரண்டு வாரம் பிடித்தது. கணேசையன் என்ற சமையற்காரன் சாம்பையனுக்கு பதிலாகத் தான் வேலை பார்ப்பதாக ஒப்புக்கொண்டான். அந்த இரண்டு வாரமும் சமையலெல்லாம் அரைவேக்காடுதான். பையன்களுக்கு சாப்பாடும் அரை வயிறுதான். இலையில் போட்டதற்குமேல் அதிகம் வேண்டுமென்று கேட்பது நாகரிகமற்ற வழக்கமெ

ன்று நினைக்கும் வேங்கடராமன், கோபாலன் முதலான பையன்கள்கூட அடிக்கடி மறுபடி கொண்டுவரச் சொல்லிக் கேட்கும்படி செய்து விட்டது கணேசய்யனுடைய பரிமாறும் திறமை. அதிகமாகச் சொல்லுவானேன்? சாம்பையன் திரும்பி வந்ததும் எல்லாப் பையன்களுக்கும் காணாதது கண்டதுபோல் இருந்தது.

வேங்கடராமன் திருசிராப்பள்ளிக்கு வந்த மறுநாள் மத்தியானம், வழக்கம்போல் பையன்கள் சாப்பாட்டுக்கு உட்கார்ந்தார்கள். ஸ்ரீநிவாஸன் என்ற ஒரு மாணுக்கன் வேங்கடராமனைப் பார்த்து, "என்ன, இத்தனை நாள் தாமதம்? உனக்குமட்டும் காலேஜ் தனியாக ஒருவாரந் தள்ளித் திறக்கிறார்களோ?" என்று கேட்டான். வேங்கடராமன் பதில் சொல்லவில்லை.

உடனே முத்துசாமி, "என்ன பதில் கூட சொல்ல முடியவில்லை? லீவுக்குப் போய்வருவதற்குள் பெரிய மனுஷனாய்ப் போய்விட்டாயோ?" என்றான்.

மகாதேவன், "ஆமாம். அப்படித்தான். இருந்தாலும் நமக்கெல்லாம் முன்னாலேயே சொல்லாமல் இருந்ததற்குத்தான் காரணம் ஒன்றும் சொல்லமுடியவில்லை" என்றான்.

"என்ன, அப்படித்தான் என்கிறாய்? எப்படியப்பா வேங்கடராமன் பெரிய மனுஷனானான்? உயரங்கூட முன்போலவே தானிருக்கிறது" என்றான் ஸ்ரீநிவாஸன்.

மகாதேவன், "அவனையே கேள்" என்றான்.

வேங்கடராமன்:—"சும்மா பரிகாசம் செய்யாதீர்கள். வேறு ஒன்றுமில்லை; கலயாணம்" என்றான்.

ஸ்ரீநிவாஸன்:—"அப்படியா சங்கதி! இதைச் சொல்வதற்கு இவ்வளவு பிகு என்ன? பெண் எந்த ஊர்?" என்று கேட்டான்.

"மதுரையில்" என்றான் வேங்கடராமன்.

முத்துசாமி:—"அப்படியா. சந்தோஷம் தான். என்னை நீ அண்ணா, அண்ணாவென்று கூப்பிடுகிறாயே, எனக்குக்கூட ஏன் ஒரு கடிதம் எழுதாமல் இருந்துவிட்டாய்?" என்றான்.

"ஒரே ரூமில் இருக்கும் எனக்கே எழுதவில்லையே" என்றான் மகாதேவன்.

"எங்களையெல்லாம் அழைத்தால் நாங்கள் உன் மாமனார் வீட்டில் வந்து நாலுநாள் தண்டியாய் சாப்பிட்டு அவருக்கு நஷ்டம் உண்டு பண்ணிவிடுவோம் என்ற பயமோ?" என்றான் ஸ்ரீநிவாஸன்.

"சேச்சே அதற்கெல்லாம் அவன் பயந்தவனல்ல. அவன் பெண்டாட்டியை நாம் பார்த்துவிடக்கூடா தென்றுதான் ரகசியமாகக் கல்யாணம் செய்துகொண்டான்" என்றான் முத்துசாமி.

"சரிதான். மதுரையில் எல்லோரும் கோஷா என்பது தெரியாமல் கேட்டுவிட்டேன்" என்றான் ஸ்ரீநிவாஸன்.

வேங்கடராமன்:—"நீங்களெல்லோரும் வாராமல் கல்யாணம் நடக்கும்படி நேர்ந்தது எனக்கே வருத்தந்தான். உங்களுக்கு எல்லோருக்கும் விவாகப் பத்திரிகை அனுப்புவதற்கு சரிப்படாமல் போய்விட்டது. சரிப்பட்டிருந்தால் உங்களுக்கு எழுதாமல் இருப்பேனா?" என்றான்.

"அதென்னடா சரிப்படாமற் போய்விட்டது?" என்று கேட்டான் முத்துசாமி.

"அதெல்லாம் ஒரு பெரிய கதை. இப்போ சொல்லமுடியுமா? சாவகாசமாய் எல்லோருக்கும் சொல்லுகிறேன்" என்றான் வேங்கடராமன்.

"ஏன்? என்ன பொய் சொல்லலாம் என்று யோசித்து முடிக்கவில்லை போலிருக்கிறது. யோசித்து சாவகாசமாய்ச் சொல்லு. அது இருக்கட்டும். உன் பெண்டாட்டிக்கு என்ன வயது?" என்று கேட்டான் ஸ்ரீநிவாஸன்.

"நிச்சயமாய்ச் சொல்லமுடியவில்லை" என்றான் வேங்கடராமன்.

"உத்தேசமாகத்தான் சொல்லேன்" என்று மறுபடியும் கேட்டான் ஸ்ரீநிவாஸன்.

"ஒரே கணக்காய்ச் சொல்லிவிடேன். உன்னைவிட சிறியவளா பெரியவளா?" என்றான் முத்துசாமி.

இதைக் கேட்டதும் எல்லோரும் சிரித்தார்கள். சாமினாதன்கூட இடதுகையில் பிடித்திருந்த புத்தகத்தைக் கீழே வைத்துவிட்டு அண்ணாந்து பார்த்து சிரிப்பதுபோல் சிறிது பாவனை செய்தான்.

அதுவரை பேச்சில் கலந்து கொள்ளாமல் சாப்பாட்டையே கவனித்துக்கொண்டிருந்த

'சாப்பாட்டு ராமன்' என்று எல்லோராலும் அழைக்கப்படும் சுப்பராமன், "அதெல்லாம் இருக்கட்டும். மதுரைச் சமையல் எப்படி? நம் சாம்பையர் சமையலுக்கு சமானமாக இருக்குமா" என்று கேட்டான்.

கோபாலன்:—"அது மட்டும் இரவே இராது. மதுரையி லாகட்டும், வேறு எந்த டில்லியிலாகட்டும், நம் சாம்பையனுக்குச் சமானமான சமையற்காரன் அகப்படவே மாட்டான்" என்றான்.

வேங்கடராமனும், "வாஸ்தவமாய் சமையலில் நமது சாம்பையர் எம்.,ஏ., எல்.,டி., அல்லவா!" என்றான்.

உடனே சுந்தரம் என்ற ஒரு பையன் இவ்வளவையும், காதில் போட்டுக்கொண்டு பரிமாறிக்கொண்டு வந்த சாம்பையனைப் பார்த்து, "சாம்பையரே, இவ்வளவு சொன்னதற்காக வேங்கடராமனுக்கு இன்னும் ஒரு கரண்டி ரசம் போடும்" என்றான். சாம்பையனும், "மகாராஜா! எல்லாரும் ஊருக்குப்போய் உடம்புவாடிப் போயிருக்கிறது. ஒருமாதம் நான் பரிமாறி சாப்பிட்டப் பிறகுதான் தேகம் தேறி முன்போலாகும்" என்று சொல்லி வழக்கப்படி எல்லோருக்கும் தாராளமாய் பரிமாறிக்கொண்டே போனான்.

---

## ஐந்தாம் அதிகாரம்

### சிநேகம்

பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணக்கர்கள தேகப்பயிற்சிக்காகவும், உற்சாகத்துக்காகவும் விசேஷமாய் ஆடுவது உதைப்பந்தாட்டம். உதைப் பந்துப் போட்டி விளையாட்டுகள் நடக்குங் காலங்களில் மாணக்கர்களுக்கு உண்டாகும் உற்சாகம் சொல்லிமுடியாது. உதைப்பந்தாட்டத்தில் தேர்ச்சிபெற்ற பையன்களிடம் மாணக்கர்களுக்கு உயர்ந்த மதிப்பு. நமது கதாநாயகனுகிய மகாதேவன் உதைப்பந்தாட்டத்தில் நல்ல தேர்ச்சியடைந்த ஒரு உத்தம வீரன். ஆகவே இந்த ஆட்டத்தில் தேர்ந்த மற்ற வீரர்களுடன் நெருங்கப் பழக்கம் ஏற்பட்டது. காலேஜ் உதைப் பந்துக் கூட்டத் தலைவன் அருளானந்தம் என்ற கிறிஸ்தவப் பையன் மகாதேவனுக்கு முக்கிய சிநேகிதன். மகாதேவன் அருளானந்தம் வீட்டிற்கு அடிக்கடி போவதுண்டு. ஊஞ்சலூரிலிருந்து திரும்பி வந்து சுமார் ஒரு மாதகாலமான பிற்பாடு ஒரு நாள் உதைப்பந்துக் களத்தில் அருளானந்தமும் மகாதேவனும் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். பேச்சு முடிந்து இருவரும் பிரிவதற்கு முன் அருளானந்தம், "என்ன ஊருக்குப் போய்த் திரும்பி வந்ததும், பழைய சிநேகிதர்களை மறந்தே போய் விட்டாய் போலிருக்கின்றது. காலேஜ் திறந்து ஒரு மாதகாலமாகியும் நீ ஒரு நாள்கூட நமது வீட்டிற்கு வரவில்லை." என்றான் மகாதேவன், "என்ன அருளானந்தம், நீ இப்படி சொல்லுவது நன்றாக இல்லை. அடுத்த ஞாயிற்றுக் கிழமை சாயங்காலம் கட்டாயம் உன் வீட்டுக்கு வருகிறேன்" என்றான்.

மேலே குறித்த சம்பாஷணை நடந்த தினத்திற்கு அடுத்த ஞாயிற்றுக்கிழமை மாலை மகாதேவன் அருளானந்தம் வீட்டுக்குப் போனான். அங்கு இருவரும் பேசிக்கொண்டிருக்கையில், "என்ன ஸார் மகாதேவய்யர், இன்றுவரையில் எங்கே ஒழியவில்லை போலிருக்கிறது. படிப்பு ரொம்ப மும்முரமோ?" என்று சொல்லிக்கொண்டே அருளானந்தம் தங்கை ஞானசௌந்தரி, அவர்கள் பேசிக் கொண்டிருந்த இடத்துக்கு வந்தாள்.

"நான் கண்டு கட்டாயப் படுத்தாவிட்டால் இன்றுகூட வந்திருக்கமாட்டான்" என்றான் அருளானந்தம்.

"வரவேண்டுமென்றுதான் நினைத்துக் கொண்டிருந்தேன். வேறு அலுவல் இருந்து கொண்டே இருந்தபடியால்தான் வரமுடியவில்லை" என்றான் மகாதேவன்.

"வேங்கடராமன் கலியாணம் செய்து கொண்டு வந்திருக்கிறானமே" என்றான் அருளானந்தம்.

"ஆமாம்" என்றான் மகாதேவன்.

ஞானசௌந்தரி:—"புதிதாய்க் கலியாணம் செய்து கொண்டிருக்கும் உங்கள் தோழருடைய மனைவிக்கு வயது என்ன இருக்கும்?" என்று கேட்டாள்.

"வயது என்ன பன்னிரண்டுக்கு மேலிராது" என்றான் மகாதேவன்.

"அதிருக்கட்டும். அவன் மாமனாரிடமிருந்து என்ன வாங்கினான்? பணம் தட்டுவது

---

முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட் கிறையென்று வைக்கப் படும்.

தான் உங்களில் கலியாணத்தின் முக்கிய மான கருத்து'' என்றான் அருளானந்தம்.

"அதைத்தான் அவன் என்னிடம் ஒளிக்கி றான். என்ன கேட்டாலும் ஒன்றும் சொல்லு கிறதில்லை'' என்றான் மகாதேவன்.

அருளானந்தம் கடிகாரத்தைப் பார்த்து விட்டு, "மகாதேவா, என் தகப்பனுருக்காக ஜங்க்ஷனுக்குப் போய் ஒரு சிறு காரியம் முடித்துக்கொண்டு அரைமணிக்குள் வருகி றேன். நான் வரும் வரையில் இங்கேயே இரு'' என்று சொல்லி எழுந்தான்.

மகாதேவன், "நானும் போய்விட்டு இன் னொரு நாள் சாவகாசமாய் வருகிறேன்'' என்று சொல்லி கூட எழுந்திருக்கவும்,

"என்னுடன் பேசிக்கொண்டிருப்பது உங் களுக்கு ரொம்ப கசப்பாயிருக்கிறப்போ லிருக் கிறதே'' என்றாள் ஞானசௌந்தரி.

மகாதேவன், "ஒருநாளும் அப்படியில்லை'' என்று சொல்லவும், ஞானசௌந்தரி, "இந்த வார்த்தை உண்மையானல் அண்ணன் திரும்பி வரும் வரையில் இங்கேயே இரும்'' என்றாள்.

மகாதேவன் மறுபடியும் உட்கார்ந்தான். இதற்குள் அருளானந்தம் புறப்பட்டுப் போய் விட்டான்.

ஞானசௌந்தரி:—"உங்கள் சிநேகிதர் ஒரு வருடைய கலியாணத்தைப் பற்றிப் பேசின பொழுது மாமனரிடமிருந்து, 'என்ன வாங்கி னர்' என்று அண்ணன் கேட்டானே. அது தான் கலியாணத்தின் முக்கிய கருத்து என் றும் சொன்னனே. அது என்ன ?'' என்று கேட்டாள்.

"மாமனரிடமிருந்து கலியாண காலத்தில் சீர், வரதக்ஷிணை இவைகள் பெறுவது வழக் கம். சிலர் பெருந்தொகைகள் வாங்கும் வழக் கமும் உண்டு. அதைத்தான் உன் அண்ணன் குறிப்பிட்டான்.''

"ஆனல் உங்களவருக்கு பெண்ணைக் காட் டிலும் பணந்தான் முக்கியமோ ?'' என்று புன்னகையுடன் வினவினள் ஞானசௌந்தரி.

"உன் அண்ண பரிகாசமாய்ப் பேசினன்'' என்றான் மகாதேவன்.

"உங்களுக்குள் கலியாணத்துக்கு முன், மணமகனும் மணமகளும் சந்திப்பதுகூடக் கிடையாதாமே?''

"அந்த துர்வழக்கம் எங்களுக்குள் இல்லை.''

"அப்படியா, பரஸ்பரம் சிறிதும் பரிச்சய மே யில்லாத இருவரைக் குழந்தைப் பருவத் தில் ஒருவருக்கொருவர் முடித்துவிடுகிற உயர்ந்த வழக்கந்தானே உங்கள் வழக்கம்.''

"எங்களுக்குள் கலியாணம் என்பது கேவ லம் சரீர ஆசைக்காகச் செய்வதல்ல.''

"அப்படியா ? ஆனல் எதற்காகத்தான் உங் களவர்கள் கலியாணம் செய்துகொள்ளுகிறார் கள் ?''

"எங்கள் கல்யாணம் ஒரு சமஸ்காரம்''

"நீங்கள் சொல்வது புரியவில்லை. அர்த் தம் புரியும்படி தமிழில் சொல்லுங்கள்.''

மகாதேவன், "'சம்ஸ்காரம்', என்பதின் உயர்ந்த நோக்கங்களையும், ஆழ்ந்த கருத்துக் களையும் எடுத்துச் சொல்வதானல் நேரம் பிடிக்கும். உனக்கும் புரியாது'' என்றான்.

"சீரென்றும், வரதக்ஷிணையென்றும் சொல் லிக்கொண்டு, கைகொண்டமட்டும் நகைகள், பாத்திரங்கள், பணம் இவைகளைப் பெறுவது தான் சம்ஸ்காரத்தின் முக்கியாம்சம் என்று தெரிகிறது. இவ்வளவு உயர்ந்த நோக்கம் என்னைப் போன்றவர்களுக்குப் புரியாதென்று நீங்கள் சொல்வது சரிதான். அது இருக் கட்டும். உங்கள் சிநேகிதர் மனைவி எவ்வளவு மட்டும் படித்திருக்கிறாள் ?''

"நன்றாய்ப் படித்தவள்தானும்.''

"உங்களுக்குள் பெண்களுக்கு வண்ணன் கணக்கு எழுதத் தெரிந்துவிட்டால் நன்றாய்ப் படித்தவர்கள் என்று பெயர் வாங்கிவிடலாம். அவளுக்கு சங்கீதப் பயிற்சி உண்டோ ?''

"நன்றாய்ப் பாடுகிறாளாம். யாரோ ஒரு பாகவதர் சிஷ்யையாம். நீ எங்கள் வழக்கங் களைக் கேலிபண்ணுகிறாயே ? எங்கள் சங்கீதம், நீங்கள் எல்லோரும் அப்பியாசஞ் செய்யும் இங்கிலீஷ் பாட்டைக் காட்டிலும் எவ்வளவு சிறந்ததாக இருக்கிறது.''

"நாங்கள் இங்கிலீஷ் பாட்டுத்தான் அப்பி யாசம் செய்கிறோமென்று உங்களுக்கு யார் சொன்னர்கள் ?''

"இதுகூட எனக்குத் தெரியாதா?''

"உங்களுக்குத் தெரிந்ததுதான இவ் வளவு!''

"ஆனல் உங்களில் யாராவது கர்னடக சங்கீதம் அப்பியாசஞ் செய்கிறார்களா?''

"செய்கிறார்கள்.''

"செய்கிறார்கள் என்று சொல்லிவிட்டால் போதுமா? யார் செய்கிறார்கள்? அப்படி கர்னாடக ஸங்கீதத்தில் தேர்ச்சிபெற்றுள்ள இந்திய கிறிஸ்தவப்பெண் யாரையாவது நீ பார்த்திருக்கிறாயா?"

"வேறொருவரையும் பார்க்கவேண்டிய அவசியம் எனக்கொன்றும் இல்லை."

"அப்படியா? ஆனால் உனக்கே தெரியும் போலிருக்கிறது. நான் கண்மூடித்தனமாக அல்லவா உரைத்துவிட்டேன். என் வார்த்தைகளை மன்னித்துவிடு. உன் பாட்டை நான் சிறிது கேட்கலாமா?" என்று கேட்டான் மகாதேவன்.

"நீங்கள் சங்கீதத்தில் நல்ல ஞானமுள்ளவரென்று என் அண்ணா சொல்லியிருக்கிறார். உங்கள் முன்பாகப் பாடுவதென்றால் எனக்குப் பயமாகவிருக்கின்றது" என்றாள் ஞானசௌந்தரி.

"எனக்காவது சங்கீத ஞானமாவது! உன் அண்ணா குறும்புக்காகச் சொல்லியிருப்பான். யாராவது நன்றாய்ப் பாடினால் கேட்டுக்கொண்டிருப்பேன். என் ஞானமெல்லாம் அவ்வளவுதான். பாடேன் கேட்கலாம்."

ஞானசௌந்தரி, உடனே உள்ளே போய் ஒரு வீணையை எடுத்துவந்து, சுருதி சேர்த்துப் பாட ஆரம்பித்தாள். வீணைத் தந்தியின் நாதமும், ஞானசௌந்தரியின் குரலும் இழைந்து ஒன்றுபட, பாட்டு காதுக்கு மிக இன்பமாக இருந்தது. இப்படிப் பாடிக்கொண்டேயிருக்கும்பொழுது அருளானந்தம் திரும்பிவந்து "ஞானசௌந்தரி நான் முன்னமேயே சொல்லி இருந்தேனே. மகாதேவன்முன்னே பாடலாமா? அவன் சங்கீதத்தில் நுட்பமான அறிவுள்ளவன். ஒவ்வொரு சங்கீத வித்துவானையும் பற்றிக் குறை சொல்லிக்கொண்டிருப்பதே அவன் வழக்கம். பெரிய பெரிய பாகவதர்களெல்லாம் படுகிற பாட்டில் நீ எங்கே?" என்றான். இதைக் கேட்டதும் ஞானசௌந்தரி பாட்டை நிறுத்திவிட்டாள்.

மகாதேவன் அருளானந்தத்தைப் பார்த்து, "இந்த சேஷ்டைதானே கூடாது. என் முன்பாக உன் தங்கை பாடுவது உனக்குப் பிரியமில்லாவிட்டால் அப்படிச் சொல்லிவிடுகிறதுதானே" என்று சொல்லிவிட்டு, ஞானசௌந்தரியைப் பார்த்து, "அவன் ஏதோ சொன்னானென்று நீ பாடுவதை நிறுத்திவிட்டாயே" என்றான்.

ஞானசௌந்தரி, "இல்லை, அப்படி ஒன்றுமில்லை. எவ்வளவு நேரம் பாடிக்கொண்டேயிருக்கச் சொன்னாலும், பாடுவதற்கு நான் தயார்தான். அண்ணா போய்வந்த காரியத்தைப்பற்றி விசாரிப்பதற்காகத்தான் நான் பாட்டை நிறுத்தினேன்" என்றாள்.

மகாதேவன், "சரி, நான் போய் வருகிறேன்" என்று சொல்லி எழுந்தான்.

அருளானந்தம், "ரொம்ப அவசரமோ! உனக்காகத்தான் ஹாஸ்டலில் எல்லோரும் சாப்பிடாமல் காத்துக்கொண்டிருக்கிறார்களோ? இரு, போகலாம்" என்றான்.

மகாதேவன், "நேரமாய்விட்டது. இன்னுமொருநாள் சீக்கிரமாய் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு அருளானந்தத்தினிடமும், ஞானசௌந்தரியினிடமும் விடைபெற்றுச் சென்றான்.

---

## ஆறாம் அதிகாரம்

### கருத்துள்ள மாணுக்கர்கள்

முன் அதிகாரத்தில் கூறிய சம்பவங்கள் நடந்து சில நாட்களாயின. பௌர்ணமி—ஹாஸ்டலில் நிலாச்சாப்பாடு. ஹாஸ்டலின் மேன்மாடித்தளத்தில் எல்லாப் பையன்களும் சாப்பிட்டார்கள். சாப்பாடானதும் அந்தத் தளத்திலேயே வேறொரு பாகத்தில் உட்கார்ந்து எல்லோரும் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களுள் துரைசாமி என்ற ஒருவன் "உதைப்பந்து போட்டி ஆட்டத்துக்கு இந்த வருஷம் எத்தனை காலேஜிகளிலிருந்து வருகிறார்களென்பது யாருக்காவது தெரியுமா?" என்று கேட்டான்.

"எத்தனை காலேஜிகளிலிருந்து எத்தனை கூட்டம் வந்தால்தான் என்ன? நமக்கு அருளானந்தமும், மகாதேவனும், ஷம்ஸுதீனும் இருக்கும் வரை, நமது காலேஜுக்கு ஜயம் நிச்சயம்" என்றான் முத்துசாமி.

சுந்தரம், "சேலம் காலேஜ் கூட்டம் வருவதாக எழுதியிருக்கிறார்களாமே"! என்றான்.

"அப்படியா!" என்றான் மகாதேவன்.

கோபாலன்:—"ஏன் சேலம் காலேஜ் என்

றல் மகாதேவனுக்கு உதைப்புதான் போலி ருக்கிறது" என்றான்.

வேங்கடராமன், "இருக்காதா? போன வருஷம் சேலம் காலேஜ் கூட்டம் போட்டி ஆட்டத்திற்கு வரமுடியாமற் போய்விட்டது. பின்னர் ஒருதரம் வந்து வேடிக்கையாக ஆடின போது நாம் பார்க்கவில்லையா! அந்தக் கூட்டத் தில் ஒவ்வொருவனும் நல்ல ஆட்டக்காரன். சென்ற வருஷம் பாலக்காடு காலேஜிலிருந்த ஷங்குண்ணியும் சேலம் காலேஜில் சேர்ந்திருக் கிறனும். இந்த வருஷம் நம் காலேஜ்பாடு இப்படி அப்படித்தான்" என்றான்.

மகாதேவன் சிறிது அலக்ஷியமாய் சூள் கொட்டினன்.

"என்னவானுலும் போன வருஷம்போல் இலகுவாய் ஜயித்துவிட முடியாது" என்றான் கோபாலன்.

மகாதேவன், "அது இருக்கட்டும். இப் போது நல்ல நிலா அடிக்கிறது. எங்கே, நாக சாமி, கொஞ்சம் பாடேன் கேட்போம்" என்றான். மற்றப் பையன்களும் நாகசாமி யைப் பாடச்சொன்னர்கள்.

கொஞ்சம் பாடத் தெரிந்தவர்களுக்கு யாராவது பாடும்படி கேட்டுக்கொள்ளும் சம யங்களில், இருமல், நெஞ்சுக்கட்டு, முதலான தொந்திரவுகள் உண்டாவது வழக்கம். அது வேஷம் என்று சிலர் சொல்வார்கள். உண்மை பாடகர்களுக்குத்தான் தெரியும்.

நாகசாமியும் பாடகர்களுடைய குலதர்மத் தைக் கைவிடக் கூடாதெனக் கருதி "எனக்கு இன்றைக்குக் கொஞ்சம் இருமிக்கொண்டிருக் கிறது. நாளை பார்த்துக்கொள்ளலாம்'" என் றான்.

"அதெல்லாம் பெரிய பாகவதரானபிறகு வைத்துக்கொள்ளலாம். சும்மா பாடு" என் றான் சுந்தரம்.

"ஏண்டா. இருமலோடு பாடிவிட்டால் நாங்கள் கொடுக்கும் சம்மானத்தைக் கொடாம லிருந்து விடுவோமோ? என்ன பிகு வேண்டி யிருக்கிறது? கிடக்கட்டும் பாடு" என்றான் முத்துசாமி.

நாகசாமியும் சிநேகிதர்களுடைய வேண்டு கோளுக்கிணங்கிப் பாட இசைந்து, "என்ன பாட்டுப் பாடட்டும்?" என்று கேட்டான்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாட்டைச் சொன்னர்கள். பிறகு அவர்கள் 'உன் இஷ்டம் போல் பாடு' என்று சொல்லிவிட்டார்கள்.

நாகசாமியும் சிறிது நேரம் சில கீர்த்தனைகள் பாடினன். பிறகு கோபாலன், "நாகசாமி! நாம் ஒரு நாள் நாடகத்தில் கேட்டோமே ஒரு பாட்டு 'மயிலிலேறி வருகிறனடி' என்று ஆரம்பிக்குமே, அந்தப் பாட்டைப் பாடு" என்றான். நாகசாமி அதையும் பாடினன். அது முடிந்ததும்,

"எந்த நாடகத்திலேடா இந்தப் பாட்டு பாடினது?" என்றான் சுந்தரம்.

"அதாண்டா, ஸ்திரீபார்ட்டு ரங்கனுதய்யங் கார் பாடினுனே ஞாபகமில்லையா?" என்றான் கோபாலன்.

நாகசாமி கோபாலனைப் பார்த்து, "என் னையே பாடச்சொல்லிக் கொண்டிருக்கிறயே. நீ ஒரு பாட்டுப்பாடேன்" என்றான்.

கோபாலன், "எனக்கு ஒரு பாட்டுக்கூட பாடத் தெரியாதே. என்ன பாட்டைப் பாடு வேன் நான்?" என்றான்.

நாகசாமி, "தெரிந்தமட்டும் பாடேன். உன் மனதுக்கு இஷ்டமானதைப் பாடேன்" என் றான்.

கோபாலன் சிறிதுநேரம் யோசித்து பிறகு, "என்னடி பெண்ணே தளுக்குக் காட்டுறய்' என்று பாடினன். பாடி முடிந்ததும் நாகசாமி, "பேஷ், பாடினல் இப்படிப்பட்ட பாட்டல்லவோ பாடவேண்டும் இன்னொரு பாட்டும் பாடு" என்று சொல்லி கோபாலன் முதுகில் ஒரு தட்டு தட்டினன்.

கோபாலன், "அப்பா போதும். நான் ஒரு பாட்டுப் பாடினதற்கு நீ மெச்சினது என் முதுகு பிளந்து போய்விட்டது. உனக்குக் கோடி நமஸ்காரம். இனிமேல் நீ இருக்கும் இடத்தில் நான் பாடவேமாட்டேன்" என் றான்.

சுந்தரம், "கோபாலா, ரங்கனுதய்யங்கார் செட்டு இன்னும் இந்த ஊரில் இருக்கிறர் களா?" என்று கேட்டான்.

"ஆம், இங்கேதான் இருக்கிறர்கள். அடுத்த சனிக்கிழமை நாம் எல்லோரும் போகலாமா?" என்றான் கோபாலன்.

முத்துசாமி, "நீ என்னதான் சொல்லு. சாமராவ் பாட்டைக் கேட்டபிறகு வேறொரு பாட்டும் சுகமில்லை" என்றான்.

நாகசாமி, "இவர்கள் பாடுகிறதெல்லாம் பாட்டாகுமா? கொஞ்சம் இழுக்கத் தெரிந்ததும் வந்து கத்த ஆரம்பித்துவிடுகிறார்கள்" என்றான்.

முத்துசாமி, "ஆமப்பா. நீ பாடத்தெரிந்தவனில்லவா? நாடகக்காரர்களை ஒப்புக்கொள்வாயா? இரண்டரைமணி நேரத்துக்குக் குறையாமல் பல்லவி பிடிக்கும் வித்துவான்களைத்தான் நீ ஏற்றுக்கொள்ளுவாய்" என்றான்.

வேங்கடராமன், "வித்துவானு, போதும் அப்பா, எனக்கு வேண்டவே வேண்டாம்" என்றான்.

நாகசாமி, "ஏன், சங்கீதவித்துவான் யார் உன்னை என்ன செய்துவிட்டார்கள்?" என்று கேட்டான்.

வேங்கடராமன், "நான் ஒருநாள் வகை தெரியாமல், மடவார்விளாகம் மகாவித்வான் பொன்னையா பாகவதர் கச்சேரிக்குப் போய் மாட்டிக்கொண்டேன். சரியாக ஒருமணி நேரம் ஆலாபனம். அப்புறம் ஒன்றரைமணி நேரம் மிருதங்கக்காரனோடு சண்டை. எழும்பிக் குதித்து, பல்லெல்லாம் திறந்துகொண்டு, பிசாசு ஆடுவதுபோல் மண்டையை உருட்டித் தொடைவீங்கும்படி தாளம்போட்டுக்கொண்டு திரும்பித் திரும்பித் 'தாரகா, தாரகா' வென்று கதறினர்."

"ஏண்டா உனக்கு அவ்வளவு கசப்பாயிருந்தால் எழுந்து வந்து விடுகிறதுதானேடா?" என்றான் முத்துசாமி.

வேங்கடராமன், "அதை ஏன் கேட்கிறாய்? ஏதோ பாட்டுக் கச்சேரி ரொம்ப நன்றாய் இருக்குமென்று எல்லோரும் சொல்கிறார்களேயென்று நான் முன்னாலே போய் வித்துவான்களுக்குச் சமீபத்தில் உட்கார்ந்துவிட்டேன். கொஞ்சநேரம் சரியாக இருந்தது. பிற்பாடு பாகவதருக்கு மண்டை வலிப்பு ஆரம்பித்துவிட்டது. மெள்ள எழுந்திருந்து வந்துவிடலாமென்றுதான் பார்த்தேன். என்னைச் சுற்றி உட்கார்ந்திருந்த ரஸிகர்கள் நான் எழுந்திருந்தால் அவர்களுடைய ஆனந்தம் கெட்டுப் போய்விடுவது போல் என்னைத் தடுத்து, "யாரது எழுந்திருக்கிறது உட்காரும் ஐயா" என்றும், "ஒருவர் பாடினால் கேட்டுக்கொண்டிருப்பதற்குக் கூட வலிக்கிறதோ" என்றும் பலவிதமாகச் சொல்லி என்னை எழுந்திருக்க விடாமல் அடைத்துவிட்டார்கள். நான் சிவனேயென்று உட்கார்ந்து தீர்த்தேன்" என்றான்.

இதைக் கேட்டதும் எல்லோரும் சிரித்தார்கள்.

முத்துசாமி, "ஆனால் மற்றவர்களெல்லோரும் சங்கீதத்தை நன்றாய் அனுபவித்தவர்கள் போலிருக்கின்றதே" என்றான்.

"அனுபவமா? அவர்களுக்கும் பாகவதரோடுகூடப் பேய் பிடித்துவிட்டது. தாளம் போட்டுக்கொண்டும், மண்டையை உருட்டிக் கொண்டும், "பேஷ், பேஷ்" என்றும், "அடா, அடா" என்றும் சொல்லிக்கொண்டு ஆவேசம் பிடித்தவர்கள்போல் ஆடினார்கள். பாகவதரோ விடமாட்டேன் என்கிறார். 'ரிகரி ரிகரி' என்று ஒருதரம் ஒரு மூச்சுப்பிடித்தார். கண்ணை உருட்டிக்கொண்டு மண்டையைத் தூக்கி ஒரு பத்து நிமிஷம் அதேதான். எங்கே பாகவதருக்கு சுவாசம் நின்று போய்விடுமோ என்று பயமாக இருந்தது."

"பேஷ், பேஷ். என்ன ஞானவான்? எல்லாருக்கும் உன்னைப் போலத்தான் சங்கீதத்தில் ருசி இருக்கவேண்டும்" என்றான் துரைசாமி.

மகாதேவன், "நீ கல்யாணம் செய்துகொண்டிருக்கிறாயே. அந்தப் பெண்ணுக்கு சங்கீதம் வருமா?" என்றான்.

வேங்கடராமன், "நான்தான் முன்னமேயே உன்னிடம் சொல்லியிருக்கிறேனே. அவளுக்கு யாரோ ஒரு பாகவதர் சிக்ஷையாம். நன்றாய்ப் பாடுகிறாளாம். அகத்துக்கு வந்ததும் அதையெல்லாம் மறக்கடிப்பதுதான் என் முதல் வேலை."

துரைசாமி, "ஏன்? பாட்டுப் பாடினால் எப்போதாவது ஸ்வரம் பாடும்போது உன் பெண்டாட்டிக்கு மூச்சு நின்று போய்விடும் என்ற பயமோ?" என்றான்.

"நமது சங்கீதத்திற்குச் சமானம் வேறு ஒன்றுமில்லையென்று கிறிஸ்தவப் பெண்கள் கூட கர்னாடக சங்கீதம் அப்பியசிக்கிறார்கள். அப்படியிருக்க, நீ பாடத்தெரிந்த பெண்ணைக் கூடப் பாட்டை மறக்க அடிக்கிறேன் என்கிறாயே?" என்றான் மகாதேவன்.

நாகசாமி, "கிறிஸ்தவப்பெண் யார் கர்னாடக சங்கீதம் அப்பியாசம் செய்கிறது?" என்று கேட்டான்.

மகாதேவன், "நமது அருளானந்தம் வீட்டுக்குப் போயிருந்தேன். அவன் தங்கை கர்னாடக சங்கீதம் அப்பியாசம் செய்கிறாள்; வீணையை வைத்துக்கொண்டு பாடினாள்; வெகு நேர்த்தியாக இருந்தது" என்றான்.

"அப்படியா! நானும் ஒரு நாள் வருகிறேன், என்னை அழைத்துப் போகிறாயா?" என்று கேட்டான் நாகசாமி.

மகாதேவன், "அதற்கென்ன ஒரு நாள் போவோம்" என்றான்.

துரைசாமி, "அதெல்லாம் இருக்கட்டும். வீணாகப் பேசிப் பேசி பொழுது போகிறது. நாகசாமி! இன்னொரு பாட்டுப்பாடு" என்றான். மற்ற மாணாக்கர்களும் நாகசாமியை மறுபடியும் பாடச்சொல்லி வற்புறுத்தினார்கள்.

"இப்போ என்னடா பாட்டு. நடுராத்திரி ஆகிறது" என்றான் நாகசாமி.

"ஆனால் ஆகட்டும். இன்னும் ஒரு அரை மணி ஏதாவது இரண்டு துக்கடாக்கள் பாடேன்" என்றான் முத்துசாமி.

"என்ன துக்கடா?" என்று கேட்டான் நாகசாமி.

"லோட்டாப் பாட்டுப் பாடு" என்றான் துரைசாமி.

"அது வேண்டாமடா. ஒரு தெம்மாங்கு பாடு" என்றான் ஸ்ரீநிவாசன்.

"அதெல்லாம் வேண்டாம், ஒரு பார்சி பாடு" என்றான் சுந்தரம்.

"பார்சியும் வேண்டாம். அரபியும் வேண்டாம். ஒரு தேவாரம் பாடு" என்றான் கோபாலன்.

"இப்படி இவர்கள் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே நாகசாமி, மெள்ள ஒரு அகவல் எடுத்தான். எல்லோரும் பேச்சை நிறுத்திவிட்டு ஆனந்தமாய்ச் சிறிது நேரம் கேட்டார்கள். அகவல் முடிந்ததும் முத்துசாமி, "இது யாரடா பாடினது. எங்கேயோ கேட்ட ஞாபகமாயிருக்கின்றதே" என்றான்.

கோபாலன், "உனக்கு ஞாபகம் இவ்வளவுதானா? போன வருஷம் பாரிஜாத புஷ்பஹரண நாடகத்தில் கிருஷ்ணவேணி பாடினது ஞாபகமில்லையா?" என்று கேட்டான்.

"ஆமடா. இப்பொழுதுதான் ஞாபகத்துக்கு வந்தது. நீ என்னதான் சொல்லு, சங்கீதத்துக்கு ஸ்திரீ சாரீரந்தான் பொருந்தும்" என்றான் முத்துசாமி.

கோபாலன், "மறுபடியும் அவள் இந்த வருஷமும் இவ்வூருக்கு வந்து நாடகம் போடப் போகிறாளாம்" என்றான்.

"அப்படியா! பேஷ் பேஷ். எப்போ வருகிறாள்" என்று கேட்டான் முத்துசாமி.

"உனக்கு என்ன 'பேஷ்' தான். நீ என்னவோ இரவும் பகலுமாய் உடம்பைக் கூட கவனிக்காமல் படித்துக்கொண்டிருக்கிறாய் என்று நினைத்து, உன் அப்பா உனக்குப் பை பையாகப் பணம் அனுப்புகிறார். நீயோ நாடகத்துக்கும் பாட்டுக் கச்சேரிக்கும் போய்க் கொண்டு பொழுது போக்கிக்கொண்டிருக்கிறாய்" என்றான் ஸ்ரீநிவாசன்.

"என்ன கருத்தடா அப்பா! நீதானே எனக்குப்புத்தி சொல்லவேண்டும்" என்றான் முத்துசாமி.

"நாமெல்லோரும் இதில் ஒன்றுதான். சாமிநாதன் ஒருவன்தான் கருத்தாய்ப் பாடம் படிக்கின்றவன். பார். சாப்பாடானதும் அவன் ரூமில் போய் உட்கார்ந்து விளக்கடியில் ஜபம் ஆரம்பித்துவிட்டான்" என்றான் துரைசாமி.

முத்துசாமி, "நமக்கெல்லாம் சேர்த்துத்தான் அவன் படித்துவிடுகிறானே. அந்த மாதிரி உழைப்பாளி ஒருவனுக்கு மேலிருந்தால் நமது ஹாஸ்டல் தாங்காது" என்றான்.

வேங்கடராமன், "இன்றைப் பொழுது சுகமாய்ப் போய் விட்டது. நான் போய்ப் படுத்துக் கொள்ளுகிறேன்" என்று சொல்லி எழுந்தான்.

மகாதேவன், "சீக்கிரம் போய்த் தூங்கு. சொப்பனத்தில் உன் பெண்டாட்டி வந்தால் உடனே பாட்டுக் கற்றுக்கொள்வதை நிறுத்திவிடச் சொல்லு" என்று சொல்லிக்கொண்டு கூடப் புறப்பட்டான்.

மற்ற பையன்களும் எழுந்து படுக்கைக்குப் போனார்கள்.

ஸ்ரீமத் ராமாயண வினாவிடை.—எழுகாண்டங்களும் சிறுவர் சிறுமிகளும் களிப்புடன் வாசிக்கும்படி மிகவும் அழகாய் எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. படங்களுடன் விலை ரூ. 1-8-0. விவேகபோதினி சந்தாதாரருக்கு மட்டும் விலை ரூ. 1-4-0.

# மார்க்கண்டேயன்

MARKANDEYA

அங்கம் ஒன்று    களம் ஒன்று

இந்திரன் தர்பார்

இந்திரன் ஸகல வைபவங்களுடன் கொலு வீற்றிருத்தல். ஒருபுறம் மற்ற திக்பாலகர்கள். ஒருபுறம் சூன்யமான நான்கு ஆஸனங்கள். அக்கினி முதலிய திக்பாலகர்கள் தத்தம் பெயர் சொல்லி வணங்கி ஆஸனத்தமர்தல்.

இந்திரன் :—திக்பாலகர்களே ! தேவதைகளே! உங்களுலகங்களில், அவரவரதிகாரத்திற் குட்பட்ட ஸகல கிருத்யங்களும் நிர்விக்னமாய் நடைபெறுகின்றனவா? ஸ்வர்க மத்ய பாதாளமென்னும் மூவுலகங்களும், நமது ஆட்சியின்கீழ் சுபிக்ஷமாயிருக்கின்றனவா ?

திக்பா—ஒருவர் :—சசிபதே ! எங்களைத் தாங்கள் அடிக்கடி வரவழைத்து, எங்கள் உத்தியோகத்தின் தர்ம நுட்பங்களை வற்புறுத்தி விசாரித்து வருவதாலும், நமது குலாசார்யரான ஸ்ரீப்ருஹஸ்பதி பகவானுடைய நல்லுபதேசங்களாலும் எங்களுக்கிட்ட கட்டளை செவ்வனே நடைபெறுகின்றது.

இந்தி :—ஸந்தோஷம் தேவதைகளே !

ராகம்-ஹம்ஸத்வனி.    தாளம்-ரூபகம்.

பல்லவி

தருமமிதன்றோ நம் (தருமம்)

அனுபல்லவி

பரமனருளால் கிடைத்த உயர்ந்த
பதவியிலகந்தை யுதவாது நம் (தருமம்)

சரணம்

அடிக்கடி நாமனைவருங்கூடி
கடமையீதென்று கலந்துறவாடி
திடமொடு குருதிருவடி நாடி
திரிலோகமும் செம்மைபெற ஆளும் (தருமம்)

நமது உத்தியோகப் பெருமையையும் செல்வச் செருக்கையும் கொண்டு அஹங்கரித்து நமது தருமங்களிலிருந்து வழுவாதிருக்கவும், தேசகாலங்களை யனுசரித்து, நமது புத்தி யுக்தி சக்திகளை திருத்திக் கொள்ளவும், நாம் அடிக்கடி ஒன்று கூடவேண்டுவதவசியம்.

(ப்ருஹஸ்பதி, ம்ருகண்டு, நாரதர் முதலிய மஹரிஷிகளின் பிரவேசம்—எல்லோரும் எழுந்து நிற்க,

இந்தி :—ஆசார்ய! தேவர்ஷே! மஹர்ஷிகளே! இந்திரன் அபிவாதனஞ் செய்கின்றேன்.

தேவர்களெல்லோரும்—வந்தனஞ்செய்கின்றோம்.

மஹர்ஷிக ளெல்லோரும்—ஜயவிஜயீபவ! மங்களானி ஸந்து.

இந்தி :—(ஆஸனங்களைக் காட்டி) இப்படி வீற்றிருக்கவேண்டும்.

ப்ருஹ :—நீங்களெல்லோரும் உட்காருங்கள். புருஹூத ! எல்லோரும் க்ஷேமந்தானே.

இந்தி:—தங்களனுக்ரஹமும், சதுர்முகன் லக்ஷ்மீகாந்தன், கைலாஸபதியாகிய மும்மூர்த்திகளின் கிருபா கடாக்ஷமும் பரிபூர்ணமா யிருக்கும்பொழுது, எங்களுக்கு க்ஷேமக்குறைவு முண்டோ ?

மாதலி :—ப்ரபோ ! உத்தரவை எதிர்பார்த்து ஊர்வசி காத்திருக்கின்றாள்.

இந்தி :—நாரதமஹர்ஷே ! நல்ல ஸங்கீதத்துடன் பரத சாஸ்திரத்தை நடிக்கச் செய்வதில் தங்களுக்கும் குதூஹலந்தானே ?

நாரதர் :—அதற்கென்ன தடை ? பரதமென்றால், பாவம், ராகம், தாளம் மூன்றுங் கலந்தது. அதில் பாவமாவது, ஈசுவர குணங்களைத் தானனுபவிப்பதுடன், ஸாஹித்ய ரூபமாய் வெளியிலும் அபினயித்துக் காட்டுவது; ராகமென்பது, லக்ஷணந்தவறாது கண்டத்திலிருந்தெழும் நாதம்; தாளமென்பது காலப்ரமாணம். இதிலும் ஸங்கீதமொன்றே ஸகல ப்ரபஞ்சங்களையும் பரவசப் படுத்தும்.

ராகம்-கல்யாணி.    தாளம்-தேசாதி.

பல்லவி

ஸங்கீதகலைக்கு ஸமமாகுமோ
ஸரஸகதைகளும்—ஸகலகலைகளும் (ஸங்கீத)

அனுபல்லவி

பங்கேருஹத்தன் பங்கஜாக்ஷ நேத்ரன்
பசுபதியின் மனத்தைப் பரவசப்படுத்தும் (ஸங்கீத)

சரணம்

புலிகரடிசிங்கம் பொங்கராவுந்தந்தம்
பொல்லாங்குதவிர்த்து உல்லாஸங்கொண்டாடும்
மலையொடுமரங்கள் நலிந்துருகியோடும்
மானதிகள்குவிந்து மலையெனமலக்கும் (ஸங்கீத)

இப்படி ஸங்கீதத்தின் பெருமையே பெரிது. அத்துடன் சாஸ்த்ரீயமான நிர்த்தனமுஞ் சேர்ந்தால் கேட்கவும் வேண்டுமோ? திவ்யமாய்க் கொஞ்சம் ஸத்காலக்ஷேபம் நடக்கட்டும்.

இந் :—திடீரென்றெழுந்து தன் மார்பிலிருக்கும் மாலையையும் ஸபாமண்டபத்தையும் சுற்றிப் பார்த்துத் திடுக்கிட்டவன்போல்—குருமூர்த்தே! நாரதஸ்வாமீ ! இருங்கள்; என்ன இது ! இருந்தாற்போல் இருந்து எனது வாடாத மந்தார புஷ்பமாலையும் வாடுகின்றது. அந்தகாரத்தை யறியாத இந்த ஸபாமண்டபமும் இருள் சூழ்ந்தாற்போ லாகிவிட்டதே ! இதற்கென்ன காரணம்? ஆசார்ய ! அம்ருதபானம் செய்த எனக்

கும் மதிமயக்கமேற்படுமா? அல்லது ஸ்வப்னம் தானோ?

பிருஹு:—(யோசித்து) ஆகண்டல! தர்மத்திற் குறைவுபட்ட ஒரு பூலோகவாஸி தான் செய்த தபோபலத்தால் நம்முடன் இந்த ஸபையில் கலந்திருப்பதாய் ஊகிக்கின்றேன்.

இந்:—யார் அது! என்ன தர்மக் குறைவாயிருக்கலாம்?

பிருஹு:—(மிருகண்டுவைப் பார்த்துவிட்டு தனிமையில்) இந்த மிருகண்டுவோ மஹா தபோதனர். இவர் மனம் நோகும்படி இந்த ஸபையில் இவருடைய பாபத்தைப் பஹிரங்கமாய் நான் வெளியிட வேண்டியதாயிருக்கிறதே.........ஆனாலும் என்ன செய்யலாம்? ஒருவிதமாய்ப் பொதுவாய்ச் சொல்லிவிடுவோம்.

இந்:—முக்காலமும் உணர்ந்த குலகுரோ! என்ன! தாங்கள் கூட இவ்வளவு யோசனையிலாழ்ந்துவிட்டீர்கள்! என் மனக் கலக்கத்தை சீக்கிரம் மாற்றுங்கள்:

பிருஹு:—ஸஹஸ்ராக்ஷ! பூலோகத்தில் க்ருஹஸ்தாச்ரமத்தை அடைந்தும் 'புத்' என்னும் நரகத்திலிருந்து தாரகம் செய்து வைக்கும் புத்ரப் பேறில்லாத மனிதன், தன்பிறப்பில் ஒரு பெருங் குறைவுள்ளவனாவான்.

"மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"

எவ்வளவு செல்வமும் கீர்த்தியு முடையவனாயிருந்தாலும் எவ்வளவு தபசைச் செய்தவனாயிருந்தாலும் பொதுவாக எந்த ஸபையிலும், சிறப்பாக நமது தேவஸபையிலும் பிரவேசிக்க அர்ஹனல்ல, இப்பொழுது நீ காண்பது அவ்வசுபத்தின் அறிகுறியே யாகும்.

இந்:—அத்தகைய துர்ப்பாக்கியசாலி யாராயிருந்தாலும் இந்த க்ஷணம் இங்கிருந்து மரியாதையாய் வெளியேறக்கடவர். (மிருகண்டு மெல்ல ஸபையைவிட்டு நழுவுதல்) குருநாத! இந்த அபசகுனத்தால் என் மனம் கலங்கியிருப்பதால் இன்று இத்துடன் ஸபையைக் கலைக்கின்றேன். (நாரதரைத் தவிர மற்ற யாவரும் நிஷ்க்ரமித்தல்.)

நாரதர்:—(தனிமை) ஜகதீசனுடைய திருநாமங்களைக் கீர்த்தனஞ்செய்து என்னுடைய நாக்குத் தழும்பேறி, அதனால் கரும்பும், கற்கண்டும், தேனும், தேவ அமிர்தமும் இனிப்பில்லாததாகி விட்டன. என் கையிலிருக்கும் இந்த வீணையின் நாதமானது ஸ்தாவர ஜங்கமாத்மகமான ஸகல பூதங்களிலும் அந்தர்யாமியாய் ஈசுவரனொருவன் இருக்கிறான் என்பதை ஸூசிப்பிக்கின்றது. ஆனதாலல்லவா என்னைப் பதினன்கு உலகமும் பரம பாகவதனென்று புகழ்கின்றது. எனக்கு அண்ட கோடிகளில் ஒரு சத்ருவும் கிடையாது. ஆனாலும் ஒருநாளைக் கொருகலகம் விளைக்காவிட்டால் எனது தலை வெடித்து விடுமென்று ஒரு விதி இருப்பதால், துஷ்டர்களின் கொட்டத்தை அடக்கி அவர்களைத் திருத்துவதிலும், ஸாதுக்களுக்கு நன்மையைச் செய்வதிலும், ஸர்வேசுவரனது திருவருள் விலாசத்தை உலகங்களுக்கு மெய்ப்பிப்பதிலும் அந்த விதியை எனக்கு அனுகூலமாகச் செய்துகொண் டிருக்கிறேன். உலகம் இவ்வுண்மையை அறியாமல் 'நாரத: கலஹப்பிரிய:' என்று சொன்னாலும் நம் கடமையை நாம் செய்து முடிக்கவேண்டும். இப்பொழுது இந்த மிருகண்டுவோ பரமஸாது. பாவம்! ஜாதகரீதியாய்ப் பிள்ளை இல்லாதவர். ஆனல் வெகு பிடிவாதக்காரர். இவரைக் கொஞ்சம் தூபம் போட்டுவிட்டுப்போனால் ஒரு நாள் காலக்ஷேபமாகும்.

மிருக:—(பிரவேசித்து, துக்கத்துடன் தனிமை) ஹா! நானேன் இங்கு வந்தேன்? மூவுலகிலும் தடை இல்லாமல் சஞ்சரிக்கும் சக்தி வாய்ந்த தவத்தைத்தான் ஏன் செய்தேன்? துரதிர்ஷ்ட சாலியான என்னை இம்மட்டில் மன்னித்து விட்டார்களே. ஹா! கஷ்டம்! புத்திரஸம்பத்தில்லாத என் ஜன்மத்தைச் சுட்டாலென்ன?

நார:—மிருகண்டு மஹர்ஷே! வாருங்கள். ரொம்ப மனதைக் கஷ்டப்படுத்திக் கொள்ளாதேயுங்கள். எனக்குக் கூட ரொம்ப வருத்தமாய்த் தானிருக்கிறது. ஆனாலும் இந்த இந்திரன், சந்திரன், எமன் இவன் எல்லாருக்கும் அகம்பாவம் தலைமட்டம் கொண்டுபோச்சு. மரியாதையாம்! வெளியேறக் கடவராம்! அவன் நம்மிடம் எவ்வளவு மரியாதையாய் நடந்துவிட்டான்? நினைக்க நினைக்க வயிற்றை ஸங்கடப்படுத்துகிறதன்றோ. உங்களைச் சொன்னாலென்ன; நம்மைச் சொன்னாலென்ன!

மிரு:—மஹர்ஷே! அவர்களைச் சொல்ல என்ன குற்றம்! நம்முடைய பாபம் இன்றைக்கு இங்கு வந்து அவமானப்படும்படி விதித்தது.

நார:—விதிக்கவாவது! கொதிக்கவாவது! நம்முடைய தபஸென்ன! யோக்யதை என்ன! நீங்கள் இதற்காகக் கவலைப்படவேண்டாம். புத்திர ப்ராப்தியை உத்தேசித்துக் கொஞ்சகாலம் தபஸ் செய்யுங்கள். ஈசுவரன், ஆச்ரிதர்களைக் கைவிடமாட்டார். அவசியம் தங்களுக்கு அதிசீக்கிரத்தில் புத்திர ஸம்பத்தை அளிப்பார். அதன் பிறகு இவர்கள் கொட்டம் அடங்கும் வழியைச் சிந்திப்போம்; போய் வாருங்கள்.

உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார் கடையரே கல்லா தவர்.

## சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்
## CHILDREN'S & LADIES' PAGES

### வைத்தியன் பெண்

(ஸர் வால்டர் ஸ்காட் எழுதியது)

THE SURGEON'S DAUGHTER
(BY SIR WALTER SCOTT)

அதற்கு அக்கனவான், "பெயர் தெரிய வேண்டிய அவசியமேயில்லை. ஆயினும் பிறகு சாவகாசமாகத் தெரிவிக்கிறேன்" என்று சொல்லிவிட்டு, வெளியேபோய் வண்டியை யனுப்பிவிட்டு ஹோட்டலுக்கு நடந்துசென்றார்.

டாக்டர் க்ரே உள்ளே சென்றார். அவருடைய மனைவி வந்து, "அந்த ஸ்திரீக்கு கிறிஸ்தவர்கள் பேசும் பாஷையே தெரியாதுபோலிருக்கிறது; அன்றியும், அவள் கறுப்பான முகமூடியொன்று போட்டுக்கொண் டிருக்கிறாள்; அதை எடுக்க முயன்றால் சீறுகிறாள்; அவளை வைத்துக்கொண்டு என்னசெய்கிறது?" என்றாள்.

"அவள் அதை அணிந்துகொள்வதனால் உனக்கென்ன நஷ்டம்?" என்றார் டாக்டர்.

"என்ன நஷ்டமா? யோக்கியமாயுள்ள ஸ்திரீ எவளாவது பிரஸவிக்கும்போது முகமூடி இட்டுக்கொண் டிருந்ததுண்டா?" என்றாள் அவர் மனைவி.

"கிடையாதுதான். ஆனாலென்ன? யோக்கியர்களுக்குப் பிரஸவிக்க உதவுவது போலவே அயோக்கியர்களுக்கும் பிரஸவிக்க உதவி செய்யவேண்டுவது கடவுள் விதித்த கடமையல்லவா? இச் சமயத்தில் அந்த ஸ்திரீயின் இஷ்டத்துக்கு மாறுபாடாக நாம் நடந்துகொண்டால், அவள் பிராணனுக்கே ஹானி ஏற்பட்டாலும் ஏற்படும்; ஆகையினால் பொறுத்துக் கொண்டிரு!" என்றார் டாக்டர்.

பிறகு டாக்டர் அந்த ஸ்திரீ படுத்திருந்த அறையினுட் சென்று, அவள் முக மூடியை இட்டுக்கொண்டிருப்பதில் தமக்குச் சிறிதும் ஆக்ஷேபணையில்லை என்று சொல்லிவிட்டு வெளியே வந்து, ஜீன் ஸிம்ஸனை அந்த ஸ்திரீக்குப் பணிவிடை செய்யவும், பெக் தாம்ஸனுடைய பெண் பேட் ஜேமிஸனை சிசுவுக்குப் பால் கொடுக்கும் தாதியாகவும், அலிஸன் ஜாப்பினுடைய பேத்தியை அந்த ஸ்திரீ வந்ததனால் ஏற்பட்ட அதிகவேலைகளைச் செய்யவும் அமர்த்தி, ஓடிவந்த மூன்று கிழவிகளுக்கும் பக்ஷபாதமின்றி உதவிபுரிந்தார்.

அன்றிரவு ஒரு மணிக்கு டாக்டர் அக்கனவான் இறங்கியிருந்த ஹோட்டலுக்குச் சென்று, அவருக்குப் பிள்ளைக் குழந்தை பிறந்ததில் தமக்கு மிகுந்த சந்தோஷ மென்றும், குழந்தையும் தாயும் சௌக்கிய மென்றும் தெரிவித்தார். அக்கனவான் அச்சங்கதியைக் கேட்டுக் களிப்படைந்ததாக அவர் முகக்குறிகளினால் காணப்பட்டாலும், அவர் வார்த்தைகளினால் அதை வெளியிடாமல், "சரி, நாளைய தினம் காலையிலேயே என் குழந்தையைக் கிறிஸ்துவின் அருளுக்குப் பாத்திரனாக்க வேண்டும்!" என்றார். "அதற்கென்ன அவசரம் இப்போது?" என்று டாக்டர் சொன்னதற்கு, அவர், "ஐயா! எங்கள் கொள்கை வேறு. நான் காத்தோலிக் கிறிஸ்தவன். அச் சீமாட்டி புறப்படும்படியான நிலைமையை யடையு முன்னமே நான் இவ்வூரை விட்டுப் புறப்படவேண்டுமாதலால், என் குழந்தையை உடனே கிறிஸ்துவின் அருளுக்குப் பாத்திரனாக்க விரும்புகிறேன். இப் பாழும் ஊரில் காத்தோலிக் குரு ஒருவர் கிடைப்பாரா?" என்றார்.

அக்காலத்தில் காத்தோலிக் என்று வெளிப்படையாகச் சொல்லிக் கொள்பவர்கள் மீது—அதிலும் காத்தோலிக் குருமார்களின் மீது—சந்தேகங்கொண்டு இராஜத் துரோகிகளாகப் பாவித்துத் தண்டிப்பது அத்தேசத்தில் வழக்கமா யிருந்தபடியால், டாக்டர் க்ரே, "இவ்வூரில் மிஸ்டர் குட்ரிச் என்னும் ஒரு காத்தோலிக் கிறிஸ்தவர் இருக்கிறார். அவர் குருவாயிருக்கும் தகைமை பெற்றவர் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள்; ஆனால் அதன் உண்மை எனக்குத் தெரியாது" என்று வெகு சாவதானமாகச் சொன்னார். அது கேட்ட கனவான் புன்னகைகொண்டு, "உமது சாவதானம் மெச்சத்தக்கது. நாளைக் காலையில் அவரை யழைத்துக்கொண்டு தங்கள் வீட்டுக்கு வருகிறேன்" என்றார். டாக்டர்

விடைபெற்றுக்கொண்டு தமது இல்லத்துக்குச் சென்றார்.

மறுநாட்காலையில் அக்கனவான் மிஸ்டர் குட்ரிச் என்பவரை அழைத்துக் கொண்டு வந்து, அந்தச் சீமாட்டி யிருந்த அறைக்குட் சென்றார். சிறிது நேரம் கழித்து அவர்களிருவரும் வெளியே வந்தார்கள். அக்கனவான் மிஸ்டர் குட்ரிச்சுக்கு விடைகொடுத் தனுப்பி விட்டு, தாம் அவசரவேலையாக வேறோரிடத்துக்குப் போகவேண்டி யிருந்ததாகவும், பத்து நாட்களில் திரும்பிவந்து அச்சீமாட்டியை அழைத்துப் போவதாகவும் டாக்டரிடம் சொன்னார். அப்போது டாக்டர், "ஐயா! தாயாரையும் குழந்தையையும் என்ன பெயரிட்டழைப்பதென்று சொல்லவேணும்" என்றார். "குழந்தையின் பெயர் ரிச்சேர்டு" என்றார் கனவான். "சரி! அது கிறிஸ்தவப் பெயர் ஆயிற்று. வீட்டுப்பெயர் தெரியவேண்டுமே" என்றார் டாக்டர். "ஓ! வீட்டுப்பெயர் வேண்டுமா? இவ்வூரின் பெயராகிய மிடில்மாஸ் என்பதுதான் வீட்டுப் பெயரா யிருக்கட்டுமே. குழந்தையின் பெயர் ரிச்சேர்டு மிடில்மாஸ், என் பெயர் மாத்யூ மிடில்மாஸ். இந்தப் பணத்தைக் கொண்டு தாயாருக்கும் குழந்தைக்கும் வேண்டியதை வாங்கிக் கொடுங்கள். நான் பத்து நாட்களில் திரும்பிவந்து அவர்களை அழைத்துக்கொண்டு போகிறேன்" என்று சொல்லி, நூறுபவுன் நோட் ஒன்றை டாக்டர் கையிற் கொடுத்தார். பிறகு அக்கனவான் திரும்பவும் அவ்வறையினுட் சென்று சிறிதுநேரம் அச்சீமாட்டியினிடம் பேசிக்கொண்டிருந்துவிட்டு வெளியே வந்து டாக்டரிடம் விடைபெற்றுச் சென்றார்.

அக்கனவான் சென்றபின், டாக்டர் அவருடைய நடத்தையை யுன்னி யுன்னி, அவர் பத்து நாட்களில் திரும்பிவருவாரோ வென்பதைப் பற்றிச் சந்தேகமுற்று, அவ்வேழை ஸ்திரீயை அவர் கைவிடாம லிருக்கவேண்டு மென்று கடவுளைப் பிரார்த்தித்து, தம்மா லியன்ற உதவியை அச்சீமாட்டிக்குச் செய்ய வேண்டுவது தமது கடமை யெனத் தீர்மானித்தார்.

நான்கு நாட்கள் கழித்து மிஸ்டர் குட்ரிச் என்னும் காத்தோலிக் குருவானவர் வந்து அச்சீமாட்டியுடன் சிறிது நேரம் பேசிக்கொண் டிருந்துவிட்டு மிகுந்த அதிருப்தியைக் காட்டிய முகக்குறிகளுடன் அவ்வீட்டைவிட் டகன்றார். பிறகு அவர் திரும்பி வரவேயில்லை. அவருடைய நடத்தையையும், அச்சீமாட்டியினுடைய நடத்தையையும் கவனித்த டாக்டர் க்ரே அச்சீமாட்டி யூதமதத்தைச் சேர்ந்தவளா யிருக்கவேண்டுமென்றும், கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த அக்கனவான் மீது காதல்கொண்டு அவரால் வஞ்சிக்கப்பட்டாளென்றும், அவரது இஷ்டப்படி அவள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவச் சம்மதிக்கவில்லை யென்றும் தீர்மானித்து யூதமதஸ்தர்களுக்குத் தகாத போஜன பதார்த்தங்களை அவளுக்குக் கொடுக்காமல் தாம் வேறு காரணங்களைச் சொல்லித் தடுக்கவேண்டுமென்றும், இவ்வுண்மையைத் தமது மனைவி ஊகித்தால், அச் சீமாட்டியைத் தங்கள் வீட்டில் ஒரு நிமிஷம் வைத்துக் கொள்ளவும் தமது மனைவி சம்மதிக்கமாட்டாளாகையினால், அவள் அதை ஊகிப்பதற்கு இடமுண்டாகாமல் பார்த்துக்கொள்ளவேண்டு மென்றும் நிச்சயித்தார்.

அக்கனவான் சொல்லிப்போன கெடுவான பத்து நாட்களும் கழிந்தன; ஆனால் அவர் வரவில்லை. அப்பத்து நாட்களும் மிகுந்தகவலையுற்றவளாயிருந்த அவள், அக்காலம் கடந்தபின் பொறுமை யிழந்து கடைசியாகச் சந்தேகத்தினாலும் பயத்தினாலும் வருந்தத் தொடங்கினாள். முன்னமே சந்தேகமுற்றிருந்த டாக்டர் க்ரே அவர் வார்த்தையைக்கண்டு பெரிதும் கவலையுற்று, அவரைக் குறித்து அச்சீமாட்டியை விசாரிக்க முயன்றார். ஆனால் அவளுக்கு ப்ரேஞ்சு பாஷை நன்றாய்த் தெரியாத காரணத்தினாலோ அல்லது மர்மத்தை வெளியிட இஷ்டமில்லாத காரணத்தினாலோ, டாக்டர் க்ரே அவளிடமிருந்து யாதொன்றும் அவரைப் பற்றித் தெரிந்துகொள்ள முடியவில்லை.

அக்கனவான் வராமற் போனால் அந்த ஸ்திரீயை வைத்துக்கொண்டு என் செய்வது என்று டாக்டர் கவலையுற்றார். ஊரில் வம்பு பேசத் தொடங்கிவிட்டார்கள். ஆனால் டாக்டர் அவைகளைச் சிறிதும் இலக்ஷியஞ் செய்யாமல் தமது வேலையைச் செய்துகொண்டு பொறுமையுடன் அக்கனவான் வரவை எதிர்பார்த்துக்கொண் டிருந்தார்.

அச் சிமாட்டி பிரஸவித்து ஒரு மாதககாலம் கழிந்தது. ஒருநாள் டாக்டர் நோயாளிகளைப் பார்த்து வருவதற்காகப் பத்துமைல்தூரம் சுற்றிவிட்டுத் திரும்பித் தமது வீட்டுக்குவந்த போது, வாசலில் நான்கு குதிரைகள் கட்டிய அஞ்சல் வண்டி நின்றதைக்கண்டு, அக் கனவான் திரும்பிவந்திருக்க வேண்டுமென்று நிச்சயித்து, தாம் அக்கனவான்மீது அநியாயமாய்க் கெட்ட அபிப்பிராயங் கொண்டதற்காகத் தம்மைத் தாமே இகழ்ந்துகொண்டு, குதிரையைவிட்டுக் கீழேயிறங்கி உள்ளே சென்றார்.

வீட்டுக்குள் பலர் கோபமாய்ப் பேசும் கூச்சல் கேட்டது. டாக்டர் ஆச்சரியத்துடன் வேகமாய் உள்ளே சென்றார். முன் கூடத்தில் இரண்டு அந்நியர்களுடன் தமது மனைவியும், தாம் வேலைக்கு அமர்த்திய பெண்பிள்ளைகளும் வாதாடிக்கொண் டிருந்ததைக் கண்டார். அவ் விரண்டு அந்நியர்களில் ஒருவர் கறுத்த மேனியும் கடுமையாகவும் கூர்மையாகவும் நோக்கும் கண்களு முடையவராயிருந்தார்; மற்றொருவர் தடித்தவராயும் தைரியமும் கருணை யின்மையும் விளங்கும் முகத்தை யுடையவராயு மிருந்தார். அவருடைய சொக்காயின் உட்பைகளிலிருந்து இரண்டு கைத்துப்பாக்கிகள் ஆடம்பரமாய் வெளியே நீட்டிக்கொண் டிருந்தன.

டாக்டர் கூடத்துக்குள் நுழைந்தவுடன், அவரது மனைவி துப்பாக்கிகள் வைத்துக்கொண்டிருந்த மனிதனை நோக்கி, "இதோ டாக்டர் வந்துவிட்டார். அவரிடம் என்ன சொல்லப் போகிறீரோ, அதைத்தான் பார்க்க வேண்டும்!" என்றாள். "சொல்வதென்ன? இந்தக் கட்டளைப்படி நடக்க வேண்டுமென்று தான் அவரிடமும் சொல்வேன்!" என்றான் அம்மனிதன். டாக்டர் அவ்வூரில் சட்டந் தெரிந்த மிஸ்டர் லாபோர்டு என்பவரை அவசரமாய் அழைத்து வரும்படி ஒரு ஆளை யனுப்பிவிட்டு, அம்மனிதனை யணுகி, "ஐயா! தாங்கள் யார்? தங்களுக்கு வேண்டியதென்ன?" என்று கேட்டார்.

அம்மனிதன் தான் அரசனது தூதனென்று சொல்லி, தன் கையிலிருந்த அரசன் கட்டளையை அவரிடம் காட்டினான். கட்டளை பிழையறத் திருத்தமாகவே யிருந்தது. அது கண்டு டாக்டர், "ஐயா! இந்த கட்டளையில் இராஜத் துரோகிகளான ரிச்சேர்டு ட்ரேஷாம் என்பவரையும், ஜிலியா டி மான்சாடா என்னும் ஸ்திரீயையும் பிடித்து வரும்படி கண்டிருக்கிறது. நான் அரசனது ரெஜிமெண்டில் சர்ஜன் வேலையி லிருந்தவன்; அரசனிடத்தில் உண்மையான அன்புடையவன். அப்படியிருக்க, இராஜத் துரோகிகளைப் பிடிக்க என் வீட்டுக்குத் தாங்கள் வந்த காரணமென்ன? நான் இராஜத்துரோகிகள் ஒளிந்திருக்க இடங் கொடுப்பேனென்று எண்ணினீர்களோ தாங்கள்?" என்று கூறினார். அப்போது இராஜ தூதன், "ஐயா! நீங்கள் சொல்வதெல்லாம் உண்மையாயிருக்கலாம். ஆனால் இக்கட்டளையிற்கண்ட ஜிலியா டி மான்சாடா என்னும் ஸ்திரீ தங்கள் வீட்டிலிருக்கிறாள். இதோ நிற்பவர் அவளுடைய தகப்பனாரான மாத்தியாஸ் டி மான்சாடா!" என்றான். அது கேட்டு டாக்டர், "ஐயா! ஒரு மாதத்துக்கு முன் ஒரு ஸ்திரீ என் வீட்டுக்கு வந்து ஒரு குழந்தையைப் பெற்றாள். இந்தக் கட்டளையில் கண்டிருக்கும் ஸ்திரீ அந்த ஸ்திரீயேயாகில், தாங்கள் இக் கட்டளையை நிறைவேற்றுவதில் எனக்குச் சிறிதும் ஆக்ஷேபணையில்லை. ஆனால் ஒன்றுமட்டும் சொல்வேன். அவள் இப்போது மெலிந்த நிலைமையில் இருக்கிறாள். ஆகையினால், அவளை இப்போது கைது செய்து சிறைச்சாலையில் அடைத்தால், அவள் மரிப்பது நிச்சயம். தகப்பனாராகிய அவர் பார்த்துக்கொள்ளட்டும்!" என்றார்.

இதற்குள் சட்டந்தெரிந்த மிஸ்டர் லாபோர்டும் வந்து கட்டளையைப் படித்துப் பார்த்து, இராஜத் துரோகிகளைக் கைது செய்வதற்கு ஆக்ஷேபணை செய்தால், பெருங் கெடுதி சம்பவிக்குமென்று டாக்டரிடம் தெரிவித்தார். இராஜதூதனும், "ஐயா! தாமதித்தால் மற்றொரு துரோகியைப் பிடிப்பது அசாத்தியமாகப் போகும். சீக்கிரம் முடிவு செய்யுங்கள்!" என்றான். "கட்டளையில் கண்ட ஸ்திரீ என் வீட்டிலிருப்பவள்தானென்று தெரிந்துகொண்டு, பிறகு அவளைக் கைது செய்யுங்கள்!" என்றார் டாக்டர்.

மாத்தியாஸ் டி மான்சாடாவும், டாக்டரும், மிஸ்டர் லாபோர்டும் அச்சிமாட்டி யிருந்த அறைக்குட் சென்றார்கள். இராஜதூதன்

வெளியே நின்றான்; அச்சீமாட்டி ஒரு நாற்காலியினண்டையில் மண்டிபோட்டு உட்கார்ந்து முகத்தைப் பெரிய துணியினால் மூடிக்கொண்டிருந்தாள். அவள் தேகம் பயத்தினால் நடுங்கிக் கொண்டிருந்தது. மாத்தியாஸ் டி மான்சாடா அவள் இருகைகளையும் பிடித்துத் தூக்கி முகமூடியைக் கிழித்தெறிந்து, ஏதோ பாஷையில் ஒரு வார்த்தையினால் கடுமையாகத் திட்டினார்.

அவள் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாய்ப் பெருகின. டாக்டர் அவளை, "இவர் தங்கள் தகப்பனார்தாமோ?" என்று கேட்டார். அவள் ஆமென்று மெல்லச் சொன்னாள். பிறகு அவள் தகப்பனார் ஏதோ பாஷையில் ஏதோ சொன்னார். அவள் வணக்கமாய் அறையைவிட்டு வெளியே செல்லத் தொடங்கினாள். அது கண்ட டாக்டர் அவள் தகப்பனாரை நோக்கி, (மறதியினால் அவளுக்குத் தெரிந்த பிரேஞ்சு பாஷையிலேயே), "ஐயா! தாயையும் பிள்ளையையும் பிரிப்பது தருமமா?" என்று கேட்டார். அது கேட்ட அச் சீமாட்டி அலறிக்கொண்டு கீழே விழுந்தாள். மாத்தியாஸ் டி மான்சாடா கோபத்துடன், "முறைப்படி விவாகமாகாதபோது பிறந்த பிள்ளையை இவ்வூரார்தாம் காப்பாற்றவேண்டும்!" என்றார்.

அது கேட்ட டாக்டர் சினங்கொண்டு, "ஐயா! இந்தப் பேச்சு என்னிடத்தில் செல்லாது. இக்குழந்தையின் போஷணை முதலியவற்றிற்கு இதன் பாட்டனாரான நீர்தாம் ஏற்பாடு செய்யவேண்டும்" என்றார். அதன்மேல் மாத்தியாஸ் டி மான்சாடா, "ஐயா! உமக்கு இஷ்டமானால் அக்குழந்தையை நீரே வளர்க்கலாம். அதன் போஷணைக்கு வேண்டிய பொருளைக் கொடுக்கிறேன்!" என்றார். டாக்டர் தம்மால் அக்குழந்தையை வளர்க்க முடியாதென்று சொல்ல உத்தேசித்துப் பிறகு அச்சீமாட்டிக்கு இஷ்டமானால் தாம் அக்குழந்தையை வளர்ப்பதாகச் சொன்னார். மாத்தியாஸ் டி மான்சாடா தமது மகளிடம் ஏதோ சொன்னார். அதுகேட்ட அவள் வேகமாய் டாக்டரையணுகி அவரது கையைப் பிடித்து அதை முத்தமிட்டுத் தன் கண்ணீரை அதன் மீது பெருகவிட்டு, "ஐயா! தயாள குணமுடையவரே! தாயையும் குழந்தையையும் காப்பாற்றிவிட்டீர்!!" என்று சொல்லிக் கதறினாள்.

அதற்குள்ளாக மாத்தியாஸ் டி மான்சாடா அக்குழந்தையின் போஷணைக்காக ஆயிரம் பவுனுக்கு நோட்டுகளை எண்ணி மிஸ்டர் லாபோர்டு கையிற் கொடுத்தார். பிறகு அவர் டாக்டரை நோக்கி, "ஐயா! அத்தியாவசியமானால் தாங்கள் அக்குழந்தையின் செலவுக்கு வேண்டிய பணம் எவ்வளவென்று மட்டும் கண்டு எனக்கு லண்டனிலுள்ள இந்த பாங்கியின் மேல்விலாசத்துக்கு எழுதலாம். ஆனால் அனாவசியமாக எனக்கு எழுதாதேயுங்கள்!" என்று சொல்லி, அந்தப் பாங்கியின் மேல்விலாசமுள்ள ஒரு சீட்டை டாக்டர் கையிற் கொடுத்தார்.

பிறகு மாத்தியாஸ் டி மான்சாடா ஏதோ தமது மகளிடம் சொல்ல, அவள் உள்ளே சென்று தன் குழந்தையை எடுத்துவைத்துக்கொண்டு சிறிது நேரம் மனமாரக் கதறிவிட்டுப் பிறகு வெளியே வந்து டாக்டரையணுகி, "ஐயோ! என் குழந்தையை விட்டுப் பிரிகிறேனே!" என்று சொல்லொணாத் துயரத்துடன் அலறி, தன் கையில் ஜ்வலித்துக்கொண்டிருந்த வைரமோதிரத்தைக் கழற்றி டாக்டர் கையிற் கொடுத்துவிட்டு அவர் வீட்டை விட்டு வெளியே சென்று வாசலில் நின்ற வண்டியிலேறிக்கொண்டாள். மாத்தியாஸ் டி மான்சாடாவும் அவ்வண்டியிலேறிக்கொண்டார். இராஜதூதன் ஒரு குதிரை மீதேறி வண்டியுடன் சென்றான். அங்கு கூடியிருந்த யாவரும் தத்தம் வீடுபோய்ச் சேர்ந்தனர்.

---

அகர்.— பர்மாதேசத்தின் கீழைக் கோடியில் ஷான் தேசங்களின் மலைப்பிரதேசங்களில் வாழும் ஜாதியார். திபேத்திய—பர்மியரைச் சேர்ந்தவர்போலும். சீனர்களுடன் கொள்வன கொடுப்பன செய்பவர். அவர்களைப்போலவே தலைமயிர் தரிப்பர். சீன பாஷை பேசுவர், உயர்ந்த உருவமும் கருமை நிறமுமுள்ளவர். பருத்தியும் அபின் செடியும் பயிராக்குவர். வீடுகள் தரைமட்டத்துக்கு மேல் உயர்ந்த இடங்களில் சிறியவையாகக் கட்டப்படும். இவர்கள் நாய் தின்பர்; இறந்தோரைப் புதைப்பர்; சமச் சடங்குகளில் எருமைகளைக் கொல்வர்; விவாகமுறை வெகு புராதனமானது. வேறு ஜாதியிலும் விவாகம் செய்வர். அகோர் என்னும் ஜாதியாரினும் வேறுபட்டவர்.

---

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு காமுறுவர் கற்றறிந் தார்.

## வர்த்தமானக் குறிப்புகள்

### NEWS & NOTES

பூர்வ இந்தியாவும் புதிய துருக்கியும் :— "துருக்கியில் இப்போது முஸ்டாபா கெமால் பாஷா, விவாகமானது யாவர்க்கும் கிடைக்கும்படி செய்ய வேண்டுவதை இராஜ்ய பரிபாலனத்தின் நோக்கங்களில் ஒன்றாகச் செய்திருப்பது அமெரிக்காவில் ஒவ்வொருவருடைய பணப்பையிலும் ஒருவிதக் கிளர்ச்சியை உண்டு பண்ணுமென்பது நிச்சயம். (துருக்கியின் ஒரு பாகமான) அனடோலியாவிலுள்ள முனிசிபாலிட்டிகளின் கௌன்ஸில்கள் இனிமேல், கலியாணப் பெண்கள் (கலியாண காலத்தில்) இரண்டே இரண்டு ஆடைகளையும் ஒரேவொரு ஜோடிப்பு (Set) (சோபா, நாற்காலி, பீரோ முதலிய) மரசாமான்களையும் பெறுவதுடன் திருப்தியடைய வேண்டுமென்றும் கட்டளையிட்டிருக்கிறார்கள். (கலியாண காலத்தில்) சுற்றத்தார்கள் பரிசுகள் கொடுப்பது கூடாதென்றும் கலியாணப் பெண்ணை அலங்கரிப்பதற்குத் தங்க நகைகள் போடக் கூடாதென்றும் விதித்திருக்கிறார்கள். சங்கீதத்துக்கு அளவு ஏற்படுத்தியிருப்பதுடன், கலியாணத்தில் ஊர்வலம் வரும்போது மூன்று வண்டிகள்தாம் வரலாமென்றும் விதித்திருக்கிறார்கள். இவ்வாறு செலவுகளைக் குறைப்பது உண்மையாக இருப்பதற்காக, அவர்கள் கலியாணப் பெண்ணை அவளுக்குக் கிடைத்த வரிசைகளை (யாவரும் பார்க்கும்படி) பொது ஜனக் கண்காட்சியில் வைப்பதுபோல் வைக்கும்படி கட்டாயப்படுத்துகிறார்கள்."—ந்யூயார்க்டைம்ஸ்.

* * * * *

அமெரிக்காவில் ஒரு ஜில்லாவின் செலவு ஜாப்தா :—அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் ஒரு ஜில்லாவின் செலவு பின்வருமாறு செய்யப்படுகிறதென்று வாஷிங்டன் நகரத்து ஈவினிங் ஸ்டார் என்ற பத்திரிகையிலிருந்து தெரியவருகிறது.

ஜில்லா கவர்ன்மெண்டார் செலவு 1 டாலர் (100 சென்டுகள்) எனக் கொண்டால் :—

குழந்தைகளின் கல்விப்பயிற்சிக்காக—35 சென்டுகளும்; குடிகளின் பிராணனையும் சொத்தையும் காப்பதற்காக—அதாவது, போலீஸ் டிபார்ட்மெண்டுக்காகவும், தீயை யவிப்பதற்காக (Fire) தீ டிபார்ட்மெண்டுக்காகவும்—17 $\frac{3}{10}$ சென்டுகளும்; தருமங்களுக்கும் வேறு ஸ்தாபனங்களின் பரிபாலனத்துக்காகவும்-13 $\frac{1}{2}$ சென்டுகளும்; தெருக்களுக்கும் நகரத்தின் இராஜ பாட்டைகளுக்கும் — 10 $\frac{2}{5}$ சென்டுகளும்; குடிகளின் தேகசௌக்கியத்தைப் பாது காப்பதற்காகவும், ஜில்லாவானது ஆரோக்கியத்துக்குரிய நிலைமையி லிருக்கும்படி பாதுகாப்பதற்காகவும்-9 $\frac{7}{10}$ சென்டுகளும்; விளையாட்டுகளுக்காக-5 சென்டுகளும்; பொதுவாக கவர்ன்மெண்ட் செலவுக்கு-5 $\frac{7}{10}$ சென்டுகளும்; சில்லரை விஷயங்களுக்கு $\frac{3}{5}$ சென்டும்; சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் சம்பளம் வகையறாவுக்காக 2 $\frac{3}{5}$ சென்டுகளும் போனவருஷத்தில் செலவழிக்கப்பட்டன.

மற்ற இனங்களைக் காட்டிலும் குழந்தைகளின் பயிற்சிக்கே தொகை அதிகமாகச் செலவழிந்திருப்பது இங்கு கவனிக்கத்தக்கது.

கூட்டுறவு இயக்கம் நம் இராஜதானியில் சென்ற நான்கு வருஷங்களில் அடைந்த அபிவிருத்தியைக் காட்டும் படம்.

| விபரம் | 1919-20 | 1923-24. |
|---|---|---|
| கிராம சங்கங்கள், சென்ட்ரல் பாங்குகள், யூனியன்கள் | 5,195 | 10,089 |
| அச் சங்கங்களின் அங்கத்தினர் சங்கியை | 3,29,886 | 6,16,628 |
| வேலை செய்துவரும் தொகை | 394 லக்ஷம் | 839 லக்ஷம் |
| வசூலான பங்குத் தொகை | 50 " | 114 $\frac{1}{2}$ " |
| சேஷம நிதி | 17 $\frac{1}{2}$ " | 38 " |
| மேற்படி சங்கங்களுக்குக் கடனாகக் கொடுக்க தொகை. .... | 628 " | — |



மகாத்மா காந்தி
(இவரது ஷஷ்டி பூர்த்தி 2-10-29-ல் நாடெங்கும் கோலாகலத்துடன் கொண்டாடப்பட்டது.)